**நி.நி.பி.ந.க.எண்.க(ம)மா-1/ 1546/ 2017**

**தீர்மானஎண்.378/2021** **நாள்:09-03-2021**

**பெருநகர சென்னை மாநகராட்சி - நிதி நிர்வாகப் பிரிவு - பாரத ஸ்டேட் வங்கியிடமிருந்து ரூ.450.00 கோடி மிகைப் பற்று பெறப்பட்டது - ரூ.450.00 கோடியிலிருந்து ரூ.550.00 கோடி மிகைப்பற்று வரம்பினை உயர்த்தி அரசாணை பெறப்பட்டது - மிகைப்பற்றினை பெறுவதற்கு அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சியால் இந்தியன் வங்கி, கனரா வங்கி மற்றும் ஐசிஐசிஐ வங்கிகளில் பெறப்பட்ட நீண்ட கால கடன் மற்றும் மிகைப்பற்றிற்கான வட்டி விகிதம் அதிகமாக இருந்த காரணத்தினால், பாரத ஸ்டேட் வங்கியிடம் குறைந்த வட்டி விகிதத்தில் மேற்கண்ட கடன்கள் அனைத்தையும் மாற்றவும் மற்றும் வருவாய் மற்றும் இதர செலவினங்களை சமாளிக்க மிகைப்பற்றிற்கான உச்ச வரம்பினை ரூ.350.00 கோடியிலிருந்து ரூ.450.00 கோடியாக உயர்த்த அரசின் அனுமதி வேண்டி பெருநகர சென்னை மாநகராட்சி கேட்டுக்கொண்டது.

அதனடிப்படையில், மேற்கண்ட நீண்ட கால கடன் மற்றும் மிகைப்பற்று உச்சவரம்பினை ரூ.350.00 கோடியிலிருந்து ரூ.430.00 கோடி வரை உயர்த்தி அரசாணை(ப).எண்.351/ந.நி.&கு.வ (மாந.1) துறை, நாள்: 05.09.2017 ன் மூலம் அனுமதி பெறப்பட்டது. அதனைத் தொடர்ந்து அரசாணை(ப).எண்.392/ ந.நி.&கு.வ (மாந.1) துறை, நாள்: 23.09.2017ல் மிகைப்பற்று உச்சவரம்பினை ரூ.430.00 கோடியிலிருந்து ரூ.450.00 கோடியாக உயர்த்த அனுமதி அளிக்கப்பட்டது.

அரசாணை(ப).எண்.351/ந.நி.&கு.வ (மாந.1) துறை, நாள்: 05.09.2017 மற்றும் அரசாணை(ப).எண்.392/ ந.நி.&கு.வ (மாந.1) துறை, நாள்: 23.09.2017 அரசாணைகளில் பெறப்பட்ட அனுமதியின் அடிப்படையில் இந்தியன் வங்கி, கனரா வங்கி மற்றும் ஐசிஐசிஐ வங்கிகளில் பெறப்பட்ட நீண்ட கால கடன் தொகை ரூ.696.22 கோடியும், மிகைப்பற்று தொகை ரூ.350.00 கோடியும் பாரத ஸ்டேட் வங்கிக்கு மாற்றம் செய்யப்பட்டது. மேலும், ரூ.350.00 கோடியிலிருந்து ரூ.450.00 கோடியாக உயர்த்தப்பட்ட மிகைப்பற்று உச்ச வரம்பினை பெருநகர சென்னை மாநகராட்சியால் பெறப்பட்டது.

அரசாணை(ப).எண்.459/ ந.நி.&கு.வ (மாந.1) துறை, நாள்: 29.12.2020ல் பெருநகர சென்னை மாநகராட்சி கூடுதலாக ரூ.100.00 கோடி மிகைப்பற்றினை பாரத ஸ்டேட் வங்கியிடம் பெறுவதற்கு அனுமதித்து மிகைப்பற்று உச்சவரம்பினை ரூ.450.00 கோடியிலிருந்து ரூ.550.00 கோடியாக உயர்த்தி ஆணையிடப்பட்டுள்ளது. இதன் தொடர்ச்சியாக இவ்வலுவக 06.01.2021 நாளிட்ட கடிதம் வாயிலாக மிகைப்பற்று உச்சவரம்பினை ரூ.450.00 கோடியிலிருந்து ரூ.550.00 கோடியாக உயர்த்தி அனுமதி வழங்குமாறு பாரத ஸ்டேட் வங்கியிடம் பெருநகர சென்னை மாநகராட்சியால் கேட்டுக்கொள்ளப்பட்டது.

எனவே, இதுகுறித்து தெரிவித்துக்கொள்வது யாதெனில், பாரத ஸ்டேட் வங்கி ஏற்கனவே ரூ.500.00 கோடி வரை மிகைப்பற்று வரம்பினை அனுமதித்து அதற்கென ஒப்பந்தமும் போடப்பட்டுள்ளது. எனினும் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு அரசாணை(ப).எண்.351/ ந.நி.&கு.வ (மாந.1) துறை, நாள்: 05.09.2017 மற்றும் அரசாணை(ப).எண்.392/ ந.நி.&கு.வ (மாந.1) துறை, நாள்: 23.09.2017ல் கண்ட அரசாணையில் ரூ.450.00 கோடி மட்டுமே மிகைப்பற்று வரம்பு அனுமதித்த காரணத்தினால் ரூ.450.00 கோடி மட்டுமே பெருநகர சென்னை மாநகராட்சியால் பெறப்பட்டது. தற்போது, அரசாணை(ப).எண்.459/ ந.நி.&கு.வ (மாந.1) துறை, நாள்: 29.12.2020ல் கூடுதலாக ரூ.100.00 கோடி மிகைப்பற்று வரம்பினை உயர்த்தி ரூ.450.00 கோடியிலிருந்து

ரூ.550.00 கோடி வரை மிகைப்பற்று பெற அனுமதித்துள்ளது. பெருநகர சென்னை மாநகராட்சியின் தற்போதைய கடும் நிதிச்சுமையினை கருத்திற்கொண்டு நிதிநிலைமையினை கையாள இவ்வலுவலக 21.01.2021 நாளிட்ட கடிதம் வாயிலாக ரூ.50.00 கோடி மிகைப்பற்று பெறப்பட்டது.

தற்போது, பாரத ஸ்டேட் வங்கி அரசாணை(ப).எண்.459/ ந.நி.&கு.வ (மாந.1) துறை, நாள்: 29.12.2020 அரசாணைக்கிணங்க, மிகைப்பற்று வரம்பினை உயர்த்தவும் மற்றும் நீண்ட கால கடன்களை மறுஆய்வு செய்யவும் நிதி ஏற்பாடு கடிதம் மற்றும் ஒப்பந்த பத்திரங்களை சமர்ப்பித்துள்ளது. அதன் விவரம் கீழ்கண்டவாறு :-

(Rs.in Crores)

| FACILITY | Existing | Proposed |
|---|---|---|
| **FUND BASED LIMITS :** | | |
| a. Working Capital – Cash Credit ** | 500.00 | 550.00 |
| b. Term Loan outstanding as on 31.12.2020 | 576.01 | 576.01 |
| **Total Fund Based Limits** | **1076.01** | **1126.01** |
| **TOTAL LIMITS** | **1076.01** | **1126.01** |
| **** BG sublimit of Rs 100 Crs with Nil margin** | | |

எனவே, அரசாணை(ப).எண்.459/ ந.நி.&கு.வ (மாந.1) துறை, நாள்: 29.12.2020ல் ரூ.450.00 கோடியிலிருந்து ரூ.550.00 கோடியாக உயர்த்தப்பட்ட மிகைப்பற்று வரம்பினை பெறுவதற்கு,

1. கூடுதலாக ரூ.50.00 கோடி (ரூபாய் ஐம்பது கோடி மட்டும்) மிகைப்பற்றினை பாரத ஸ்டேட் வங்கி, ஓவர்சீஸ் கிளையில் பெறுவதற்கும்.
2. பாரத ஸ்டேட் வங்கி, ஓவர்சீஸ் கிளையில் ஏற்கனவே பெறப்பட்ட மிகைப்பற்று தொகை ரூ.50.00 கோடி (ரூபாய் ஐம்பது கோடி மட்டும்)-க்கு பின்னேற்பு அனுமதியும்.

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி - நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 08.03.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"மிகைப்பற்றினை பெறுவதற்கு, 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி - நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

********

**வ.து.ந.க.எண்.அ1/1085/ 2021**

**தீர்மானஎண்.379/2021** **நாள்:09-03-2021**

**பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - வருவாய்துறை (த.இ) - 31.07.2023 அன்று வயதுமுதிர்வு காரணமாக பணியிலிருந்து ஓய்வு பெறவுள்ள திரு.எ.நடராஜன், உதவி வருவாய் அலுவலர், வருவாய்துறை (த.இ) அவர்கள் ஆணையர் அவர்களுக்கு சமர்ப்பித்த விண்ணப்பகடிதம் - மாநகராட்சி பணியில் சேருவதற்கு முன்பாக சென்னை மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் மூலமாக 10(a)(1)ன்படி இணை பதிவாளர், கூட்டுறவு சங்கங்கள் (பொது விநியோகமுறை), சென்னை அலுவலகத்தில் 22.08.1988 அன்று பிற்பகல் முதல் 06.06.1990 முற்பகல் வரை தொடர்ந்து 1 ஆண்டு 9 மாதங்கள் 16 நாட்கள் தட்டச்சராக பணிபுரிந்த காலத்தினை தகுதியுள்ள காலமாக பாவித்து ஓய்வூதிய கணக்கீட்டிற்கு சேர்த்து கொள்ள கோரியுள்ளார் - தகுதியுள்ள பணிக்காலம் குறித்து தமிழ்நாடு ஓய்வூதிய விதிகள், 1978ன் விதி எண் 11 (1)ல் வரையறுக்கப்பட்டவையின்படி பெருநகர சென்னை மாநகராட்சியில் தனியர் பணிபுரிந்துள்ள காலத்துடன் ஓய்வூதிய கணக்கீட்டிற்கு மட்டும் தகுதியுள்ள காலமாக பாவித்து சேர்த்து கொள்ள அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, வருவாய்துறை தலைமையிடத்தில் பணிபுரியும் திரு.எ. நடராஜன் உதவி வருவாய் அலுவலர் அவர்கள் 31.07.2023 அன்று வயதுமுதிர்வு காரணமாக பணியிலிருந்து ஓய்வு பெறவுள்ளார்.

ஆணையர் அவர்களுக்கு தனியர் 24.02.2021 நாளிட்டு சமர்ப்பித்துள்ள கடிதத்தில் மாநகராட்சி பணியில் சேருவதற்கு முன்பாக சென்னை மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் 10(*a*)(*1*)-ன்படி கூட்டுறவுதுறையின் (*Co-operative Department*) துணைபதிவாளர் (பொது விநியோகமுறை), திருவல்லிகேணி, சென்னை-5 அலுவலகத்தில் 22.08.1988 அன்று பிற்பகல் முதல் 02.05.1990 பிற்பகல் வரையும் மற்றும் கூட்டுறவு துறையின் இணைபதிவாளர் (பொது விநியோகமுறை), மயிலாப்பூர், சென்னை-4 அலுவலகத்தில் 03.05.1990 அன்று முற்பகல் முதல் 06.06.1990 முற்பகல் வரையும் என 1 ஆண்டு 9 மாதங்கள் 16 நாட்கள் தட்டச்சராக தொடர்ந்து பணிபுரிந்துள்ளதாக தெரிவித்து அவ்வாறு தட்டச்சராக பணியாற்றியமைக்கு துணைபதிவாளர் மற்றும் பணியாளர் அலுவலர், இணை பதிவாளர் அலுவலகம், கூட்டுறவுதுறை (*Co-operative Department, Public Distribution System)* அவர்களின் 15.06.1990 நாளிட்ட பணிச்சான்று (*Service Certificate*) எண் *RC 6384/90 OE 2*ஐ சமர்ப்பித்துள்ளார்.

மேலும், தனியரின் கடிதத்தில் 22.08.1988 அன்று பிற்பகல் முதல் 06.06.1990 அன்று முற்பகல் வரை தொடர்ந்து 1 ஆண்டு 9 மாதங்கள் 16 நாட்கள் பணியாற்றிய தட்டச்சர் பதவியானது ஓய்வூதியம் பெறக்கூடிய *(Pensionable post)* பதவியாகும் என்று குறிப்பிட்டு அப்பணிக்காலத்தில் 23.08.1989ல் நிலுவையிலுள்ள ஈட்டிய விடுப்பு கணக்கிலிருந்து 15 நாட்கள் ஈட்டிய விடுப்பு ஒப்படைப்பு செய்து அதற்கான விடுப்பூதியம் பெற அனுமதியளிக்கப்பட்டதாகவும் தெரிவித்து அதற்கான கூட்டுறவு சங்கங்களின் துணைப்பதிவாளர் (பொவிதி), திருவல்லிக்கேணி-*2*, சென்னை-5 அவர்களின் செயல்முறை ஆணை எண் ந.க.எண் 3125/89 நாள் 31.08.1989ன் நகலினை சமர்ப்பித்துள்ளார்.

தனியர் 31.07.2023 அன்று வயதுமுதிர்வு காரணமாக பணியிலிருந்து ஓய்வு பெறவுள்ளதால், மாநகராட்சி பணியில் சேருவதற்கு முன்னதாக சென்னை மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் 10(*a*)(*1*)-ன்படி தமிழ்நாடு அரசின் கூட்டுறவுதுறையின் துணைபதிவாளர் (பொதுவிநியோகமுறை), திருவல்லிகேணி, சென்னை-5 அலுவலகத்தில் 22.08.1988 அன்று பிற்பகல் முதல் 02.05.1990 பிற்பகல் வரையும் மற்றும் கூட்டுறவு துறையின் இணைபதிவாளர் (பொது விநியோகமுறை), மயிலாப்பூர், சென்னை-4 அலுவலகத்தில் 03.05.1990 அன்று முற்பகல் முதல் 06.06.1990 முற்பகல் வரையும் தொடர்ந்து 1 ஆண்டு 9 மாதங்கள் 16 நாட்கள் தட்டச்சராக பணிபுரிந்த காலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சியில் பணிபுரிந்துள்ள காலத்துடன் ஓய்வூதிய கணக்கீட்டிற்கு தகுதியுள்ள காலமாக பாவித்து சேர்த்து கொள்ள அனுமதிக்குமாறு தனியர் கடிதத்தில் கோரியுள்ளார்.

தனியர் சென்னை மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் மூலமாக 10.02.1994 அன்று தட்டச்சராக பெருநகர சென்னை மாநகராட்சி பணியில் சேர்ந்து அதன்பின் உதவியாளர், உரிமம்

ஆய்வாளர், வரிமதிப்பீட்டாளர் போன்ற பதவி உயர்வுகளை பெற்று தற்போது உதவி வருவாய் அலுவலராக 29.12.2012 முற்பகல் முதல் வருவாய்துறை தலைமையிடத்தில் பணிபுரிந்து வருகிறார். தனியர் வகித்து வரும் உதவி வருவாய் அலுவலர் பதவியானது பெருநகர சென்னை மாநகராட்சியில் வகுப்பு 2ன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளது.

தனியர் வரும் 31.07.2023 அன்று பிற்பகல் வயதுமுதிர்வு காரணமாக பணியிலிருந்து ஓய்வு பெறவுள்ளார். இன்றைய தேதியில் தனியர் மீது எந்தவொரு ஒழுங்கு நடவடிக்கையும் நிலுவையில் இல்லை என்று தெரிவித்து கொள்ளப்படுகிறது.

இது குறித்து சமர்ப்பித்து கொள்வது யாதெனில், தகுதியுள்ள பணிக்காலம் குறித்து தமிழ்நாடு ஓய்வூதிய விதிகள், 1978ன் விதி எண் 11(1)ல் கீழ்கண்வாறு வரையறுக்கப்பட்டுள்ளது.

***"11. Commencement of qualifying services:-*** (1) Subject to the provisions of these rules, qualifying service of a Government servant shall commence from the date he takes charge of the post to which he is first appointed either substantively or in an officiating or temporary capacity. In the case of a Government servant retiring on or after the first October, 1969, temporary or officiating service in the pensionable post whether rendered in a regular capacity or not shall count in full as qualifying services even if it is not followed by confirmation".

மேலும், *10(a)(1)*-ன்படி தமிழ்நாடு அரசின் கூட்டுறவுதுறையின் துணைபதிவாளர் (பொது விநியோகமுறை), திருவல்லிகேணி, சென்னை-5 அலுவலகத்தில் 25 வயது கடந்த நிலையில் தனியர் பணியில் சேர்ந்துள்ளதால் அப்பணிக்காலங்களில் தனியருக்கு பாய்சர்வீஸ் இல்லாததாலும், தனியர் தொடர்ந்து 22.08.1988 அன்று பிற்பகல் முதல் 06.06.1990 முற்பகல் வரை தொடர்ந்து 1 ஆண்டு 9 மாதங்கள் 16 நாட்கள் தட்டச்சராக பணியாற்றியுள்ளதாலும் தமிழ்நாடு ஓய்வூதிய விதிகள், 1978ன் விதி எண் 11 (1)ல் வரையறுக்கப்பட்ட தகுதிகளை பெற்றவராக உள்ளார்.

எனவே, தமிழ்நாடு ஓய்வூதிய விதிகள், 1978ன் விதி எண் 11(1)ல் வரையறுக்கப்பட்டுள்ளவைகளின் அடிப்படையில் தனியர் மாநகராட்சி பணியில் சேருவதற்கு முன்னதாக சென்னை மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் 10(*a*)(*1*)-ன்படி தமிழ்நாடு அரசின் கூட்டுறவுதுறையின் துணைபதிவாளர் (பொது விநியோகமுறை), திருவல்லிகேணி, சென்னை-5 அலுவலகத்தில் 22.08.1988 அன்று பிற்பகல் முதல் 02.05.1990 பிற்பகல் வரையும் மற்றும் கூட்டுறவு துறையின் இணைபதிவாளர் (பொது விநியோகமுறை), மயிலாப்பூர், சென்னை-4 அலுவலகத்தில் 03.05.1990 அன்று முற்பகல் முதல் 06.06.1990 முற்பகல் வரையும் தொடர்ந்து 1 ஆண்டு 9 மாதங்கள் 16 நாட்கள் தட்டச்சராக பணிபுரிந்த காலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சியில் தனியர் பணிபுரிந்துள்ள காலத்துடன் ஓய்வூதிய கணக்கீட்டிற்கு மட்டும் தகுதியுள்ள காலமாக பாவித்து சேர்த்து கொள்ள சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 04.03.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"ஓய்வூதிய கணக்கீட்டிற்கு மட்டும் தகுதியுள்ள காலமாக பாவித்து சேர்த்து கொள்ள சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

************

**பொ.து.ந.க.எண்.இ11/ 7328/ 2021**

**தீர்மானஎண்.380/2021** **நாள்:09-03-2021**

**பணியமைப்பு -பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - மண்டலம்-4 - திரு.ஜி.வெங்கடேச பெருமாள், அலுவலக உதவியாளர், பணி எண். 126183 அவர்களை மருத்துவ குழு அறிக்கையின்படி, 07.01.2021 அன்று பிற்பகல் முதல் மருத்துவ இயலாமை ஓய்வில் சென்றதாக கருதி ஆணை வழங்க அனுமதி.**

திரு.ஜி.வெங்கடேச பெருமாள், அலுவலக உதவியாளர் என்பவரின் 28.10.2020 நாளிட்ட கடிதத்தில், தனக்கு கண்பார்வை தெரியாதது மற்றும் புற்றுநோய் (*WHPPLE*) அறுவை சிகிச்சை செய்து கொண்டு தொடர் சிகிச்சை பெற்று வருவதாகவும், தன்னால் தொடர்ந்து பணி செய்ய முடியவில்லை என்பதால், தனக்கு மருத்துவ இயலாமை பணி ஓய்வு வேண்டி ஆணையர் அவர்களுக்கு மனு அளித்துள்ளார்.

தலைமை மருத்துவர், அரசு ஸ்டான்லி மருத்துவமனை அவர்களின் 07.01.2021 நாளிட்ட மருத்துவ அறிக்கையில் மருத்துவ குழு அவர்களால் திரு.ஜி.வெங்கடேச பெருமாள் என்பவருக்கு *“He has applied for Unfit to continue in his job citing visual disability. He has referred to Department of ophthalmology and based on their opinion he has be Old Macular Choroiditis C 100% visual disability. Hence he is Unfit for the Job.”* என மருத்துவ அறிக்கையில் சான்றளிக்கப்பட்டுள்ளது.

செயலாளர், பெருநகர சென்னை மாநகராட்சி சிப்பந்திகள் கூட்டுறவு சங்கம் அவர்களின் 25.01.2021 நாளிட்ட கடிதத்தில், தனியர் உறுப்பினர் இல்லை என சான்று வழங்கப்பட்டுள்ளது.

காவல்துறை துணை காண்காணிப்பாளர்/விழிப்பு அலுவலர் அவர்களின் 04.02.2021 நாளிட்ட கடிதத்தில், திரு.ஜி.வெங்கடேச பெருமாள், அலுவலக உதவியாளர், மண்டலம்-*4* அவர்கள் மருத்துவ இயலாமை ஒய்வில் செல்வதால், அன்னார் மீது இன்றைய தேதியில் பெருநகர சென்னை மாநகராட்சி விழிப்பு குழுமத்தில் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாவட்ட வருவாய் அலுவலர்/மண்டல அலுவலர்-4 அவர்களின் 19.01.2021 நாளிட்ட கடிதத்தில், திரு.ஜி.வெங்கடேச பெருமாள், அலுவலக உதவியாளர் அவர்கள் 15.05.2000 அன்று சென்னை மாநகராட்சி பணியில் அலுவலக உதவியாளராக சேர்ந்து, தனியர் 20 ஆண்டுகள் பணியாற்றிய தனியருக்கு அப்பதவியில் 15.05.2000 முதல் பணிவரன்முறை மற்றும் 15.05.2001 முதல் தகுதிகாண்பருவம் வழங்கப்பட்டும், அப்பதவியில் தேர்வு நிலை மற்றும் சிறப்பு நிலை ஊதியம் வழங்கப்பட்டுள்ளது. பணிப்பதிவேட்டின்படி தனியரின் பிறந்த தேதி 14.02.1969 என்பதால் விதிகளின்படி வயது முதிர்வு ஓய்வு நாள்.28.02.2029 ஆகும். தற்போது தனியர் 52 வயது பூர்த்தி செய்துள்ளார். இவர் மீது ஒழுங்கு நடவடிக்கை ஏதும் நிலுவையில் இல்லையெனவும் தெரிவித்து, தனியரை மருத்துவ இயலாமை ஓய்வில் செல்வதற்கு அனுமதி வேண்டி வடக்கு வட்டார அலுவலகத்திற்கு கோப்பு பெறப்பட்டுள்ளது.

வட்டார துணை ஆணையர் (வடக்கு) அவர்களின் 03.03.2021 நாளிட்ட கடிதத்தில், திரு.ஜி.வெங்கடேச பெருமாள், அலுவலக உதவியாளர் என்பவர் தனக்கு கண்பார்வை தெரியாதது மற்றும் புற்றுநோய் (*WHPPLE*) அறுவை சிகிச்சை செய்து கொண்டு தொடர் சிகிச்சை பெற்று வருவதாகவும், தன்னால் தொடர்ந்து பணி செய்ய முடியவில்லை என்பதால், மருத்துவ குழுவிற்கு பரிந்துரை செய்ததில், தனியர் மீண்டும் பணியை தொடர்ந்து செய்யும் தகுதியை இழந்துவிட்டதாகவும் மருத்துவ சான்று அளிக்கப்பட்டதின் அடிப்படையில், தனியரை மருத்துவ இயலாமை ஓய்வில் செல்ல அனுமதிக்கவும், தனியரின் மகனுக்கு பணி அளிக்க கோரியதன் அடிப்படையில், ஆணையர் அவர்களின் ஆணை வேண்டி கோப்பு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-4ல் அலுவலக உதவியாளராக பணிபுரிந்து வரும் திரு.ஜி.வெங்கடேச பெருமாள் என்பவருக்கு, *Fundamenatal Rules (Appendix-I, Annexure II–cont)*ல், *“(b) If the Medical Committee declares the Government sevant to be completely and permanently incapacitated for further service, in India, the Government servant should except as provided in clause (c) below, be invalided from the service, either on*

<u>பொ.து.ந.க.எண்.இ11/ 7328/ 2021</u>

*the expiration of the leave already granted to him, if he is on leave when examinedby the Committee or if he is not on leave, from the date of relief of his duties, which shold be arranged without delay on receipt of the Committee's report"* என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, அரசு ஸ்டான்லி மருத்துவமனை மருத்துவ குழு அவர்களின் 07.01.2021 நாளிட்ட மருத்துவ அறிக்கையில், *"He has applied for Unfit to continue in his job citing visual disability. He has referred to Department of ophthalmology and based on their opinion he has be Old Macular Choroiditis C 100% visual disability. Hence he is Unfit for the Job."* என தெரிவித்து மருத்துவ அறிக்கை அளித்துள்ளதின் அடிப்படையில், திரு.ஜி.வெங்கடேச பெருமாள், அலுவலக உதவியாளர், மண்டலம்-4 என்பவரை 07.01.2021 அன்று முற்பகல் முதல் மருத்துவ இயலாமை ஓய்வில் சென்றதாக கருதி, சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 05.03.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"மருத்துவ இயலாமை ஓய்வில் சென்றவராக கருதி ஆணை வழங்க, சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

********

**ம.அ.7.சு.து.ந.க.எண்.எச்1 / 6863 / 2018**

**தீர்மானஎண்.381 / 2021** **நாள்:09-03-2021**

**பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - மண்டலம்-7 - Dr. A. தவமணி, மருத்துவ அலுவலர், மண்டலம்-7 (தற்போது மண்டல சுகாதார அலுவலர், மண்டலம்-2(பொ) அவர்கள் மருத்துவ அலுவலர் பதவியில் தொடர்ந்து 20 வருடங்கள் பணி முடித்தமைக்கு ஊதிய நிர்ணயம் செய்ய அனுமதி.**

தனியரின் 25.,03.2014, 15.12.2014, 21.04.2015 மற்றும் 15.05.2015 நாளிட்ட கடிதங்களில், *Dr. A.* தவமணி, மருத்துவ அலுவலர், மண்டலம்-7 (தற்போது மண்டல சுகாதார அலுவலர்(பொ), மண்டலம்-4) அவர்கள் மருத்துவ அலுவலர் பதவியில் தொடர்ந்து 20 வருடங்கள் பணி முடித்துள்ளதனை தொடர்ந்து, அரசாணை (ப) எண்.583, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நப.3) துணை நாள் 26.11.2010ன்படி பதவி உயர்வுடன் கூடிய ஊதிய உயர்வு *(Time Bound Promotion With Pay hike)* வழங்குமாறு கோரியுள்ளார்.

மத்திய வட்டார துணை ஆணையர் அவர்களின் 23.06.2015 நாளிட்ட செயல்முறை ஆணையின்படி *Dr. A.* தவமணி, மருத்துவ அலுவலர், மண்டலம்-7 (தற்போது மண்டல சுகாதார அலுவலர்(பொ), மண்டலம்-4 அவர்கள் மருத்துவ அலுவலர் பதவியில் தொடர்ந்து 15 வருடங்கள் பணி முடித்துள்ளதனை தொடர்ந்து, தனியருக்கு அரசாணை மற்றும் மன்றத் தீர்மனத்தின்படி குறிப்பிட்டவாறு தர ஊதிய வித்தியாசத்தினை ஊதியத்தில் நிர்ணயம் செய்யப்பட்டு வழங்கப்பட்டது. அதில் தனியருக்கு முறையாக வழங்கவேண்டிய வருடாந்திர ஊதிய உயர்வு மாதமான ஏப்ரல் மாதத்தில் நிர்ணயம் செய்யாமல் தவறுதலாக அக்டோபர் மாதத்தில் நிர்ணயம் செய்து ஊதிய உயர்வு வழங்கப்பட்டுள்ளது (பணிபதிவேடு பக்கம் -14ல் பதியப்பட்டுள்ளது) எனவே காலமுறை ஊதியம் தவறுதலாக வழங்கப்பட்டதை (மத்திய வட்டார துணை ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை ம.வ.அ.ந.க.எண்.எச்1/6863/2015)) திருத்தம் செய்து *Dr. A.* தவமணி, மருத்துவ அலுவலர், மண்டலம்-7 (தற்போது மண்டல சுகாதார அலுவலர்(பொ), மண்டலம்-4 அவர்கள் 20 வருடங்கள் மருத்துவ அலுவலராக தொடர்ந்து பணிமுடித்துள்ளதால் அரசாணை எண்.301ன்படி ஊதிய நிர்ணயம் செய்திட கோரி கடிதம் அளித்துள்ளார்.

தற்போது *G.O. (Ms) No.301, HEALTH AND FAMILY WELFARE (A2) DEPARTMENT DATED 06.10.2015* மற்றும் மன்றத்தீர்மனத்தின்படி மருத்துவ அலுவலர் பதவியில் தொடர்ந்து 15, 17 மற்றும் 20 வருடங்கள் பணி முடித்துள்ள மருத்துவ அலுவலர்களுக்கு முறையே *Senior Medical Officer II, Senior Medical Officer I* மற்றும் *Chief Medical Officer (Time Bound Promotion With Pay hike) 23.10.2009* முதல் வழங்க கீழ்வருமாறு ஆணையிடப்பட்டுள்ளது.

| SL. NO. | LEVEL | PAY SCALE | YEARS OF SERVICE |
|---|---|---|---|
| 1 | Medical Officder Grade II | PB3-15600-39100+GP 5400 | - |
| 2 | Medical Officder Grade I | PB3-15600-39100+GP 5700 | 8 |
| 3 | Senior Medical Officer II | PB3-15600-39100+GP 6600 | 15 |
| 4 | Senior Medical Officer I | PB3-15600-39100+GP 7600 | 17 |
| 5 | Chief Medical Officer | PB3-15600-39100+GP 8700 | 20 |

இது குறித்து தனியரின் பணிப்பதிவேட்டினை ஆய்வு செய்தததில், *Dr. A.* தவமணி, மருத்துவ அலுவலர் மண்டலம்-7 (தற்போது மண்டல சுகாதார அலுவலர்(பொ), மண்டலம்-4 அவர்கள் மருத்துவ அலுவலராக தொடர்ந்து கீழ்வருமாறு பணிபுரிந்துள்ளார் என தெரிய வருகிறது.

**ம.அ.7.சு.து.ந.க.எண்.எச்1 / 6863 / 2018**

| வ. எண். | பெயர் மற்றும் பதவி | முதன் முதலில் பணியில் சேர்ந்த நாள் | 15 வருடங்கள் பணி முடித்த நாள் | 17 வருடங்கள் பணி முடித்த நாள் | 20 வருடங்கள் பணி முடித்த நாள் |
|---|---|---|---|---|---|
| 1 | Dr. A. தவமணி, மருத்துவ அலுவலர், மண்டலம்-7 (தற்போது மண்டல சுகாதார அலுவலர்(பொ), மண்டலம்-4 | 19.04.1995 | 18.04.2010 | 18.04.2012 | 18.04.2015 |

இது குறித்து மாநகர நல அலுவலருக்கு 25.04.2019 நாளிட்ட கடிதம் அனுப்பப்பட்டதில் 09.05.2019 நாளிட்ட பொது சுகாதாரத்துறை குறிப்பில், டாக்டர். தவமணி மருத்துவ அலுவலர் அவர்கள் வகித்து வரும் மருத்துவ அலுவலர் பதவியில் 20 ஆண்டுகள் பணியை நிறைவு செய்துள்ளதை தொடர்ந்து அன்னாருக்கு அரசாணை எண் (ப) 583 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.ப.) துறை நாள் 26.11.2010ன் படி 20 ஆண்டுகள் மருத்துவ அலுவலர் பதவியில் பணி முடித்தமைக்கான பதவி உயர்வுடன் கூடிய ஊதிய நிர்ணயம் PB-4 37400-6700+தர ஊதியம் ரூ.8700/- என்ற ஊதிய கட்டில் ஊதிய நிர்ணயம் செய்வதற்கு தகுதியுடையவராக இருப்பின் உரிய விதிகளுக்குட்பட்டு ஊதியம் நிர்ணயம் செய்ய நடவடிக்கை எடுக்க கருத்துரை வழங்கப்பட்டுள்ளது.

மண்டலம் -7 அம்பத்துாரில் ஊதியம் பெற்று மண்டலம் -4 ல் மண்டல நல அலுவலர்(பொ) வகிக்கும் டாக்டர். ஏ.தவமணி மருத்துவ அலுவலர் அவர்களுக்கு 20 ஆண்டுகள் பணிநிறைவு செய்துள்ளதை தொடர்ந்து மருத்துவ அலுவலர் பதவியில் பணிமுடித்தமைக்கான ஊதியம் நிர்ணயம் செய்ய கணக்கு அலுவலர், பகுதி கணக்கு குழுமம்/7 அவர்களுக்கு குறிப்பு அனுப்பி வைக்கப்பட்டதன் பேரில்.' தனியர் வகுப்புநிலை-2 அலுவலர் என்பதால் மன்ற தீர்மானம் பெற்று கீழ்வருமாறு ஊதிய நிர்ணயம் செய்து நடவடிக்கை மேற்கொள்ளலாம் என தெரிவித்து கருத்துரை வரப்பெற்றுள்ளதன் பேரில் Dr.D. தவமணி அவர்கள் மருத்துவ அலுவலர் பதவியில் 20 வருடங்கள் பணிமுடித்தமைக்காக (Chief Medical Officer- பதவியில்) ஊதிய நிர்ணயம் செய்ய சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 03.03.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

| பதவி | ஊதியம் நிர்ணயம் செய்யப்பட வேண்டிய நாள் | தற்போது பெற்று வரும் ஊதியம் | மாற்றி அமைக்கப்படவேண்டிய ஊதியம் மற்றும் நாள் |
|---|---|---|---|
| மருத்துவ அலுவலர் கிரேடு-II | 18.04.2010 நாளன்று ஊதியம் நிர்ணயம் | ரூ. 31300<br>15600-39100+6600 G.P.<br>(01.10.2010) | ரூ. 31300<br>15600-39100+6600 G.P.<br>(01.04.2010) |
| | 01.04.2011 வருடாந்திர ஊதிய உயர்வு | ரூ. 32240<br>15600-39100+6600 G.P.<br>(01.10.2011) | ரூ. 32240<br>15600-39100+6600 G.P.<br>(01.04.2011) |
| | 01.04.2012 வருடாந்திர ஊதிய உயர்வு | ரூ. 33210<br>15600-39100+6600 G.P.<br>(01.10.2012) | ரூ. 33210<br>15600-39100+6600 G.P.<br>(01.04.2012) |
| | 01.04.2013 அன்று ஊதிய உயர்வு | ரூ. 34210<br>15600-39100+6600 G.P.<br>(01.10.2013) | ரூ. 34210<br>15600-39100+6600 G.P.<br>(01.04.2013) |

| | | | |
|---|---|---|---|
| | 01.04.2014 வருடாந்திர ஊதிய உயர்வு | ரூ. 35240 15600-39100+6600 G.P. (01.10.2014) | ரூ. 35240 15600-39100+6600 G.P. (01.04.2014) |
| | 01.04.2015 வருடாந்திர ஊதிய உயர்வு | ரூ. 36300 15600-39100+6600 G.P. (01.10.2015) | ரூ. 36300 15600-39100+6600 G.P. (01.04.2015) |
| 20 வருடம் தொடர்ந்து மருத்துவ அலுவலர் பதவியில்பணிபுரிந்துள்ளதனை தொடர்ந்து தலைமை மருத்துவ அலுவலர் பதவியில் ஊதியம் நிர்ணயம் | 18.04.2015 அன்று ஊதியம் நிர்ணயம் | | ரூ. 38400 15600-39100+8700 G.P. |
| | 01.04.2016 வருடாந்திர ஊதிய உயர்வு | ரூ. 37390 15600-39100+6600 G.P. (01.10.2016) | ரூ. 39560 15600-39100+8700 G.P (01.04.2016) |
| | 01.04.2017 வருடாந்திர ஊதிய உயர்வு | ரூ. 38520 15600-39100+8700 G.P. (01.10.2017) | ரூ. 40750 15600-39100+8700 G.P. (01.04.2017) |
| 7வது ஊதியக்குழு பரிந்துரையின்படி ஊதியம் நிர்ணயம் (8700 தர ஊதியத்திற்கு) | 01.01.2016 அன்று ஊதியம் நிர்ணயம் | | ரூ. 123100 123100-215900 |
| | 01.04.2016 வருடாந்திர ஊதிய உயர்வு | | ரூ. 126800 123100-215900 |
| | 01.04.2017 வருடாந்திர ஊதிய உயர்வு | | ரூ. 130600 123100-215900 |
| | 01.04.2018 வருடாந்திர ஊதிய உயர்வு | | ரூ. 134500 123100-215900 |
| | 01.04.2019 வருடாந்திர ஊதிய உயர்வு | | ரூ. 138500 123100-215900 |

**“20 வருடங்கள் பணிமுடித்தமைக்காக ஊதியம் நிர்ணயம் செய்ய, சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.**

********

**ப.து.ந.க.எண்.*SD/WDCN08/ 046/ 2021***

**தீர்மான எண். 382/2021** **நாள்:10-03-2021**

**தானப்பத்திரம்**

மண்டலம்-*08*, கோட்டம்-*103*ல் B. Kishore GPA for திருமதி. Ashika Shah அவர்கள் பழைய கதவு எண்.23/1, புதிய கதவு எண்.41/1, Millers Road, கீழ்பாக்கம், சென்னை-600010, T.S.No.93/1, 93/6 & 93/5, பிளாக் எண்.5 புரசைவாக்கம் கிராமம் என்ற இடத்தில் அமைந்துள்ள நிலத்திற்கு மனைஉட்பிரிவு அனுமதி வேண்டி D1/SD/WDCN08/00046/2021 நாள்: 20.01.2021ன்படி விண்ணப்பம் அளித்துள்ளார்கள். இரண்டாம் முழுமை திட்டத்தின் படி Millers Road (தற்பொழுது ராஜரத்தினம் சாலை) 27.00 மீ அகல சாலையாக விரிவாக்கம் செய்யப்படவேண்டும்.

மேற்கண்ட மனையினை ஆய்வு செய்யப்பட்டதில் மனையின் முன்புபாக சாலையின் அகலம் 20.60 மீ உள்ளது. ஆதலால் விண்ணப்பதாரர்கள் 27.00 மீ சாலையாக விரிவாக்கம் செய்ய நிலத்தினை தானமாக அளிக்க வேண்டும்.

விண்ணப்பதாரர் B. Kishore GPA for திருமதி. Ashika Shah அவர்கள் மனைப்பிரிவில் சாலை விரிவாக்கத்திற்கான நிலத்தினை தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்க இசைவு தெரிவித்து தானப்பத்திரம் அளித்துள்ளார். சாலை விரிவாக்கத்திற்காக மனையின் 14.33 ச.மீ நிலம் 50% UDS (1/2) ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும்.

எனவே, B. Kishore GPA for திருமதி. Ashika Shah அவர்களிடமிருந்து தானப்பத்திரம் மூலம் சாலை விரிவாக்கத்திற்கான நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சி வசம் எடுத்துக் கொள்ளலாம் என கருதப்படுகிறது.

எனவே,

(1) பழைய கதவு எண்.23/1, புதிய கதவு எண்.41/1, Millers Road, கீழ்பாக்கம், சென்னை-600010, T.S.No.93/1, 93/6 & 93/5, பிளாக் எண்.5, புரசைவாக்கம் கிராமம் என்ற இடத்தில் அமைந்துள்ள நிலத்திற்கு மனைஉட்பிரிவு வேண்டி விண்ணப்பிக்கப்பட்டுள்ள திட்ட வரைபடத்தில் சாலைக்காக ஒதுக்கப்பட்டுள்ள 14.33 ச.மீ நிலத்தில் 50% UDS (1/2) மனை உரிமையாளர் B. Kishore GPA for திருமதி. Ashika Shah அவர்களிடமிருந்து தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி பெற்றுக் கொள்வதற்கும்,

(2) சாலை விரிவாக்கத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள நிலத்தில் சாலை அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ள தேவையான தொகை ரூ.27,700/- ஐ (ரூபாய் இருபத்தி ஏழாயிரத்து ஏழுநூறு மட்டும்) மனை உரிமையாளரிடமிருந்து ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி" என்ற பெயரில் வரைவு காசோலையாக வசூலிக்கவும்,

மேற்கண்ட *1* மற்றும் *2* ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(நகரமைப்பு) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 24.02.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"தானப்பத்திரம் *1* மற்றும் *2* ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(நகரமைப்பு) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

************

**இ.பொ.து.வ.செ.வா.ப.ந.க.எண்.பிசி / 100/2021**

**தீர்மானஎண்.383/2021** **நாள்:10-03-2021**

**பெருநகர சென்னை மாநகராட்சி - இயந்திர பொறியியல் துறை - வடசென்னை பிரதான லாரி நிலையம் - 2021-22 ஆம் ஆண்டுக்கான டீசல் கொள்முதல் - இந்தியன் ஆயில் நிறுவனத்திடமிருந்து கொள்முதல் செய்ய அனுமதி.**

சென்னை மாநகராட்சி மன்றத்தீர்மானம் எண். 180 / 78 நாள். 26.02.78 ன்படி சென்னை மாநகராட்சி உபயோகத்திற்கு தேவைப்படும் டீசல், இதர எரி பொருட்கள் ஒப்பம் கோருவதிலிருந்து விலக்கு அளித்து இந்திய அரசு நிறுவனமான இந்தியன் ஆயில் நிறுவனத்திடமிருந்து 1978 -79 ஆம் ஆண்டிலிருந்து விலைப்புள்ளி பெற்று கொள்முதல் செய்ய அனுமதி பெறப்பட்டுள்ளது. தென் சென்னை மற்றும் வடசென்னையில் உள்ள மண்டல வாகன இயக்கவூர்தி நிலையம் அமைக்கப்பட்ட பின்னர் இந்திய அரசு நிறுவனங்களான இந்துஸ்தான் பெட்ரோலியம், பாரத் பெட்ரோலியம் மற்றும் இந்திய ஆயில் நிறுவனங்களால் டீசல் சேமிப்பு அறைகள் மண்டல வாகன நிலையங்களில் நிறுவப்பட்டன.

வடசென்னை மற்றும் மண்டல வாகன நிலையங்களால் அசோக்லைலேண்ட், சுவராஜ் மஸ்தா, டாடா, எய்ச்சர், டிராக்டர், சிறியவகை முன்பளு தூக்கிகள், முன்பளு தூக்கிகள், மின் துறை வாகனங்கள், பொக்லைன்கள் புல்டோசர்கள், கனரக காம்பேக்டர்கள், இலகு ரக காம்பேக்டர்கள் போன்ற வாகனங்கள் 251 எண்ணிக்கைக்கு மேல் பராமரிக்கப்பட்டு வருகின்றன. மேலும், நலத்துறை மலேரியா பிரிவு கொசு ஒழிப்பு பணிக்காக வேன்பாக் போன்ற வாகனங்களுக்கு தேவையான அளவு டீசல் வழங்கப்பட்டு வருகிறது. குடும்ப நலத்துறைக்கு வாசிங் மெசின், டீசல் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், மின்வெட்டின் காரணமாக மண்டலங்களில் உள்ள சென்னை மாநகராட்சி மருத்துவமனைகள் மற்றும் மண்டல அலுவலகங்களில் இயங்கும் ஜென்ரேட்டர் ஆகியவற்றிக்கு எரிபொருள் வழங்கப்பட்டு வருகிறது. மழைக்காலங்களில் தண்ணீர் இரைப்பதற்காக ராட்சத மோட்டார்களுக்கும் டீசல் வழங்கப்படுகிறது.

சென்னை மாநகராட்சியில் வடசென்னை பிரதான வாகன நிலையம் கட்டுப்பாட்டில் எரி பொருள் சேமிப்பு தொட்டி உரிய நிறுவனத்தால் நிறுவப்பட்டுள்ளது.

| வ.எண் | இடம் | எரி பொருள் நிறுவனம் | குறிப்பு |
|---|---|---|---|
| 1. | வடசென்னை பிரதான வாகனநிலையம் | இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனம் | மண்டலம் 5 மற்றும் வட சென்னை வாகன பணிமனை சார்ந்த அனைத்து வாகனங்கள் /உபகரணங்கள்/மற்ற பயன்பாடுகள் |

சென்னை மாநகராட்சிக்கு தேவையான எரிபொருட்கள் சேமிப்பு தொட்டி நிறுவிய மேற்கண்ட நிறுவனமிடமிருந்து மட்டுமே கொள்முதல் செய்யப்படுவதால் டீசல் எரிபொருட்களின் விலை விகிதத்தை தெரிவிக்குமாறு வட சென்னை வாகன பணிமனைக்கு தேவையான எரிபொருள் கொள்முதல் செய்ய விலைப்புள்ளி 16.02.2021 நாளிட்ட கடிதம் மூலம் பெறப்பட்டது. இந்நிறுவனம் அளித்த விலைப்புள்ளி கீழே தொகுத்து சமர்ப்பிக்கப்படுகிறது.

| நிறுவனம் | பொருள் விவரம் | 1 **KL**க்கான தொகை ரூபாய் | மொத்த தேவை கிலோ லிட்டர் |
|---|---|---|---|
| இந்தியன் ஆயில் நிறுவன விற்பனை விலைப்புள்ளி ( அனைத்து வரிகள் உட்பட ) | டீசல் | ரூ.83,328 | 1200 |
| மொத்தம் | 1200 கி.லி. **X** ரூ.83,328/- = ரூ.9,99,93,600/- | | |

மேற்கண்ட விலைப்புள்ளி, எரிபொருளை சென்னை மாநகராட்சி வடசென்னை பிரதான வாகன பணிமனையில் மேற்கண்ட நிறுவனத்திடமிருந்து வாகனங்கள் மூலமாக கொண்டுவந்து இறக்கி கொடுப்பதற்கு உட்பட்டதாகும். மேலும், இந்த விலைப்புள்ளி மத்திய அரசு அறிவிக்கும் விலை உயர்வுக்கு உட்பட்டது என்றும், இதற்கான விற்பனை தொகையை முன்பணமாக காசோலை செலுத்த வேண்டும் எனவும், மேற்கண்ட நிறுவனம் நிபந்தனைகள் தெரிவித்துள்ளன. இந்நிறுவன விலைப்புள்ளி சமமாக உள்ளதாலும், மத்திய அரசு அவ்வப்போது நிர்ணயிக்கும் விலைப்புள்ளிகளின்படி மேற்கூறிய பொருட்களை கொடுத்து வருவதால் இந்த விலைப்புள்ளி ஏற்றுக் கொள்ளலாம். இந்நிறுவனம் இந்திய அரசின் நிறுவனம் என்பதால் இந்நிறுவனத்திற்கு பிணை வைப்புத் தொகை மற்றும் காப்பீட்டுத் தொகை செலுத்துவதிலிருந்தும், உடன்படிக்கை செய்து கொள்வதிலிருந்தும் விலக்கு அளிக்கலாம்.

மேலும், துப்புரவு மற்றும் பிற பணிகளுக்கு பயன்படுத்தப்படும் கனரக மற்றும் இலகுரக வாகனங்கள் அனைத்திற்கும் தேவைப்படும் எரிபொருள் கொள்முதல் அளவுகள் முறையே வடசென்னை பிரதான பணிமனைக்கு 1200 கிலோ லிட்டர் டீசல் பெறுவதற்கு தோராயமாக ரூ.9,99,93,600/- தேவைப்படுகிறது. இச்செலவினம் 2021-2022 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் இயந்திர பொறியியல் துறை, ஆய்வு வாகனங்கள் எரிபொருள் உபயோகம், கணக்கு எண் 230-20-03-06 என்ற தலைப்பின் கீழ் செலவு செய்யப்படும்.

எனவே, வடசென்னை வாகன பணிமனைக்கு தேவையான எரி பொருள் மேற்கண்ட மத்திய நிறுவனத்திடமிருந்து அந்நிறுவனம் அளித்த விலைப்புள்ளியின்படி அல்லது வாங்கும் காலத்தில் அப்போதைய சந்தை விலைக்கு வாங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

டீசல் கொள்முதல் செய்ய 2001-02 ஆம் ஆண்டிற்கு மன்றத்தீர்மானம் எண். 92 / 2000 நாள். 28.02.2000 அனுமதியின்படி அரசின் பின்னேற்பினை பெறுவதற்கு அனுப்பப்பட்ட கோப்பின் மீது நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு ( மா.ந. 1 ) துறை அளித்த அரசு ஆணை நிலை எண். 102 நாள். 07.08.2000, மேற்கூறிய இரண்டு நிறுவனங்களும் மத்திய அரசின் நிறுவனங்களாக இருக்கும் வரை ஒவ்வொரு ஆண்டும் சென்னை மாநகராட்சிக்கு தேவையான டீசல் மற்றும் பெட்ரோல் இனி சென்னை மாநகராட்சி ஆணையரே கொள்முதல் செய்து கொள்ள அனுமதி அளித்து நிரந்தர ஆணை வெளியிட்டுள்ளது.

அரசு ஆணையினை அமுல்படுத்திட மன்றத்தீர்மானம் எண். 486 / 01 நாள். 18.09.2001 ல் அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் ஆணையரின் ஆணை பெற்று டீசல், பெட்ரோல் கொள் முதல் செய்யப்பட்டு வருகிறது. வரும் 2021-2022 ஆம் ஆண்டிற்கு டீசல் கொள்முதல் செய்திட சிறப்பு அதிகாரி மற்றும் மாமன்றம் அவர்களின் ஆணை வேண்டப்படுகிறது.

எனவே,

1. வடசென்னை வாகன நிலையத்திற்கு 2021 – 2022 ஆம் ஆண்டிற்கு தேவையான 1200 கிலோ லிட்டர் டீசல், திருவாளர் இந்தியன் ஆயில் கார்பரேசன் லிமிடெட் நிறுவனத்திடமிருந்து வாங்குவதற்கும் அவர்களால் அமைக்கப்பட்ட சேமிப்பு தொட்டியில் அவர்கள் வாகனங்கள் மூலமாக வடசென்னை வாகன பணிமனைக்கு சுமார் ரூ.9,99,93,600/- (ரூபாய் ஒன்பது கோடியே தொண்ணூற்று ஒன்பது இலட்சத்து தொண்ணூற்று மூன்றாயிரத்து அறுநூறு மட்டும் ) என்ற அளவில் அல்லது வாங்கும் காலத்தில் அப்போதைய சந்தை விலைக்கே 2021-2022 ஆம் ஆண்டிற்கு வாங்கவும்.

2. இதற்கான செலவினத்தை இயந்திர பொறியியல் துறை, ஆய்வு வாகனங்கள் எரிபொருள் உபயோகம், கணக்கு எண் 230-20-03-06 என்ற தலைப்பின் செலவினத்தில் செலவு செய்யவும்,

3. மேற்கண்ட நிறுவனம் இந்திய அரசு நிறுவனம் என்பதால் அவர்களுக்கு பிணை வைப்பு தொகை கட்டுவதிலிருந்தும், பாதுகாப்பு தொகை செலுத்துவதிலிருந்தும் மற்றும் உடன்படிக்கை செய்து கொள்வதிலிருந்தும் விலக்கு அளிக்கவும்,

**இ.பொ.து.வ.செ.வா.ப.ந.க.எண்.பிசி / 100 /2021**

4. இந்திய அரசு நிறுவனம் கோரியபடி தேவையான முன்பணத்தை தேவைக்கேற்ப அவ்வப்போது காசோலையாக அளிக்கவும்,

5. சிறப்பு அதிகாரி / மாமன்றம் அவர்களின் நிர்வாக அனுமதி ஆணை பெற்று மேற்பார்வை பொறியாளர் (இ) அவர்களின் ஆணை மூலமாக முன்பண காசோலை செலுத்தி டீசல் கொள்முதல் செய்யவும் ,

6. அரசு நிரந்தர ஆணை வெளியிட்டு ஒவ்வொரு ஆண்டும், சென்னை மாநகராட்சிக்கு தேவையான டீசல் இனி சென்னை மாநகராட்சி ஆணையரே கொள்முதல் செய்து கொள்ள அரசு அனுமதி அளித்துள்ளதால் அரசின் பின்னேற்பு இன்றி கொள்முதல் செய்யவும்,

மேற்கண்ட 1 முதல் 6 வரை உள்ள இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 26.02.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“டீசல் கொள்முதல் செய்ய, 1 முதல் 6 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.**

**********

இ.பொ.து.வ.செ.வா.ப.ந.க.எண்.பிசி / 101/2021

**தீர்மானஎண்.384/2021** **நாள்:10-03-2021**

**பெருநகர சென்னை மாநகராட்சி - இயந்திர பொறியியல் துறை - மண்டலம் 4 லாரி நிலையம் - 2021-22 ஆம் ஆண்டுக்கான டீசல் கொள்முதல் - இந்துஸ்தான் பெட்ரோலியம் நிறுவனத்திடமிருந்து கொள்முதல் செய்ய அனுமதி.**

சென்னை மாநகராட்சி மன்றத்தீர்மானம் எண். 180 / 78 நாள். 26.02.78 ன்படி சென்னை மாநகராட்சி உபயோகத்திற்கு தேவைப்படும் டீசல், இதர எரி பொருட்கள் ஒப்பம் கோருவதிலிருந்து விலக்கு அளித்து இந்திய அரசு நிறுவனமான இந்தியன் ஆயில் நிறுவனத்திடமிருந்து 1978 -79 ஆம் ஆண்டிலிருந்து விலைப்புள்ளி பெற்று கொள்முதல் செய்ய அனுமதி பெறப்பட்டுள்ளது. தென் சென்னை மற்றும் வடசென்னையில் உள்ள மண்டல வாகன இயக்கூர்தி நிலையம் அமைக்கப்பட்ட பின்னர் இந்திய அரசு நிறுவனங்களான இந்துஸ்தான் பெட்ரோலியம், பாரத் பெட்ரோலியம் மற்றும் இந்திய ஆயில் நிறுவனங்களால் டீசல் சேமிப்பு அறைகள் மண்டல வாகன நிலையங்களில் நிறுவப்பட்டன.

வடசென்னை மற்றும் மண்டல வாகன நிலையங்களால் அசோக்லைலேண்ட், சுவராஜ் மஸ்தா, டாடா, எய்ச்சர், டிராக்டர், சிறியவகை முன்பளு தூக்கிகள், முன்பளு தூக்கிகள், மின் துறை வாகனங்கள், பொக்லைன்கள் புல்டோசர்கள், கனரக காம்பேக்டர்கள், இலகு ரக காம்பேக்டர்கள் போன்ற வாகனங்கள் 251 எண்ணிக்கைக்கு மேல் பராமரிக்கப்பட்டு வருகின்றன. மேலும். நலத்துறை மலேரியா பிரிவு கொசு ஒழிப்பு பணிக்காக வேன்பாக் போன்ற வாகனங்களுக்கு தேவையான அளவு டீசல் வழங்கப்பட்டு வருகிறது. குடும்ப நலத்துறைக்கு வாசிங் மெசின், டீசல் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், மின்வெட்டின் காரணமாக மண்டலங்களில் உள்ள சென்னை மாநகராட்சி மருத்துவமனைகள் மற்றும் மண்டல அலுவலகங்களில் இயங்கும் ஜென்ரேட்டர் ஆகியவற்றிக்கு எரிபொருள் வழங்கப்பட்டு வருகிறது. மழைக்காலங்களில் தண்ணீர் இரைப்பதற்காக ராட்சத மோட்டார்களுக்கும் டீசல் வழங்கப்படுகிறது.

சென்னை மாநகராட்சியில் மண்டலம் 4 லாரி நிலைய கட்டுப்பாட்டில் கீழ்கண்ட எரி பொருள் சேமிப்பு தொட்டி உரிய நிறுவனத்தால் நிறுவப்பட்டுள்ளது.

| வ.எண் | இடம் | எரி பொருள் நிறுவனம் | குறிப்பு |
|---|---|---|---|
| 2. | மண்டல இயக்கூர்தி நிலையம் 4 | இந்துஸ்தான் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் நிறுவனம் | மண்டலம் 4 மண்டலத்தை சார்ந்த அனைத்து வாகனங்கள்/ உபகரணங்கள்/மற்ற பயன்பாடுகள் |

சென்னை மாநகராட்சி, மண்டலம் 4 லாரி நிலையத்திற்கு தேவையான எரிபொருட்கள் சேமிப்பு தொட்டியினை நிறுவிய மேற்கண்ட நிறுவனத்திடம் இருந்து மட்டுமே கொள்முதல் செய்யப்படுவதால் டீசல் எரிபொருட்களின் விலை விகிதத்தை தெரிவிக்குமாறு மண்டலம் 4 லாரி நிலையத்திற்கு தேவையான எரிபொருள் கொள்முதல் செய்ய விலைப்புள்ளி பெறப்பட்டது. இந்நிறுவனம் அளித்த விலைப்புள்ளி கீழே தொகுத்து சமர்ப்பிக்கப்படுகிறது.

| நிறுவனம் | பொருள் விவரம் | 1KLக்கான தொகை ரூபாய் | மொத்த தேவை கிலோ லிட்டர் |
|---|---|---|---|
| இந்துஸ்தான் பெட்ரோலியம் நிறுவன விற்பனை விலைப்புள்ளி ( அனைத்து வரிகள் உட்பட ) | டீசல் | ரூ.83,328/- | 600 |
| மொத்தம் | 600 கி.லி. X ரூ.83,328 = ரூ.4,99,96,800/- | | |

**இ.பொ.து.வ.செ.வா.ப.ந.க.எண்.பிசி / 101/2021**

மேற்கண்ட விலைப்புள்ளி, எரிபொருளை சென்னை மாநகராட்சி மண்டலம் 4 லாரி நிலையத்தில் மேற்கண்ட நிறுவனத்திடமிருந்து வாகனங்கள் மூலமாக கொண்டுவந்து இறக்கி கொடுப்பதற்கு உட்பட்டதாகும். மேலும், இந்த விலைப்புள்ளி மத்திய அரசு அறிவிக்கும் விலை உயர்வுக்கு உட்பட்டது என்றும், இதற்கான விற்பனை தொகையை முன்பணமாக காசோலை செலுத்த வேண்டும் எனவும், மேற்கண்ட நிறுவனம் நிபந்தனைகள் தெரிவித்துள்ளன. இந்நிறுவன விலைப்புள்ளி சமமாக உள்ளதாலும், மத்திய அரசு அவ்வப்போது நிர்ணயிக்கும் விலைப்புள்ளிகளின்படி மேற்கூறிய பொருட்களை கொடுத்து வருவதால் இந்த விலைப்புள்ளி ஏற்றுக் கொள்ளலாம். இந்நிறுவனம் இந்திய அரசின் நிறுவனம் என்பதால் இந்நிறுவனத்திற்கு பிணை வைப்புத் தொகை மற்றும் காப்பீட்டுத் தொகை செலுத்துவதிலிருந்தும், உடன்படிக்கை செய்து கொள்வதிலிருந்தும் விலக்கு அளிக்கலாம்.

மேலும், துப்புரவு மற்றும் பிற பணிகளுக்கு பயன்படுத்தப்படும் கனரக மற்றும் இலகுரக வாகனங்கள் அனைத்திற்கும் தேவைப்படும் எரிபொருள் கொள்முதல் அளவுகள் முறையே மண்டலம் 4 லாரி நிலையத்திற்கு 600 கிலோ லிட்டர் டீசல் பெறுவதற்கு தோராயமாக ரூ.4,99,96,800/- தேவைப்படுகிறது. இச்செலவினம் 2021-2022 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் இயந்திர பொறியியல் துறை, ஆய்வு வாகனங்கள் எரிபொருள் உபயோகம், கணக்கு எண் 230-20-03-06 என்ற தலைப்பின் கீழ் செலவு செய்யப்படும்.

எனவே, மண்டலம் 4 லாரி நிலையத்திற்கு தேவையான எரி பொருள் மேற்கண்ட மத்திய நிறுவனத்திடமிருந்து அந்நிறுவனம் அளித்த விலைப்புள்ளியின்படி அல்லது வாங்கும் காலத்தில் அப்போதைய சந்தை விலைக்கு வாங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

டீசல் கொள்முதல் செய்ய 2001-02 ஆம் ஆண்டிற்கு மன்றத்தீர்மானம் எண். 92 / 2000 நாள். 28.02.2000 அனுமதியின்படி அரசின் பின்னேற்பினை பெறுவதற்கு அனுப்பப்பட்ட கோப்பின் மீது நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு ( மா.ந. 1 ) துறை அளித்த அரசு ஆணை நிலை எண். 102 நாள். 07.08.2000, மேற்கூறிய இரண்டு நிறுவனங்களும் மத்திய அரசின் நிறுவனங்களாக இருக்கும் வரை ஒவ்வொரு ஆண்டும் சென்னை மாநகராட்சிக்கு தேவையான டீசல் மற்றும் பெட்ரோல் இனி சென்னை மாநகராட்சி ஆணையரே கொள்முதல் செய்து கொள்ள அனுமதி அளித்து நிரந்தர ஆணை வெளியிட்டுள்ளது.

அரசு ஆணையினை அமுல்படுத்திட மன்றத்தீர்மானம் எண். 486 / 01 நாள். 18.09.2001 ல் அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் ஆணையரின் ஆணை பெற்று டீசல், பெட்ரோல் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. வரும் 2021-2022 ஆம் ஆண்டிற்கு டீசல் கொள்முதல் செய்திட சிறப்பு அதிகாரி மற்றும் மாமன்றம் அவர்களின் ஆணை வேண்டப்படுகிறது.

எனவே,

3. மண்டலம் 4 லாரி நிலையத்திற்கு 2021 – 2022 ஆம் ஆண்டிற்கு தேவையான 600 கிலோ லிட்டர் டீசல், திருவாளர்கள் இந்துஸ்தான் பெட்ரோலியம் கார்பரேசன் லிமிடெட் நிறுவனத்திடமிருந்து வாங்குவதற்கும் அவர்களால் அமைக்கப்பட்ட சேமிப்பு தொட்டியில் அவர்கள் வாகனங்கள் மூலமாக மண்டலம் 4 லாரி நிலையத்திற்கு சுமார் ரூ.4,99,96,800/- (ரூபாய் நான்கு கோடியே தொண்ணூற்றொன்பது இலட்சத்து தொண்ணூற்று ஆறாயிரத்து எண்ணூறு மட்டும்) என்ற அளவில் அல்லது வாங்கும் காலத்தில் அப்போதைய சந்தை விலைக்கே 2021-2022 ஆம் ஆண்டிற்கு வாங்கவும்,

4. இதற்கான செலவினத்தை இயந்திர பொறியியல் துறை, ஆய்வு வாகனங்கள் எரிபொருள் உபயோகம், கணக்கு எண் 230-20-03-06 என்ற தலைப்பின் செலவினத்தில் செலவு செய்யவும்,

7. மேற்கண்ட நிறுவனம் இந்திய அரசு நிறுவனம் என்பதால் அவர்களுக்கு பிணை வைப்பு தொகை கட்டுவதிலிருந்தும், பாதுகாப்பு தொகை செலுத்துவதிலிருந்தும் மற்றும் உடன்படிக்கை செய்து கொள்வதிலிருந்தும் விலக்கு அளிக்கவும்,

8. இந்திய அரசு நிறுவனம் கோரியபடி தேவையான முன்பணத்தை தேவைக்கேற்ப அவ்வப்போது காசோலையாக அளிக்கவும்.

9. சிறப்பு அதிகாரி / மாமன்றம் அவர்களின் நிர்வாக அனுமதி ஆணை பெற்று மேற்பார்வை பொறியாளர் (இ) அவர்களின் ஆணை மூலமாக முன்பண காசோலை செலுத்தி டீசல் கொள்முதல் செய்யவும்,

10. அரசு நிரந்தர ஆணை வெளியிட்டு ஒவ்வொரு ஆண்டும், சென்னை மாநகராட்சிக்கு தேவையான டீசல் இனி சென்னை மாநகராட்சி ஆணையரே கொள்முதல் செய்து கொள்ள அரசு அனுமதி அளித்துள்ளதால் அரசின் பின்னேற்பு இன்றி கொள்முதல் செய்யவும்,

மேற்கண்ட 1 முதல் 6 வரை உள்ள இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 25.02.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"டீசல் கொள்முதல் செய்ய, 1 முதல் 6 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

********

ம.அ.10.வ.பி.ந.க.எண். ஆர்4/8320/ 2018

தீர்மானஎண்.385/2021 நாள்:10-03-2021

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் 10 - கோட்டம் 134மாநகராட்சி வணிக வளாகம் - பயன்படுத்த தகுதியில்லாமல் மிகவும் அபாயகரமாக இடிந்து விழும் நிலையில் உள்ளது - இடித்துவிட்டு புதிய கட்டுமானம் கட்ட மன்ற அனுமதி பெறப்பட்டுள்ளது - வாடகைதாரர்களுக்கு உரிய தாக்கீது வழங்கப்பட்டது - கடந்த 4/2/2020 அன்று மூடி முத்திரையிடப்பட்டது - நீதிமன்ற உத்தரவு படி பொருட்கள் எடுக்க அனுமதி அளிக்கப்பட்டு மீண்டும் மூடி முத்தியிடப்பட்டது - வாடகை நிலுவையினை தள்ளுபடி செய்யஅனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 10, கோட்டம் 134 என். எஸ். கே. சாலையில் அமைந்துள்ள சென்னை மாநகராட்சி வணிக வளாகமானது கடந்த 1980 ஆம் ஆண்டுக்கு முன் கட்டப்பட்ட பழமையான கட்டிடமாகும் . இக்கட்டிடமானது தரை தளம், முதல் தளம், இரண்டாம் தளம் ஆகியவை கொண்டதாகும் . இதில் மொத்தம் 111 கடைகள் மற்றும் 97 காய்கறி அங்காடிகள் இருந்தன. இக்கட்டிடம் கட்டப்பட்டு ஆண்டுகள் பல ஆகிவிட்டதனால் ஒவ்வொரு தளத்திலும் மேற்கூரை இடிந்து விழும் நிலையில் உள்ளதால் பொதுமக்கள் பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது. இதனைத் தொடர்ந்து மண்டலம் – 10ன் , வார்டு குழு மற்றும் மாமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு விபத்து ஏற்படுவதற்கு முன்னர் பொதுமக்களின் உயிருக்கு சேதம் ஏற்படாத வகையில் மேற்படி கட்டிடத்தினை இடித்துவிட்டு வேறு கட்டுமானம் கட்ட பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்களின் சிறப்பு அலுவலர் மன்றத்தின் மூலம் மேற்படி வாடகை ஒப்பந்தத்தில் உள்ள நபர்களை உடனடியாக அகற்றி பொதுமக்கள் உயிருக்கு எந்தவிதமான இழப்பும் ஏற்படாதவண்ணம் கட்டிடத்தை இடிக்க தீர்மானம் (சிறப்பு அதிகாரி, மன்றத் தீர்மான எண் . 557/2019, நாள்- 19/09/2019) நிறைவேற்றப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து மத்திய வட்டார துணை ஆணையர் அவர்களின் 28.01.2020 நாளிட்ட ஒப்புதல் பெறப்பட்டு கடந்த 4/2/2020 அன்று 150 காவல் துறை அலுவலர்களின் பாதுகாப்புடன் ஒலி ஒளி படங்கள் எடுக்கப்பட்டு மூடி முத்திரை இடப்பட்டது. இதன் மூலம் மாநகராட்சியின் ரூபாய் 120 கோடி மதிப்பிலான சொத்து மீட்கப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

இதனைத் தொடர்ந்து மேற்படி கட்டிடத்தில் வாடைகைக்கு இருந்த நபர்களில் ஒருசிலர் மாண்பைமிகு நீதிமன்றம் சென்றுள்ளனர். மாண்பைமிகு நீதிமன்றம் கட்டிடம் இடிபடும் நிலையில் உள்ளதால் அனைவரும் அவர்களுக்கு உரிய பொருட்களை எடுத்துக் கொண்டு மாநகராட்சி வசம் ஒப்படைக்க அறிவுறுத்தப்பட்டது. தற்போதைய நிலையில் 9 வாடகைதாரர்களைத் தவிர அனைவரும் தங்களது பொருட்களை எடுத்துக் கொண்டதுடன் காலியும் செய்துவிட்டனர். மேற்படி வணிக வளாகத்தில் கட்டிடப் பகுதியில் 111 கடைகளும் காய்கறி அங்காடி பகுதியில் 97 கடைகளும், 50 ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்டது அவற்றில் பெரும்பாலான கடைகள் கடந்த பல ஆண்டுகளாகவே பயன்படுத்தப்படாமல் காலியாகவே இருந்து வந்தன. அவற்றிற்கான வாடகை விவத்தினை கணினியில் இருந்து நீக்கம் செய்யப்படாமல் உள்ளது. துணை ஆணையர் ( வ ம நி) அவர்களின் 04.02.2020 சீராய்வு கூட்ட நடவடிக்கையின்படி மாநகராட்சி வணிக வளாகங்களில் காலியாக உள்ள கடைகளின் வாடகையினை கணினியில் நீக்கம் செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேற்படி வணிக வளாகத்தில் பயன்பாட்டில் இருந்த கடைகள் மற்றும் காலியாக இருந்த கடைகள் கீழே அட்டவணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

| வணிக வளாகம் | பயன்பாட்டில் இருந்த கடைகளின் எண்ணிக்கை | வாடகை நிலுவை | காலியாக இருந்த கடைகள் | நீக்கப்பட வேண்டிய வாடகை தொகை |
|---|---|---|---|---|
| வணிக வளாகம் | 37 | 965928 | 74 | 7147927 -- |
| காய்கறி அங்காடி | 8 தற்காலிக கடைகள் | -- | 89 | 1201465 |
| மொத்தம் | | 965928 | | 8349392 |

**ம.அ.10.வ.பி.ந.க.எண். ஆர்4 / 8320/ 2018**

மேற்சொல்லிய வணிக வளாகத்தில் பயன்படத்தப்படாமல் மூடிய நிலையில் இருந்த கடைகளின் வாடகை விவரங்கள் இதுநாள் வரை கணினியில் இருந்து நீக்கம் செய்யப்படவில்லை. இந்த வகையில் மேற்சொல்லிய வணிக வளாகத்தில் நீக்கப்படவேண்டிய வாடகைத் தொகை ரூபாய் 83,93,392/- உள்ளது. இதனை கணினியில் இருந்து நீக்கம் செய்யப்பட வேண்டும். பெருநகர சென்னை மாநகராட்சியின் 35 கிரவுண்டு நிலம் அதாவது தற்போதைய மதிப்பில் ரூபாய் 120 கோடிக்கும் அதிகமான மதிப்புடைய சொத்தினை இம்மண்டலத்தின் மூலம் மீட்கப்பட்டுள்ளது. இதனை கருத்தில் கொள்ளும்போது மேற்படி நிலுவைத் தொகையானது மிகவும் குறைவு என்பதாலும், இதனை மேற்படி கடையினை காலி செய்தவர்களிடம் இருந்து வசூலிக்க இயலாது என்பதாலும் இதனை தள்ளுபடி செய்யலாம். இதற்கு மத்திய வட்டார துணை ஆணையர் அவர்களின் 28.01.2020 நாளிட்ட அனுமதியும் பெறப்பட்டுள்ளது.

எனவே, ரூபாய் 120 கோடிக்கான சொத்தினை கடந்த 4/2/2020 அன்று மீட்ட வகையில்,

1) பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 10, கோட்டம் 134, என். எஸ்.கே. சாலையில் பழுதடைந்துள்ள வணிகவளாகத்தில் நீண்ட நாட்களாக பூட்டப்பட்டு காலியாக உள்ள அனைத்து கடைகளுக்கான வாடகை மற்றும் நிலுவைகள் அனைத்தினையும் கணினியில் இருந்து நீக்கம் செய்யவும்,

2) தற்போது நடப்பில் இருந்து கையகப்படுத்தப்பட்ட கடைகளுக்கான நிலுவை வாடகைத்தொகைகள் அனைத்தினையும் வசூலிப்பதில் இருந்து தள்ளுபடி செய்யவும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 10.03.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"வணிக வளாக வாடகை நிலுவையினை தள்ளுபடி செய்ய 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

************

**ம.அ.8.வ.து.ந.க.எண்.ஆர்1/ 1180/ 2020**

**தீர்மானஎண்.386/2021** **நாள்:10-03-2021**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் 8 - வருவாய் பிரிவு மறுக்கப்பட்ட காசோலைகள் அதிக அளவில் நிலுவையில் உள்ளவைகளை - திரும்ப வசூல் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டது - 2010 - 2011ஆம் ஆண்டின் பத்தி எண்.7 தணிக்கை தடை நீக்கம் செய்ய அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-8 வருவாய் பிரிவு தணிக்கை அறிக்கை 2010-2011ஆம் ஆண்டு பத்தி எண்.7 இணைப்பு எண்-1ல் குறிப்பிட்டுள்ளபடி 31.03.2011 வரை சொத்துவரி வசூலில் மறுக்கப்பட்ட காசோலைகள் தண்டக் கட்டணத்துடன் திரும்ப வசூல் செய்யப்படாத தொகை ரூ. 46,27,203/-ஐ மறுக்கப்பட்ட காசோலைகள் திரும்ப வசூல் செய்யப்பட வேண்டும். மேற்கண்ட பத்தி நிலைக்குழுவில் தெரிவித்த பத்தி என்பதால், உள்ளாட்சி நிதி தணிக்கை கூட்டமர்வில் இப்பத்தியை எடுத்து கொள்ளவில்லை. எனவே, தற்பொழுது நிலைக்குழு இல்லாத காரணத்தால் மேற்கண்ட தணிக்கை தடை நீக்கம் செய்ய கீழ்கண்டவாறு பதில் சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ. எண் | தணிக்கை பத்தி எண் | தணிக்கை விவரம் | தணிக்கை தடை நீக்கத்திற்கான காரணம் |
|---|---|---|---|
| 1 | 2010-2011 தணிக்கை தடை பத்தி எண். 7. இணைப்பு எண். 1 | வருவாய் பிரிவு சொத்துவரி வசூல் மறுக்கப்பட்ட காசோலைகள் அதிக அளவில் நிலுவையில் உள்ளவை திரும்ப வசூல் செய்ய உரிய நடவடிக்கை - ரூ. 46,27,203/- | வருவாய் பிரிவில் மறுக்கப்பட்ட காசோலைகள் (Dishonoured Cheque) அதிக அளவில் நிலுவையில் உள்ளதாக குறிப்பிடப்பட்டு தணிக்கை தடை எழுப்பப்பட்டுள்ளது. இப்பத்தியில் தெரிவித்துள்ளவாறு கோட்ட வாரியான மறுக்கப்பட்ட காசோலைகள் (Dishonoured Cheque) வசூல் செய்ததற்கான DCB நகல் எடுக்கப்பட்டு கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது. 2010 – 2011 ஆம் ஆண்டுகளில் வரி வசூல் ரூ. 46,27,203/- அனைத்தும் பின் வரும் ஆண்டுகளில் வசூலிக்கப்பட்டு விட்டது. இதில் நிலுவை ஏதும் இல்லை.<br>மத்திய வட்டார அலுவலகத்திலிருந்து உதவி வருவாய் அலுவலர் அவர்கள் மூலம் கணினி ஆய்வு செய்து பெறப்பட்ட சுற்றறிக்கையின்படி 2010 – 2011 ஆம் ஆண்டுவரை மறுக்கப்பட்ட காசோலை ஏதும் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. (சுற்றறிக்கை R.O(C)C. No/5227/2019, dt: 13.05.2019) மற்றும் மறுக்கப்பட்ட காசோலைகள் நிலுவையில் இல்லை என்பதற்கான சான்று இணைக்கப்பட்டுள்ளது (zone wise dishonour collection summary) |

| | | | |
|---|---|---|---|
| | | | மேலும், இதில் சென்னை மாநகராட்சிக்கு நிதி இழப்பு ஏதும் இல்லை. எனவே, இத்தணிக்கை தடையினை நீக்கம் செய்யுமாறு வேண்டப்படுகிறது. |

எனவே மேற்கண்ட பதிலினை ஏற்று இத்தணிக்கை தடையை நீக்கம் செய்ய சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(கணக்கு) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 09.11.2020 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“தணிக்கைத்தடையை நீக்கம் செய்ய, சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(கணக்கு) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.**

**********

**ம.அ.9வ.து.ந.க.எண்.ஆர்1/ 04406/ 2020**

**தீர்மானஎண்.387/2021** **நாள்:10-03-2021**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் 9 - கோட்டம் 109 முதல் 126 வரை கொரானா நோய் தொற்று பரவலை தடுப்பு நடவடிக்கை கட்டுப்பாடு விதிக்கப்பட்ட பகுதிகள் மற்றும் கொரோனா நோய் தொற்று பாதிக்கப்பட்டவர்களுக்கு தேவையான அத்தியாவசிய பணிகளை மேற்கொள்வதற்கு தன்னார்வளர் பணியாளர்களை நியமித்து அவ்வப்போது சிறப்பு அதிகாரி மன்றம் அவர்களின் தீர்மானம் பெற்றது - முன் பண கோரியது - முன்பணத்தொகையினை நேர் செய்திட அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-9, கோட்டம் 109 முதல் 126 வரையிலான பகுதிகளில் தற்போது கொரோனா நோய் தொற்று பாதிக்கப்பட்டவர்களின் வீடுகளில் Home Quarantine, Expended Cantacts, Home Isolation ஆகிய வகைப்பாடுகளின் தனிமைப்படுத்தப்பட்ட அனைவரும் விதிகளை மீறி வெளியே சென்று வருவதை தடை செய்திடவும் அவர்கள் மூலமாக ஆரோக்கியமாக உள்ளவர்களுக்கு நோய் தொற்று பரவாமல் தடுத்திடும் வகையிலும், மேலும் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடல் நலம் பெறுவதற்கு வேண்டி தினமும் அவர்களுக்கு அன்றாட தேவையான மருந்து பொருட்கள் மற்றும் அத்தியாவசிய பொருட்கள் வாங்கி தருவதற்கு போதுமான பணியாளர்கள் இல்லாத காரணத்தினால் Revenue and Disaster management Department Disaster Management wing D.M.II Section G.O.(MS) NO.312 Dated.20.062020ன்படி ஆணையர் அவர்களின் ஆலோசனைக்கிணங்க அப்பணிகளை மேற்கொள்ள மொத்தம் 18 கோட்டங்களுக்கு தேவையான 200 தன்னார்வலர் (Focus Valunteers ) பணியாளர்களை அவசர அவசியம் கருதி சிறப்பு அதிகாரி மன்றம் அவர்களின் தீர்மானம் பெற்று பணியமர்வு செய்து மேற்கண்ட பணிகளை அவர்கள் மூலமாக 15.02.2021 வரை மேற்கொள்ளப்பட்டு வந்தது.

இப்பணியின் ஆரம்பக்கட்ட காலத்தில் நோய் தொற்று மிக அதிகமாக இருந்த காரணத்தினால் மண்டலம்-9ஐ பொருத்தவரை ஒவ்வொரு கோட்டங்களிலும் நோய் பரவலின் அதிகரிப்பை பொருத்து ஒவ்வொரு கோட்டத்திலும் 10 முதல் 12 பணியாளர்கள் வீதம் 200 எண்ணிக்கையிலான தன்னார்வல பணியாளர்கள் (Focus Valunteers) மன்ற தீர்மானம் பெறப்பட்டு பணியமர்வு செய்யப்பட்டனர், அவர்களுக்கு 20.06.2020 நாளிட்ட அரசாணையில் நாளொன்றுக்கு ரூ.500/- வீதம் ஒரு மாதத்திற்கு ஊதியமாக ரூ.15000/- வழங்க அரசாணை வெளியிடப்பட்டது அவ்வரசாணையின்படி தற்காலிகமாக நியமனம் செய்யப்பட்ட தன்னார்வல பணியாளர்களுக்கு அவர்களின் வருகை பதிவேட்டின்படி நாளொன்றிற்கு ரூ.500/- வீதம் கணக்கிடப்பட்டு கடந்த 18.06.2020 முதல் மூன்று மாதங்களுக்கு ஊதியம் வழங்கப்பட்டு வந்தது.

அவ்வாறு மூன்று மாதகாலம் (கடந்த 17.09.2020) உடன் முடிவுற்ற நிலையில் நோய் தொற்று தாக்கம் ஒரே நிலையில் நீடித்து இருந்ததால் தன்னார்வலர் பணியாளர்களின் பணி மிகவும் அவசியமான காரணத்தினால் அதே 200 எண்ணிக்கையிலான பணியாளர்களை மேலும் ஒரு மாதத்திற்கு தற்காலிகமாக நீட்டிப்பு செய்திட மன்றத் தீர்மானம் பெறப்பட்டு அவர்களின் பணி நீட்டிப்பு செய்யப்பட்டது. அரசாணையில் குறிப்பிட்ட அதே ஊதியம் அவர்களுக்கு வழங்கப்பட்டது.

முதல் கால நீட்டிப்பு செய்தது 17.10.2020 உடன் முடிவுற்ற நிலையில் கொரோனா நோய் தொற்றின் தாக்கம் சற்று குறைந்திருந்த காரணத்தினால் ஒரு கோட்டத்தில் 7 தற்காலிக தன்னார்வல பணியாளர்கள் வீதம் 18 கோட்டங்களுக்கு 126 எண்ணிக்கையிலான தற்காலிக தன்னார்வல பணியாளர்களை மேலும் ஒரு மாதத்திற்கு (அதாவது 16.10.2020 முதல் 15.11.2020 வரை) கால நீட்டிப்பு செய்திட சிறப்பு அதிகாரி மன்றம் அவர்களின் தீர்மானம் பெறப்பட்டு அவ்வாறு கால நீட்டிப்பு செய்யப்பட்ட பணியாளர்களுக்கும் அரசாணையில் தெரிவிக்கப்பட்டவாறு ஊதியம் கணக்கிடப்பட்டு வழங்கப்பட்டது.

இதே நிலை தொடர்ந்து வந்த நிலையில் நோய் தொற்றின் தாக்கம் சிறிது குறைந்த நிலையில் ஒரு கோட்டத்திற்கு 4 நபர்கள் வீதம் 18 கோட்டங்களுக்கு சுமார் 72 பேர் என ஆட்குறைப்பு செய்யப்பட்டு மேலும் ஒரு மாத காலம் பொது மக்கள் நலன் கருதியும் பணியின் அவசர அவசியம் கருதியும், நோய் தொற்று பாதிப்பை குறைக்கும் நடவடிக்கை பொருட்டு மேலும் ஒரு மாத காலம் இத்தற்காலிக தன்னார்ல பணியாளர்களின் பணி காலம் நீட்டிப்பு செய்து

**ம.அ.9.வ.து.ந.க.எண்.ஆர்1/ 04406/ 2020**

(அதாவது 16.11.2020 முதல் 15.12.2020 வரை) சிறப்பு அதிகாரி மன்றம் அவர்களின் தீர்மானம் பெறப்பட்டது. அவர்களுக்கு அரசாணையில் தெரிவிக்கப்பட்ட ஊதியம் கணக்கிடப்பட்டு வழங்கப்பட்டது.

நோய் தொற்றின் தாக்கம் குறைக்கப்பட்டிருந்தாலும் ஒரே நிலையில் தொடர்ந்து இருப்பதால் அத்தன்னார்வலர்களின் பணிகளை பொது மக்களின் நலன் கருதி தொடர வேண்டிய சூழ்நிலை எற்பட்டதால் ஒரு கோட்டத்திற்கு 4 பேர் வீதம் 18 கோட்டத்திற்கு 72 பேர் என கணக்கிடப்பட்டு, மேலும் ஒரு மாத காலத்திற்கு இப்பணிகளை தோடர தற்காலிக தன்னார்வலர் பணியாளர்களை கால நீட்டிப்பு செய்து ( அதாவது 16.12.2020 முதல் 15.01.2021 வரை) சிறப்பு அதிகாரி மன்றம் அவர்களின் தீர்மானம் பெறப்பட்டது. இவர்களுக்கு அரசாணையில் தெரிவக்கப்பட்டவாறே ஊதியம் கணக்கிடப்பட்டு வழங்கப்பட்டது.

பெருநகர சென்னை மாநகராட்சியின் சீரிய முயற்சியில் கொரோனா நோய் தொற்று பரவுதல் மிகவும் கட்டுக்குள் கொண்டுவரப்பட்ட நிலையில் குறைவான எண்ணிக்கையிலான பாதிக்கப்பட்ட பொது மக்களுக்கு மேற்குறிப்பிட்ட பணிகளை தற்காலிக தன்னார்வல பணியாளர்கள் மூலமாக மேற்கொண்டிட ஏதுவாக ஒரு கோட்டத்திற்கு 4 பேர் என்பதிலிருந்து 2 பேர் என ஆட்குறைப்பு செய்யப்பட்டு 18 கோட்டங்களுக்கு 36 பேர் என நியமித்துக்கொள்ள சிறப்பு அதிகாரி மன்றம் அவர்களின் தீர்மானம் பெறப்பட்டு மேலும் ஒரு மாத காலத்திற்கு கால நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது (அதாவது 16.01.2021 முதல் 15.12.2021 வரை).

பெருநகர சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா நோய் தொற்று பரவல் மிகவும் கட்டுக்குள் கொண்டுவரப்பட்ட நிலையில் அன்றாட ஆய்வறிக்கையில் ( Lab Report ) நோய் பாதிப்புகளின் எண்ணிக்கை மிகவும் குறைவான எண்ணிக்கை என்பதால் பெருநகர சென்னை மாநகராட்சி சுகாதார பணியாளர்களை கொண்டு இப்பணிகளை மேற்கொள்ளலாம் என ஆணையர் கருதியதால் 15.02.2021 நாளிட்ட ஆணையர் அவர்களின் குறிப்பில் தற்காலிக தன்னார்வலர் பணியாளர்களின் கால நீட்டிப்பு அவசியம் இல்லை என குறிப்பில் தெரிவித்துள்ளார். அதன் பொருட்டு அவர்களின் பணி கடந்த 15.02.2021 உடன் முடிவுற்ற நிலையில் மேற்கண்ட அப்பணியாளர்களின் கால நீட்டிப்பிற்கு சிறப்பு அதிகாரி மன்றம் அவர்களின் தீர்மானம் பெறப்படவேண்டிய அவசியம் எற்படவில்லை.

இதுகாரும் கடந்த 18.06.2020 முதல் 15.02.2021 வரை வெவ்வேறு கால கட்டங்களில் தற்காலிக தன்னார்வலர் பணியாளர்களின் எண்ணிக்கை குறைப்பிற்கேற்ப தேவையான நிதியினை பெற்று அவர்களுக்கு ஊதியம் வழங்கும் பொருட்டு பின்வரும் பட்டியலில் கண்டவாறு ஆணையர் அனுமதி பெற்று சிறப்பு அதிகாரி மன்றம் அவர்களின் தீர்மானம் பெறப்பட்டு முன்பணம் பெற்று ஊதியம் வழங்கப்பட்டது.

**அதன் விவரம்**

| S.No | PARTICULARS | AMOUNT |
|---|---|---|
| 1 | JUNE-18 (2020) TO AUG-15 (2020) | Rs.90,00,000/- |
| 2 | AUG-16 (2020) TO SEP-15 (2020)<br>&<br>SEP-16 (2020) TO OCT-15 (2020) | RS.30,00,000/- |
| 3 | OCT-16 (2020) TO NOV-15 (2020) | Rs.18.90,000/- |
| 4 | NOV-16 (2020) TO DEC-15 (2020) | Rs.10,80,000/- |
| 5 | DEC-16 (2020) TO JAN-15 (2021) | Rs.10,80,000/- |
| 6 | JAN- 16 (2021) TO FEB -15 (2021) | Rs.05,40,000/- |
| | **TOTAL** | Rs.1,65,90,000/- |

இதுகாரும் கொரோனா நோய் தொற்று பணியின் பொருட்டு பாதிக்கப்பட்ட பொது மக்களுக்கு தேவையான அத்தியாவசிய பணிகளை மேற்கொள்ள பணியமர்வு செய்யப்பட்ட தற்காலிக தன்னார்வல பணியாளர்களுக்கு மேற்கண்ட பட்டியலில் கண்டவாறு ரூ.1,65,90,000/- முன்பணம் பெறப்பட்டு அதில் ரூ.1,58,98,000/- அவர்களுக்கு ஊதியமாக செலவிடப்பட்டது போக ரூ.6,92,000/- தொகை பெருநகர சென்னை மாநகராட்சி கருவூலத்தில் திருப்பி செலுத்தப்பட்டு

அதற்கான செலுத்து சீட்டு இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது ( செலுத்துச் சீட்டு எண். NT/20-21/0021894) மேற்கண்ட அனைத்து நிகழ்வுகளின் அடிப்படையில் இதுகாரும் தற்காலிக தன்னார்வல பணியாளர்களுக்கு ஊதியம் வழங்குவதற்கு பெறப்பட்ட முன்பணத்தொகை ரூ.1,65,90,000/-ஐ நேர் செய்திட பின்வரும் இனங்களுக்கு ஆணையர் அவர்களின் அனுமதியுடன் சிறப்பு அதிகாரி மன்றம் அவர்களின் தீர்மானம் வேண்டப்படுகிறது.

எனவே,

அ) பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-9, கோட்டம் 109 முதல் 126 வரை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா நோய் தொற்று பாதிக்கப்பட்ட பொது மக்களுக்கு நோய் தடுப்பின் அத்தியாவசியம் கருதி அவர்களுக்கு தேவையான அத்தியவசிய மருந்து பொருட்களை பெற்று தருவதற்கு போதுமான பணியாளர்கள் மாநகராட்சியில் இல்லாத காரணத்தினால் அரசின் அனுமதி பெற்று தற்காலிக தன்னார்வல பணியாளர்களை பணியமர்வு செய்து வெவ்வேறு கால கட்டங்களில் நோய் தொற்றின் பாதிப்பின் குறைப்பிற்கேற்ப பணியாளர்களின் எண்ணிக்கையை குறைத்து அரசாணை நிலை எண்.312, நாள்.20.06.2020 தெரிவிக்கப்பட்டவாறு நாளொன்று ஒரு நபருக்கு ரூ.500/- என கணக்கிடப்பட்டு 18.06.2020 முதல் 15.09.2020 வரை காலத்திற்கான **ரூ.90,00,000/-**, 16.09.2020 முதல் 15.102020 வரை காலத்திற்கான **ரூ.30,00,000/-**, 16.10.2020 முதல் 15.11.2020 வரை காலத்திற்கான **ரூ.18,90,000/-**, 16.11.2020 முதல் 15.12.2020 வரை காலத்திற்கு **ரூ.10,80,000/-**, 16.12.2020 முதல் 15.01.2021 வரை காலத்திற்கான ரூ.10,80,000/-, 16.01.2021 முதல் 15.02.2021 வரை காலத்திற்கான **ரூ.5,40,000/-** ஆக மொத்தம் இதுவரை ரூ.1,65,90,000/- முன் பணமாக பெறப்பட்டதற்கு கணக்கு குறியீட்டு எண் மற்றும் கணக்கு தலைப்பு எண்.20-21-07/230-70-12-03ல் போதிய நிதி ஒதுக்கீடு செய்திடவும்,

ஆ) அவ்வாறு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியினை இதுகாரும் ஆணையர் அவர்களின் அனுமதியும் மன்ற தீர்மானம் பெற்று முன்பணமாக பெற்ற தொகையான ரூ.1,65,90,000/-ல் இதுகாரும் ஊதியம் வழங்கப்பட்ட தொகை ரூ.1,58,98,000/- போக மீதமுள்ள தொகை ரூ.6,92,000/- கருவூலத்தில் செலுத்தியதுடன் சேர்த்து மொத்த தொகையினை (ரூ.1,65,90,000/- ஒரு கோடியே அறுபத்து ஐந்து லட்சத்து தொண்ணூறு ஆயிரம் மட்டும்) கணக்கு குறியீட்டு எண் மற்றும் தலைப்பு குறியீட்டு எண்.20-21-07/230-70-12-03ல் நேர் செய்திடவும்,

மேற்கண்ட அ மற்றும் ஆ ஆகிய இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 24.02.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"முன்பண தொகையினை நேர் செய்திட, அ மற்றும் ஆ ஆகிய இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

********

**பொ.து.ந.க.எண்.இ7/ 27948/2020 &**
**ம.சே.து.ந.க.எண்.எப்5/2437/2019**

**தீர்மானஎண்.388/2021** **நாள்:12-03-2021**

**பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - மருத்துவ சேவைகள் துறை - திருமதி.M.வினோலியா, பகுதி சுகாதார செவிலியர், வி.ஆர்.நகர். நகர ஆரம்ப சுகாதார நிலையம், தண்டையார்பேட்டை மருத்துவ மண்டலம் (ஊதியம் இராயபுரம் மருத்துவ மண்டலம் - 5 ) - தொடர்ந்து மருத்துவ விடுப்பு துய்த்தது - தனியரின் மருத்துவ சான்றிதழ்களை மருத்துவ குழுவிற்கு அனுப்பப்பட்டது - மருத்துவ குழு மருத்துவ இயலாமை வழங்க மருத்துவ அறிக்கை பெறப்பட்டது - மருத்துவ இயலாமை வழங்குவதற்கு தொடர் நடவடிக்கை எடுத்து வந்த நிலையில் தனியர் 07.01.2020 அன்று காலமானார் - 26.11.2019 முதல் மருத்துவ இயலாமை ஓய்வில் சென்றவராக கருதி ஆணை வழங்க அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மருத்துவ சேவைகள் துறை, தண்டையார்பேட்டை மருத்துவ மண்டலம், வி.ஆர்.நகர் நகர ஆரம்ப சுகாதார நிலையத்தில் (ஊதியம் இராயபுரம் மருத்துவ மண்டலம் - 5) பகுதி சுகாதார செவிலியராக பணிபுரிந்து வந்த தனியர் திருமதி. M. வினோலியா 21.02.1987 அன்று பல்நோக்கு சுகாதார பணியாளராக பணியில் சேர்ந்தார். இப்பதவியில் 21.02.1987 அன்று பணிவரன்முறைப்படுத்தியும், 18.07.1989 அன்று தகுதிகாண்பருவம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. தனியர் 04.10.2018 அன்று தண்டையார்பேட்டை மருத்துவ மண்டலத்தில் பகுதி சுகாதார செவிலியராக பதவி உயர்வு பெற்று பணிபுரிந்து வந்த நிலையில் நீரிழிவு நோய் காரணமாக 14.02.2019 முதல் மருத்துவ சான்றிதழ் அளித்து தொடர்ந்து பணிக்கு வராமல் இருந்ததால், அன்னாரை மருத்துவ குழு பரிசோதனைக்குட்படுத்தி அவரது உடல்நிலை குறித்து மருத்து அளிக்கை அளிக்குமாறு இயக்குநர், அரசு கஸ்தூரிபா காந்தி மருத்துவமனைக்கு (Medical Board) 08.08.2019 நாளிட்ட கடிதம் அனுப்பப்பட்டது.

சமூக மகப்பேறியல் இயக்குநர் (மு.கூ.பொ), சமூக மகப்பேறியல் நிலையம் மற்றும் அரசினர் கஸ்தூரிபா காந்தி தாய்சேய் நல மருத்துவமனை அவர்களிடமிருந்து 26.11..2019 அன்று வழங்கப்பட்ட மருத்துவ அறிக்கையில் **" Chronic Kidney Disease Stage -V on thrice weekly Hemodialysis since march 2019. As per Nephrologist RGGH Patient is unfit to continue service and recemmended invalidation on medcial grounds"** என அறிக்கை பெறப்பட்டது. இதன்தொடர்பாக மருத்துவ இயலாமை ஓய்வு வழங்குவதற்கு தனியர் மீது தணிக்கை தடைகள் மற்றும் ஒழுங்கு நடவடிக்கை, குற்றவியல் நடவடிக்கை மற்றும் பணிபுரிந்த மண்டலங்களில் தடையில்லா சான்று பெறுவதற்கு கோப்பில் மேல் நடவடிக்கை தொடரப்பட்டது.

தனியர் மருத்துவ இயலாமை பெற்ற நாளன்று 55 வயதினை பூர்த்தி செய்துள்ளார். அன்னாரின் மொத்த பணிக்காலம் மருத்துவ இயலாமை சான்றின்படி 32 ஆண்டுகள் 09 மாதங்கள் 05 நாட்கள் ஆகும். தனியரின் பிறந்த நாள்-15.07.1964. அரசு பணிவிதிகளின்படி தனியர் வயது முதிர்வில் ஓய்வு பெறும் தகுதியான நாள் 31.07.2023. தனியரது தாய்மொழி தெலுங்கு ஆகும். தனியர் Tamil Nadu Public Service Commission Language Test in Tamil தேர்ச்சி பெற்றுள்ளார்.

இந்நிலையில், திருமதி. M. வினோலியா, பகுதி சுகாதார செவிலியர் இராயபுரம் மருத்துவ மண்டலம் அவர்கள் 07.01.2020 அன்று காலமானார் என்ற விவரம் தனியரின் மகனான அருண்குமார் அவர்களின் 08/01/2020 நாளிட்ட கடிதத்தின் மூலமாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

**பொ.து.ந.க.எண்.இ7/ 27948/ 2020 &**
**ம.சே.து.ந.க.எண்.எப்5/ 2437/ 2019**

இணை ஆணையர் அவர்களின் 06.02.2020 நாளிட்ட குறிப்பில் திருமதி. M. வினோலியா, பகுதி சுகாதார செவிலியர், இராயபுரம் மருத்துவ மண்டலம் அவர்கள் 07.01.2020 அன்று காலமானதை தொடர்ந்து தனியருக்கு பணி ஒய்வு பணபயன்களை உடனடியாக வழங்குமாறு தெரிவிக்கப்பட்டதால் தனியரின் கோப்பு மற்றும் பணிப்பதிவேடு ஓய்வூதிய பிரிவிற்கு 07.02.2020 நாளிட்ட குறிப்பின் மூலம் அனுப்பப்பட்டது.

இந்நிலையில் பெருநகர மருத்துவ அலுவலர் அவர்களின் 27.10.2020 நாளிட்ட குறிப்பில், காலமான திருமதி. M. வினோலியா, பகுதி சுகாதார செவிலியர், இராயபுரம் மருத்துவ மண்டலம் அவர்களின் மகன் தனக்கு கருணை அடிப்படையில் பணி வழங்க கோரி கடிதம் அளித்துள்ளார் என்றும், இக்கோப்பின் மீது மேல் நடவடிக்கை தொடர்வதற்கு, தனியரை மருத்துவ இயலாமை ஒய்வாக கருதுவதா? அல்லது இறப்பு கால நிகழ்வாக கருதுவதா? என்று அரசு விதிகளின்படி உரிய அலுவலரின் ஆணை பெற்று அனுப்புமாறு தெரிவித்து கோப்பு மற்றும் பணிப்பதிவேடு பெறப்பட்டது.

எனவே, திருமதி. M. வினோலியா, பகுதி சுகாதார செவிலியர் அவர்கள் 07.01.2020 அன்று காலமானதால், தமிழ் நாடு அரசு ஊழியர் அடிப்படை விதி 24(b)ன்படி ***"If the Medical Committee declares the Government servant to be completely and permanently incapacitated for further service, in India, the Government servant should, except as provided in clause (c) below, be invalided from the service, either on the expiration of the leave already granted to him, if he is on leave when examined by the Committee or if he is not on leave, from the date of relief of his duties, which should be arranged without delay on receipt of the Committee's report."*** இவ்விதிகளின்படியும், மற்றும் 26.11.2019 நாளிட்ட சமூக மகப்பேறியல் இயக்குநர் (மு.கூ.பொ), சமூக மகப்பேறியல் நிலையம் மற்றும் அரசினர் கஸ்தூரிபா காந்தி தாய்சேய் நல மருத்துவமனை அவர்களின் மருத்துவ அறிக்கையின்படியும் தனியரை 26.11.2019 முதல் மருத்துவ இயலாமை ஓய்வில் சென்றவராக கருதி ஆணை வழங்குவதற்கு, சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 10.12.2020 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"மருத்துவ இயலாமை ஓய்வில் சென்றவராக கருதி ஆணை வழங்க, சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

********

**பொ.து.ந.க.எண்.இ7/ 7517/ 2021 &**
**ம.சே.து.ந.க.எண்.எப்7/ 051/ 2021**

**தீர்மானஎண்.389/2021** **நாள்:12-03-2021**

**பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - மருத்துவ சேவைகள் துறை - திரு ஜி. கண்ணன், புள்ளியியல் உதவியாளர் அவர்கள் 05.04.2021 அன்று பிற்பகல் முதல் தன் விருப்ப ஓய்வில் செல்வதற்கு அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மருத்துவ சேவைகள் துறை, திரு ஜி. கண்ணன், புள்ளியியல் உதவியாளர் (தலைமையிடம்) பணிபுரியும், அவர்கள் தனது உடல் நிலை சரியில்லாத காரணத்தாலும், குடும்ப சூழ்நிலை காரணத்தாலும் பணிக்கு வர இயலாத நிலையில் உள்ளதால் தன் விருப்ப ஓய்வு வழங்க கோரி சிறப்பு அதிகாரி (மன்றம்) அவர்களிடம் 06.01.2021 நாளிட்ட மனு அளித்துள்ளார்.

திரு ஜி. கண்ணன், புள்ளியியல் உதவியாளர் அவர்கள் 18.06.1986 முதல் 31.05.1989 வரை தொகுப்பாளர் மற்றும் எழுத்தராகவும் மற்றும் 01.06.1989 முதல் இந்நாள் வரை புள்ளியியல் உதவியாளராக தொடர்ந்து பணியாற்றி வருகிறார். இப்பதவியில் 18.06.1986 அன்று பணிவரன்முறைப்படுத்தியும், 18.06.1988 அன்று தகுதிகாண்பருவம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. தனியரது தாய்மொழி தெலுங்கு ஆகும் தனியர் பத்தாம்வகுப்பு தேர்வில் தமிழில் தேர்ச்சி பெற்றுள்ளார்.

இயக்குநர், மாநில விழிப்பு மற்றும் லஞ்ச ஒழிப்பு அவர்களின் 10.02.2021 நாளிட்ட கடிதத்தில் மேற்படி தனியர் மீது விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என்று சான்று அளிக்கப்பட்டுள்ளது.

மருத்துவ சேவைகள் துறை தணிக்கை பிரிவின் 11.02.2021 நாளிட்ட குறிப்பில், தனியர் மருத்துவ சேவைகள் துறையில் 18.06.1986 முதல் இன்னாள் வரை பணியாற்றிய காலத்திற்கு தனியர் மீது தணிக்கைத் தடை பத்தி நிலுவை இல்லையெனவும், மேலும் 2019-20 மற்றும் 2020 – 2021 ஆம் ஆண்டிற்கான உள்ளாட்சி நிதி தணிக்கை தடை புத்தகம் வெளி வந்தவுடன் தணிக்கைதடை நிலுவை குறித்து பின்னர் தெரியவரின் தனியர் மீது பொறுப்பு நிர்ணயிக்கப்படும் என்ற நிபந்தனையுடன் தன் விருப்ப ஓய்வில் செல்ல அனுமதிக்கலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சி, கூட்டுறவு அலுவலக சங்கத்தின் 23.02.2021 நாளிட்ட கடிதத்தில், தனியர் இச்சங்கத்தில் உறுப்பினர் இல்லை என்று சான்று அளிக்கப்பட்டுள்ளது.

கண்காணிப்பாளர், மருத்துவ சேவைகள்துறை,அவர்களின் 24.02.2021 நாளிட்ட குறிப்பின்படி தனியர் மீது ஒழுங்கு நடவடிக்கை ஏதும் இல்லை என தெவித்துள்ளார்.

விழிப்பு அலுவலர் அவர்களின் 23.02.2021 நாளிட்ட கடிதத்தில் பெருநகர சென்னை மாநகராட்சி, விழிப்பு குழுமத்தில் தனியர் மீது விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என்று சான்று அளிக்கப்பட்டுள்ளது.

துணை திட்ட ஒருங்கிணைப்பாளர் (பொ) மருத்துவ சேவைகள் துறை, (தலைமையிடம்) அவர்களின் 04.03.2021 நாளிட்ட கடிதத்தில், தனியர் மீது தணிக்கை தடை, மற்றும் ஒழுங்கு நடவடிக்கை ஏதும் இல்லை என்று சான்று அளிக்கப்பட்டுள்ளது.

தனியர் தன் விருப்ப ஓய்வுக்கு விண்ணப்பித்த நாளன்று 58 வயதினை பூர்த்தி செய்துள்ளார். அன்னாரின் மொத்த பணிக்காலம் 34 ஆண்டுகள் 09 மாதங்கள் 17 நாட்கள் ஆகும். தனியரின் பிறந்த நாள் - 17.06.1962. அரசு பணிவிதிகளின்படி தனியர் வயது முதிர்வில் ஓய்வு பெறும் தகுதியான நாள் 30.06.2022.

**பொ.து.ந.க.எண்.இ7/ 7517/ 2021 &**
**ம.சே.து.ந.க.எண்.எப்7/ 051/ 2021**

அரசாணை எண்.350, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்த்திருத்த துறை நாள்: 07.10.1991ன்படியும், அரசாணை எண்.376, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்த்திருத்த துறை, நாள்: 11.12.1995ன்படியும், தனியர் 34 ஆண்டுகள் 09 மாதங்கள் 17 நாட்கள் பணிநிறைவு செய்துள்ளதாலும், தன் விருப்ப ஓய்விற்கு 90 நாட்கள் முன்னறிவிப்பு கடிதம் சிறப்பு அதிகாரி (மன்றம்) அவர்களிடம் வழங்கியுள்ளதாலும், சிறப்பு அதிகாரி (மன்றம்) அவர்களின் அனுமதி பெற்று தன் விருப்ப ஓய்வில் செல்ல அனுமதிக்கலாம்.

எனவே, மேலே தெரிவிக்கப்பட்ட விவரங்களின் அடிப்படையில் திரு ஜி. கண்ணன், புள்ளியியல் உதவியாளர் மருத்துவ சேவைகள் துறை (தலைமையிடம்) அவர்கள் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை, நிதி இழப்பீடு, 2019 - 2020 மற்றும் 2020-2021. ஆம் ஆண்டிற்கான உள்ளாட்சி நிதி தணிக்கை தடை புத்தகம் வெளிவந்தவுடன் ஏதேனும் தணிக்கை தடை மற்றும் நீண்ட கால முன்பணம் சரிசெய்யப்படாமல் நிலுவையில் இருப்பது பின்னர் தெரியவரின் இதனை தனியரது ஓய்வூதிய பணிக்கொடை தொகையிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டு, 05.04.2021 அன்று பிற்பகல் முதல் தன் விருப்ப ஓய்வில் செல்ல சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 12.03.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“தன் விருப்ப ஓய்வில் செல்ல சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.**

************

ப.து.ந.க.எண்.டி1/ 0056/ 2021

தீர்மான எண். 390/2021 நாள்:16-03-2021

## தானப்பத்திரம்

மண்டலம்-04, கோட்டம்-48ல் Thiru. N. Muralikrishnan அவர்கள் பழைய கதவு எண்.343/1, புதிய கதவு எண்.1045, திருவொற்றியூர் நெடுஞ்சாலை, பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை- 600021, R.S.No.2575/4, பிளாக் எண்.41, தண்டையார்பேட்டை கிராமம் என்ற இடத்திற்கு திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வேண்டி பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-04 ல் PPA/WDCN04/05275/2020 நாள்.08.09.2020ன்படி விண்ணப்பித்துள்ளார்கள். அவர்கள் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வேண்டி விண்ணப்பித்த இடத்திற்கு அணுகு சாலையாக திருவொற்றியூர் நெடுஞ்சாலை, அமைய பெற்றுள்ளது. இரண்டாம் முழுமைத் திட்டத்தின்படி திருவொற்றியூர் நெடுஞ்சாலை 27.00 மீ அகல சாலையாக விரிவாக்கம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் விதிகளின்படி, சாலை விரிவாக்கத்திற்கான நிலத்தினை தானப்பத்திரம் மூலம் உள்ளாட்சி அமைப்புகளிடம் மனை உரிமையாளர் ஒப்படைத்த பிறகு தான் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வழங்க இயலும். ஆகவே மனுதாரர் தங்களுக்கு சொந்தமான நிலத்திலிருந்து சாலை விரிவாக்கம் செய்ய மனையின் நீளம் 1.52 மீட்டர் மற்றும் அகலம் ஒருபுறம் 8.26 மீட்டர் மற்றொரு பக்கம் 8.53 மீட்டர் ஆக மொத்தம் 12.75 ச.மீ. நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தானப்பத்திரம் மூலம் வழங்க ஒப்புதல் அளித்துள்ளார்.

பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்கபடவுள்ள நிலத்தை தானமாக பெற்றுக் கொள்ளலாம் என கருதப்படுகிறது.

எனவே,

(1) மனை உரிமையாளர் Thiru. N. Muralikrishnan அவர்கள் பழைய கதவு எண்.343/1, புதிய கதவு எண்.1045, திருவொற்றியூர் நெடுஞ்சாலை, பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை 600021, R.S.No.2575/4, பிளாக் எண்.41, தண்டையார்பேட்டை கிராமம் என்ற இடத்தில் அமைந்துள்ள மனையில் சாலை விரிவாக்கம் செய்ய 12.76 ச.மீ. பரப்பளவு நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சி தானப்பத்திரம் மூலம் பெற்றுக் கொள்ளவும்,

(2) தானமாக வழங்கப்பட்ட பகுதியில் சாலை விரிவாக்கப் பணிகளை மேற்கொள்ள செலவாகும் தொகை ரூ.26,000/- (ரூபாய் இருபத்தி ஆறாயிரம் மட்டும்) மனை உரிமையாளர் Thiru. N. Muralikrishnan அவர்களிடம் இருந்து ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி என்கின்ற பெயரில் வரைவு காசோலையாக பெறவும்,

மேற்கண்ட *1* மற்றும் *2* ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(நகரமைப்பு) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 24.02.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“தானப்பத்திரம், *1* மற்றும் *2* ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(நகரமைப்பு) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.**

********

**பது.நக.எண்.டி1/ 0061/ 2021**

**தீர்மான எண். 391/2021** **நாள்:16-03-2021**

## தானப்பத்திரம்

மண்டலம்-04, கோட்டம்-45ல் Thiru. A. B. Venkatanarayana அவர்கள் கதவு எண்.13/14, Stephenson Road, வியாசர்பாடி, சென்னை 600039, T.S.No.505/39, பிளாக் எண்.26, பெரம்பூர் கிராமம் என்ற இடத்திற்கு திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வேண்டி பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-04 ல் PPA/WDCN04/00358/2021 நாள்.18.01.2021ன்படி விண்ணப்பித்துள்ளார்கள். அவர்கள் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வேண்டி விண்ணப்பித்த இடத்திற்கு அணுகு சாலையாக Stephenson Road, அமைய பெற்றுள்ளது. இரண்டாம் முழுமைத் திட்டத்தின்படி Stephenson Road 18.00மீ அகல சாலையாக விரிவாக்கம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் விதிகளின்படி, சாலை விரிவாக்கத்திற்கான நிலத்தினை தானப்பத்திரம் மூலம் உள்ளாட்சி அமைப்புகளிடம் மனை உரிமையாளர் ஒப்படைத்த பிறகு தான் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வழங்க இயலும். ஆகவே மனுதாரர் தங்களுக்கு சொந்தமான நிலத்திலிருந்து சாலை விரிவாக்கம் செய்ய மனையின் நீளம் 0.65 மீட்டர் மற்றும் அகலம் 9.10 மீட்டர் ஆக மொத்தம் 5.92 ச.மீ. நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தானப்பத்திரம் மூலம் வழங்க ஒப்புதல் அளித்துள்ளார்.

பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்கபடவுள்ள நிலத்தை தானமாக பெற்றுக் கொள்ளலாம் என கருதப்படுகிறது.

எனவே,

(1) மனை உரிமையாளர் Thiru. A. B. Venkatanarayana அவர்கள் கதவு எண்.13/14, Stephenson Road, வியாசர்பாடி, சென்னை 600039, T.S.No.505/39, பிளாக் எண்.26, பெரம்பூர் கிராமம் என்ற இடத்தில் அமைந்துள்ள மனையில் சாலை விரிவாக்கம் செய்ய 5.92 ச.மீ. பரப்பளவு நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சி தானப்பத்திரம் மூலம் பெற்றுக் கொள்ளவும்,

(2) தானமாக வழங்கப்பட்ட பகுதியில் சாலை விரிவாக்கப் பணிகளை மேற்கொள்ள செலவாகும் தொகை ரூ.12,100/-ஐ (ரூபாய் பன்னிரெண்டாயிரத்து நூறு மட்டும்) மனை உரிமையாளர் Thiru. A. B. Venkatanarayana அவர்களிடம் இருந்து ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி என்கின்ற பெயரில் வரைவு காசோலையாக பெறவும்,

மேற்கண்ட *1* மற்றும் *2* ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(நகரமைப்பு) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 26.02.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“தானப்பத்திரம், *1* மற்றும் *2* ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(நகரமைப்பு) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.**

********

**ப.து.ந.க.எண். *PPA/WDCN05/ 04428/ 2020***

**தீர்மான எண். 392/2021** **நாள்:16-03-2021**

## தானப்பத்திரம்

மண்டலம்-05, கோட்டம்-57ல் Sri Kanyaka Parameswari Devasthanam & Charities அவர்கள் பழைய கதவு எண்.5, புதிய கதவு எண்.11, அண்ணாபிள்ளை தெரு, சௌகார்பேட்டை, கொத்தவால்சாவடி, சென்னை R.S.No.11102, பிளாக் எண்.89, V.O.C.கிராமத்தில் அமைந்துள்ள இடத்திற்கு திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வேண்டி பெருநகர சென்னை மாநகராட்சி தலைமையகத்தில் PPA/WDCN05/04428/2020 நாள்.14.07.2020ன்படி விண்ணப்பித்துள்ளார்கள். அவர்கள் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வேண்டி விண்ணப்பித்த இடத்திற்கு அணுகு சாலையாக அண்ணாபிள்ளை தெரு அமைய பெற்றுள்ளது. இரண்டாம் முழுமைத் திட்டத்தின்படி அண்ணாபிள்ளை தெரு 18.00மீ அகல சாலையாக விரிவாக்கம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் விதிகளின்படி, சாலை விரிவாக்கத்திற்கான நிலத்தினை தானப்பத்திரம் மூலம் உள்ளாட்சி அமைப்புகளிடம் மனை உரிமையாளர் ஒப்படைத்த பிறகு தான் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வழங்க இயலும். ஆகவே மனுதாரர் தங்களுக்கு சொந்தமான நிலத்திலிருந்து சாலை விரிவாக்கம் செய்ய 23.25ச.மீ பரப்பளவு நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தானப்பத்திரம் மூலம் வழங்க ஒப்புதல் அளித்துள்ளார்.

பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்கபடவுள்ள நிலத்தை தானமாக பெற்றுக் கொள்ளலாம் என கருதப்படுகிறது.

எனவே,

(1) Sri Kanyaka Parameswari Devasthanam & Charities அவர்களின் பழைய கதவு எண்.5, புதிய கதவு எண்.11, அண்ணாபிள்ளை தெரு, சௌகார்பேட்டை கொத்தவால்சாவடி, சென்னை R.S.No.11102, பிளாக் எண்.89, V.O.C. கிராமத்தில் அமைய பெற்றுள்ள மனையில் சாலை விரிவாக்கத்திற்காக தானப்பத்திரம் மூலம் 23.25ச.மீ பரப்பளவு நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சி தானமாக பெற்றுக் கொள்ளவும்,

(2) தானமாக வழங்கப்பட்ட பகுதியில் சாலை விரிவாக்கப் பணிகளை மேற்கொள்ள செலவாகும் தொகை ரூ.60,000/-ஐ (ரூபாய் அறுபதாயிரம் மட்டும்) விண்ணப்பதாரரிடமிருந்து ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி என்கின்ற பெயரில் வரைவு காசோலையாக பெறவும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(நகரமைப்பு) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 26.02.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“தானப்பத்திரம், 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(நகரமைப்பு) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.**

********

**ப.து.ந.க.எண்.*A5/PPA/WDCN09/ 00443/ 2021***

**தீர்மான எண். 393/2021** **நாள்:16-03-2021**

## தானப்பத்திரம்

மண்டலம்-09, கோட்டம்-121ல் M/s. Reva represented by authorized Signatory திரு. Lalith Surana அவர்களின் கதவு எண்.*9L*, டாக்டர் ராதாகிருஷ்ணன் *4*வது தெரு, மயிலாப்பூர், சென்னை- 600004, R.S.No.1738/13, Block No.37, மயிலாப்பூர் கிராமத்தில் அமைந்துள்ள இடத்திற்கு திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வேண்டி பெருநகர சென்னை மாநகராட்சி தலைமையகத்தில் PPA/WDCN09/00443/2021 நாள்.20.01.2021ன்படி விண்ணப்பித்துள்ளார்கள். அவர்கள் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வேண்டி விண்ணப்பித்த இடத்திற்கு அணுகு சாலையாக, வடக்கு பக்கம் டாக்டர் ராதாகிருஷ்ணன் சாலை மற்றும் கிழக்கு பக்கம் டாக்டர் ராதாகிருஷ்ணன் *4*வது தெரு அமைய பெற்றுள்ளது. இரண்டாம் முழுமைத் திட்டத்தின்படி வடக்கு பக்கம் அமைந்துள்ள டாக்டர் ராதாகிருஷ்ணன் சாலை 30.50மீ அகல சாலையாக விரிவாக்கம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் விதிகளின்படி, சாலை விரிவாக்கத்திற்கான நிலத்தினை தானப்பத்திரம் மூலம் உள்ளாட்சி அமைப்புகளிடம் மனை உரிமையாளர் ஒப்படைத்த பிறகு தான் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வழங்க இயலும். ஆகவே மனுதாரர் தங்களுக்கு சொந்தமான நிலத்திலிருந்து சாலை விரிவாக்கம் செய்ய 79.67ச.மீ பரப்பளவு நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தானப்பத்திரம் மூலம் வழங்க இசைவு அளித்துள்ளார்.

பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்கபடவுள்ள நிலத்தை தானமாக பெற்றுக் கொள்ளலாம் என கருதப்படுகிறது.

எனவே,

(1) M/s. Reva represented by authorized Signatory திரு. Lalith Surana அவர்களின் கதவு எண்.*9L*, டாக்டர் ராதாகிருஷ்ணன் *4*வது தெரு, மயிலாப்பூர், சென்னை 600004, R.S.No.1738/13, Block No.37, மயிலாப்பூர் கிராமத்தில் அமைய பெற்றுள்ள மனையில் டாக்டர் ராதாகிருஷ்ணன் சாலை விரிவாக்கத்திற்காக தானப்பத்திரம் மூலம் 79.67ச.மீ பரப்பளவு நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தானமாக பெற்றுக் கொள்ளவும்,

(2) தானமாக வழங்கப்பட்ட பகுதியில் சாலை விரிவாக்கப் பணிகளை மேற்கொள்ள செலவாகும் தொகை ரூ.1,53,700/- ஐ (ரூபாய் ஒரு லட்சத்து ஐம்பத்தி மூன்றாயிரத்து ஏழுநூறு மட்டும்) விண்ணப்பதாரரிடமிருந்து ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி என்கின்ற பெயரில் வரைவு காசோலையாக பெறவும்,

மேற்கண்ட *1* மற்றும் *2* ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(நகரமைப்பு) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 11.03.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"தானப்பத்திரம், *1* மற்றும் *2* ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(நகரமைப்பு) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

************

**சு.து.நகஎண்.B2/ 5605/ 2020**

**தீர்மானஎண்.394/2021** **நாள்:16-03-2021**

**பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுசுகாதாரத்துறை - நோவல் கொரோனா நோய் தடுப்பு பணி - பேரிடர் பணிகள் மேற்கொள்ள -அவசர அவசியம் கருதி 175 கணிணி பதிவாளர்களை 01.04.2020 முதல் 31.12.2020 வரையில் 9 மாத காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் M/s. Somesh Enterprises நிறுவனம் மூலம் பணியமர்த்தப்பட்டு, மேலும் 57 கணினி பதிவாளர்களை (01.01.2021 முதல் 31.03.2021) 3 மாத காலத்திற்கு பணி நீட்டிப்பு செய்யப்பட்டது , கொரோனா நோய் தடுப்பு பணிகள் தொடர்ந்து மேற்கொள்ள ஏதுவாக மேலும் 01.04.2021 முதல் 30.06.2021 வரை பணி நீட்டிப்பு செய்ய அனுமதி.**

நோவல் கொரோனா வைரஸ் காய்ச்சல் (COVID - 19 ) உலகமெங்கும் பரவியுள்ள நிலையில் உலக சுகாதார நிறுவனம் (WHO) உலகமெங்கும் அவசர நிலையினை (Public Health Emergency of International Concern (PHEIC)) பிரகடனப்படுத்தியுள்ளது. மேலும் கட்டுப்படுத்தக்கூடிய தொற்று நோயாகவும் (Controllable Pandemic) அறிவித்துள்ளது. நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை (P1) துறையின் அரசாணை (Ms) எண்.95 நாள்.13.03.2020ல் நோவல் கொரோனா வைரஸ் காய்ச்சல் (COVID-19) அறிவிக்கப்பட்ட நோயாக (Notified disease) அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழக அரசின் உத்திரவின்படி பெருநகர சென்னை மாநகராட்சி, பொது சுகாதாரத்துறை சார்பில் நோவல் கொரோனா வைரஸ் காய்ச்சல் (COVID - 19 ) பரவாமல் தடுக்க பல்வேறு நடிவடிக்கைகளை எடுத்து வருகின்றது.

சிறப்பு அதிகாரி/மன்றத்தீர்மான எண். 861/2020 நாள்:28.10.2020ல், நோவல் கொரோனா நோய் தடுப்பு பணி மற்றும் பேரிடர் பணிகள் மேற்கொள்ள, மாநகராட்சி பல்வேறு துறைகள், மாநகராட்சி கட்டுப்பாட்டு அறை, இயக்குநகரகம், பொதுசுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்புத்துறை, கிங் இன்ஸ்டிடியூட், மற்றும் அரசு மருத்துவமனைகளில் அவசர அவசியம் கருதி 175 கணினி பதிவாளர்கள் 01.04.2020 முதல் 31.12.2020 வரையில் 9 மாத காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் M/s. Somesh Enterprises நிறுவனம் மூலம் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

| Sl.No | Name of the Post | Basic Pay (Rs) | EPF (13%) | ESI (3.25 %) (Rs) | Admin Charges | GST (18%) (1+2+3+4) | Total (1+2+3+4+5+6) | Required Number of Staff | Total (Nine months) Rs. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 1 | Data Entry Operator | 13020 | 1693 | 423 | 1000 | 2904 | 19040 | 175 | 2,99,88,000 |

தற்போது கோவிட் நோய் தொற்று குறைந்து வருகின்றது. இருப்பினும் கீழ்க்கண்ட இடங்களில் கணினி பதிவாளர்கள் கோவிட் சம்பந்தமான பணிகளை தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றனர்.

சிறப்பு அதிகாரி/மன்றத்தீர்மான எண். 165/2021 நாள்: 15.02.2021ல், மேற்கண்ட இடங்களில் மாநகராட்சி சார்பாக இந்த கணினி பதிவாளர்கள் அறிக்கை தயாரிக்க மற்றும் கணினி சம்பந்தமான பணிகளுக்கும் அத்தியாவசியமாக தேவைப்படுகின்றனர். எனவே, 57 கணினி பதிவாளர்களை மட்டும் (01.01.2021 முதல் 31.03.2021 வரை) மூன்று மாத காலத்திற்கு பணி நீட்டிப்பு செய்து ஆணை பெறப்பட்டுள்ளது.

| Sno | Name of the Department and DEO working place | No of DEOs |
|---|---|---|
| 1 | GCC-Covid-19 Control Room- 2 shifts | 19 |
| 2 | MMC | 8 |

| | | |
|---|---|---|
| 3 | Stanley Medical College | 5 |
| 4 | Kilpauk Medical College | 4 |
| 5 | Omandurar Medical College | 3 |
| 6 | King Institute | 12 |
| 7 | DPH Office (SPHL) | 6 |
| | | 57 |

| Sl.No | Name of the Post | Basic Pay (Rs) | EPF (13%) | ESI (3.25 %) (Rs) | Admin Charges | GST (18%) (1+2+3+4) | Total (1+2+3+4+5+6) | Required Number of Staff | Total (Three months) Rs. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 1 | Data Entry Operator | 13020 | 1693 | 423 | 1000 | 2904 | 19040 | 57 | 32,55,840 |

செயற்பொறியாளர் (இயந்திரப்பொறியியல் துறை) அவர்களின் 10.03.2021 நாளிட்ட கடிதத்தில் Covid 19 Admission Desk மாநகராட்சி கட்டுப்பாட்டு அறையில் செயல்பட்டு வருவதாகவும், இதில் 6 கணினி பதிவாளர்கள் பணிபுரிந்து வருவதாகவும், இவர்கள் M/s. Somesh Enterprises நிறுவனம் மூலம் பணியமர்த்தப்பட்டுள்ளதாகவும், இவர்களுக்கு ஜனவரி 2021 முதல் இதுநாள் வரையில் ஊதியம் வழங்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த 6 கணினி பதிவாளர்களுக்கும் M/s. Somesh Enterprises நிறுவனம் மூலம் பணியமர்த்தப்பட்டு டிசம்பர் 2020 வரை ஊதியம் வழங்கப்பட்டுள்ளது. பணிநீட்டிப்பில் இந்த 6 கணினி பதிவாளர்களும் விடுபட்டுள்ளனர். இவர்களுக்கும் ஜனவரி 2021 முதல் மார்ச் 2021 வரை ஊதியம் வழங்கப்பட வேண்டும்.

| Sl.No | Name of the Post | Salary per Month (Rs) | EPF (13%) (Rs) | ESI (3.25 %) (Rs) | Admin Charges | GST (18%) (1+2+3+4) | Total (1+2+3+4+5) | Required Number | Total 3 months (jan2021 to March 2021) Rs (6x7x3) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 1 | Data Entry Operator (Admission Desk) | 13020 | 1693 | 423 | 1000 | 2904 | 19040 | 6 | 342720 |

பெருநகர மருத்துவ அலுவலர் (பொ) அவர்களின் *11.03.2021* நாளிட்ட கடிதத்தில், மருத்துவசேவைகள் துறைக்கென கோவிட் சம்பந்தமான அறிக்கைகள் தயார் செய்யவும், கோவிட் தடுப்பூசி போடுவது சம்பந்தமாக விவரங்கள் கணினியில் பதிவு செய்யவும், 3 கணினி பதிவாளர்களை ஒப்பந்த அடிப்படையில் அளிக்க கோரியுள்ளார். இப்பணிக்கு 15.03.2021 முதல் 31.03.2021 வரையில் கீழ்க்கண்ட அளவில் தொகை தேவைப்படுகின்றது.

| Sl. No | Name of the Post | Salary per Month (Rs) | EPF (13%) (Rs) | ESI (3.25 %) (Rs) | Admin Charges | GST (18%) (1+2+3+4) | Total (1+2+3+4+5) | Required Number | Total 15.03.21 to 31.03.21) Rs (6x7x9) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 1 | Data Entry Operator for MSD | 13020 | 1693 | 423 | 1000 | 2904 | 19040 | 3 | 31324 |

**சு.து.நக.எண்.B2/ 5605/ 2020**

தற்போது கோவிட் நோயின் தாக்கம் சற்றே அதிகரித்துள்ள நிலையில் மேற்கண்ட இடங்களில் மாநகராட்சி சார்பாக இந்த கணினி பதிவாளர்கள் அறிக்கை தயாரிக்க மற்றும் கணினி சம்பந்தமான பணிகளுக்கும் அத்தியாவசியமாக தேவைப்படுகின்றனர்

| Sno | Name of the Department and DEO working place | No of DEOs |
|---|---|---|
| 1 | GCC-Covid-19 Control Room- 2 shifts | 19 |
| 2 | GCC Covid-19 Control Room Admission Desk | 6 |
| 3 | Medical Service Department | 3 |
| 4 | MMC | 8 |
| 5 | Stanley Medical College | 5 |
| 6 | Kilpauk Medical College | 4 |
| 7 | Omandurar Medical College | 3 |
| 8 | King Institute | 12 |
| 9 | DPH Office (SPHL) | 6 |
| | | 66 |

எனவே, 66 கணினி பதிவாளர்களை மட்டும் (01.04.2021 முதல் 30.06.2021 வரை) மூன்று மாத காலத்திற்கு பணி நீட்டிப்பு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. இப்பணிக்கென கீழ்க்கண்ட அளவில் தொகை தேவைப்படுகின்றது.

| Sl. No | Name of the Post | Salary per Month (Rs) | EPF (13%) (Rs) | ESI (3.25 %) (Rs) | Admin Charges | GST (18%) (1+2+3+4) | Total (1+2+3+4+5) | Required Number | Total 3 months Rs (6x7x3) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 1 | Data Entry Operator | 13020 | 1693 | 423 | 1000 | 2904 | 19040 | 66 | 3769920 |

**Total Amount Required**

| SNo | Details | Amount |
|---|---|---|
| 1 | Providing 6 Data Entry Operator from 01.01.2021 to 31.03.2021- 3 months for Admission Desk | 3,42,720 |
| 2 | Providing 3 Data Entry Operators from 15.03.2021 to 31.03.2021 for Medical Service Department | 31,324 |
| 3 | Extension of 66 Nos Data Entry Operators from 01.04.2021 to 30.06.2021 | 37,69,920 |
| | Total | 41,43,964 |

The Tamil Nadu Transparency Tender Act-1998 Section 10 (2) விதியின்படி Tender Accepting Authority ஏற்கெனவே உள்ள ஒப்பந்தத்தின் மதிப்பில் *25%* வரையில் பணி நீட்டிப்பு செய்ய அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| Total Contract Value | Rs. 2,99,88,000 |
| **25% of Contract value** | **Rs.74,97,000** |
| 1 st Extension work value | Rs. 32,55,840 |
| 2nd Extension work value | Rs. 41,43,964 |
| **Total Extension work Value** | **Rs. 73,99,804** |

**சு.து.நகஎண்.*B2/ 5605/ 2020***

சிறப்பு அதிகாரி/மன்றத்தீர்மான எண். 165/2021 நாள்: 15.02.2021ல் பணி நீட்டிப்பு தொகை ரூ.32,55,840/-க்கு அனுமதி பெறப்பட்டுள்ளது. இரண்டாவதாக பணி நீட்டிப்பு செய்ய ரூ.41,43,964/ செலவினம் ஆகும் என கணக்கிடப்பட்டுள்ளது. மொத்த பணி நீட்டிப்பு தொகை ரூ.73,99,804 ஆகும். ஒப்பந்த மதிப்பிற்கான 25% தொகை ரூ.74,97,000/-க்கு (-1.30%) குறைவாக உள்ளது.

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சியில், பொது சுகாதாரத்துறை நோவல் கொரோனா நோய் தடுப்பு பணிகள் மேற்கொள்ள அவசர அவசியம் கருதி 175 கணினி பதிவாளர்களை 01.04.2020 முதல் 31.12.2020 வரையில் 9 மாத காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் M/s. Somesh Enterprises நிறுவனம் மூலம் பணியமர்த்தியும், மேலும் இப்பணியாணையில் 57 கணினி பதிவாளர்களை மேலும் (01.01.2021 முதல் 31.03.2021 வரை) மூன்று மாத காலத்திற்கு M/s. Somesh Enterprises நிறுவனத்திற்கு மூலம் பணி நீட்டிப்பு செய்யப்பட்டது, கொரோனா தடுப்பு மேற்கொள்ள அவசர அவசியம் கருதி மேலும் 66 கணினி பதிவாளர்களை *01*.04.2021 முதல் 30.06.2021 வரை பணி நீட்டிப்பு செய்யவும்,
2. மாநகராட்சி கட்டுப்பாட்டு அறையில் செயல்பட்டு வரும் Covid 19 Admission Desk பணிபுரிந்து வரும் 6 கணினி பதிவாளர்களுக்கு M/s. Somesh Enterprises நிறுவனம் மூலம் பணிநீட்டிப்பு செய்து ஜனவரி 2021 முதல் மார்ச் 2021 வரை ஊதியம் வழங்க பின்னேற்பு அனுமதியும்,
3. மருத்துவ சேவைகள் துறைக்கு 3 கணினி பதிவாளர்கள் 15.03.2021 முதல் 31.03.2021 வரையில் M/s. Somesh Enterprises நிறுவனம் மூலம் பணிநீட்டிப்பு செய்து பணியமர்த்த அனுமதிக்கும்,
4. இப்பணிக்கான நிர்வாக செலவினம் ரூ. 41,43,964/- (ரூபாய் நாற்பத்தி ஒரு லட்சத்து நாற்பத்தி மூன்றாயிரத்து தொள்ளாயிரத்து அறுபத்தி நான்கு மட்டும்) மேற்கொள்ள அனுமதியும்,
5. மேற்கண்ட நிறுவனத்தினரிடம் பிணை வைப்பு தொகை பெறுவதில் இருந்தும் மற்றும் ஒப்பந்தம் செய்வதில் இருந்தும் விலக்கு அளிக்க அனுமதியும்,
6. இச்செலவினம் மாநகராட்சி நிதியின் கீழ் பிரிவு குறியீடு 30-31-01 கணக்கு குறியீடு 230-70-12-03 என்ற தலைப்பின் கீழ் மேற்கொள்ள அனுமதியும்,

மேற்கண்ட *1* முதல் *6* வரை உள்ள இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 15.03.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"*1* முதல் *6* வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

********

**சுது.நகஎண். பி2/2040 / 2021**

**தீர்மானஎண்.395/2021** **நாள்:16-03-2021**

**பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுசுகாதாரத்துறை - 1 முதல் 15 மண்டலங்களில் பணிபுரிந்து வரும் கொசுஒழிப்பு பணியாளர்களை கொண்டு கூடுதலாக கொரோனா சம்பந்தமான பணிகளை மேற்கொள்ளவும், இப்பணியில் ஈடுபடுத்த உள்ள கொசு ஒழிப்பு தற்காலிக பணியாளர்களுக்கு தற்போது அவர்கள் பெற்று வரும் ஊதியத்தோடு மாதந்தோறும் ரூ1,200/ ஊக்கத்தொகையாக மூன்று மாதத்திற்கு மண்டல அளவிலேயே மண்டல அலுவலர் மூலம் சம்பந்தப்பட்ட பணியாளரின் வங்கி கணக்கில் வழங்கவும் அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, நோவல் கொரோனா வைரஸ் காய்ச்சல் (COVID - 19 ) பரவாமல் தடுக்க பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. கொரோனா நோய் தடுப்பிற்கென மத்திய மாநில அரசுகளின் வழிகாட்டுதல்களின்படி, மருத்துவர்கள். மருத்துவ சார் பணியாளர்கள் மற்றும் பொதுமக்களுக்கு கோவிட்-19 தடுப்பூசி போடப்பட்டு வருகின்றது.

கோவிட் நோய் தடுப்பு பணிகளுக்கென 100-150 வீடுகளுக்கு 1 பணியாளர் வீதம் நியமிக்கப்பட்டு அங்குள்ளவர்களின் உடல்நலம் தினசரி கண்காணிக்கப்பட்டது. இதற்கென 12,000 பணியாளர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். இவர்களை 750 மேற்பார்வையாளர்கள் மற்றும் பல்வேறு நிலை மாநகராட்சி அலுவலர்களும் மேற்பார்வை செய்து வந்தனர். இதன் மூலம் 10.00 இலட்சம் வீடுகள் தினசரி கண்காணிக்கப்பட்டு வருகின்றன. இந்த பணியாளர்களின் பணிக்காலமானது ஜனவரி 2021ல் முடிவடைந்து விட்டது.

பொதுசுகாதாரத்துறையில் 1 முதல் 15 மண்டலங்களில் 3577 கொசு ஒழிப்பு பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். இதில் 2326 தற்காலிக பணியாளர்கள் NULM மூலம் பணியமர்த்தப்பட்டுள்ளனர். பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள வீடுகள் சுமார் 2126 சிறு வட்டங்களாக பிரிக்கப்பட்டு இந்த பணியாளர்கள் மூலம் தினந்தோறும் கொசு ஒழிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

| Sno | Zone | No. of Sectors | Permanent Workers | Temporary Workers | Total No.of Workers |
|---|---|---|---|---|---|
| 1 | 1 | 109 | 28 | 152 | 180 |
| 2 | 2 | 51 | 16 | 72 | 88 |
| 3 | 3 | 104 | 27 | 129 | 156 |
| 4 | 4 | 197 | 138 | 142 | 280 |
| 5 | 5 | 190 | 180 | 141 | 321 |
| 6 | 6 | 167 | 150 | 95 | 245 |
| 7 | 7 | 179 | 103 | 220 | 323 |
| 8 | 8 | 148 | 97 | 139 | 236 |
| 9 | 9 | 161 | 164 | 114 | 278 |
| 10 | 10 | 152 | 155 | 127 | 282 |
| 11 | 11 | 145 | 24 | 237 | 261 |
| 12 | 12 | 119 | 23 | 177 | 200 |
| 13 | 13 | 200 | 94 | 267 | 361 |
| 14 | 14 | 118 | 27 | 185 | 212 |
| 15 | 15 | 86 | 25 | 129 | 154 |
| | | 2126 | 1251 | 2326 | 3577 |

தற்போது கொரோனா தொற்று அதிகரித்து வரும் நிலையில், 8/3/2021 அன்று ஆணையர் அவர்களால் கொரோனா நோயை கட்டுப்படுத்தும் வழிமுறைகள் குறித்து நடத்தப்பட்ட கலந்தாய்வு கூட்டத்தில் கீழ்க்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டன.

- ஒவ்வொரு மண்டலத்திலும் பணிபுரிந்துவரும் DBC Worker, (வீடுவீடாக கொசு ஒழிப்பு பணி மேற்கொள்பவர்களைக் கொண்டு) தங்களுக்கு ஒதுக்கப்பட்ட 500 வீடுகளில் காய்ச்சல் மற்றும் கொரோனா தொடர்பான அறிகுறிகள் பற்றிய விவரங்களை இரண்டு நாட்களுக்கு ஒருமுறை சேகரித்து அறிக்கை சமர்பிக்கப்பட வேண்டும்.

**சுது.நகஎண். பி2/ 2040 / 2021**

- மேலும், கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டவர்களின் உடல்நிலை குறித்த அறிக்கையும் அவர்கள் முறையாக தங்களை தனிமைப்படுத்தி கொள்கிறார்களா என்பதை பற்றியும் அறிக்கை தினந்தோறும் சமர்பிக்கவேண்டும்.
- கடந்த ஒன்பது மாத காலமாக பணிபுரிந்து வந்த கோவிட் தடுப்பு பணியாளர்கள் ஜனவரி 2021ல் நிறுத்தப்பட்டதால், தற்போது மாநகராட்சி கொசு ஒழிப்பு பணியாளர்களை கொண்டு அவர்கள் மேற்கொண்டு வந்த கொசு ஒழிப்பு பணிகளோடு கூடுதலாக கொரோனா தொடர்பான பணிகளும் மேற்கொள்ள வேண்டியுள்ளதால் அவர்களை ஊக்குவிக்கும் விதமாக மாதந்தோறும் தற்போது அவர்கள் பெற்று வரும் ஊதியத்தோடு மாதந்தோறும் ரூ1,200/- ஊக்கத்தொகையாக மூன்று மாதத்திற்கு வழங்க ஆணையர் அவர்கள் ஆய்வுக்கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டது.

இப்பணிக்கென கீழ்க்கண்ட அளவில் தொகை தேவைப்படுகின்றது.

| Sno | Zone | Temporary Workers | Honorarium per month | Total amount required for 3 months |
|---|---|---|---|---|
| 1 | 1 | 152 | 1200 | 547200 |
| 2 | 2 | 72 | 1200 | 259200 |
| 3 | 3 | 129 | 1200 | 464400 |
| 4 | 4 | 142 | 1200 | 511200 |
| 5 | 5 | 141 | 1200 | 507600 |
| 6 | 6 | 95 | 1200 | 342000 |
| 7 | 7 | 220 | 1200 | 792000 |
| 8 | 8 | 139 | 1200 | 500400 |
| 9 | 9 | 114 | 1200 | 410400 |
| 10 | 10 | 127 | 1200 | 457200 |
| 11 | 11 | 237 | 1200 | 853200 |
| 12 | 12 | 177 | 1200 | 637200 |
| 13 | 13 | 267 | 1200 | 961200 |
| 14 | 14 | 185 | 1200 | 666000 |
| 15 | 15 | 129 | 1200 | 464400 |
| | | 2326 | | 83,73,600 |

எனவே.

1. பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 1 முதல் 15 வரையில் ஒவ்வொரு மண்டலத்திலும் பணிபுரிந்துவரும் DBC Worker, (வீடுவீடாக கொசு ஒழிப்பு பணி மேற்கொள்பவர்களைக் கொண்டு) தங்களுக்கு ஒதுக்கப்பட்ட 500 வீடுகளில் காய்ச்சல் மற்றும் கொரோனா தொடர்பான அறிகுறிகள் பற்றிய விவரங்கள் சேகரித்தல், கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டவர்களின் உடல்நிலை குறித்த அறிக்கைகள் சேகரித்தல், போன்ற கொரோனா சம்பந்தமான பணிகளை மேற்கொள்ள அனுமதியும்,

2. கடந்த ஒன்பது மாத காலமாக பணிபுரிந்து வந்த கோவிட் தடுப்பு பணியாளர்கள் ஜனவரி 2021ல் நிறுத்தப்பட்டதால், தற்போது தற்காலிக மாநகராட்சி கொசு ஒழிப்பு பணியாளர்களை கொண்டு அவர்கள் மேற்கொண்டு வந்த கொசு ஒழிப்பு பணிகளோடு கூடுதலாக கொரோனா தொடர்பான பணிகளும் மேற்கொள்ள வேண்டியுள்ளதால் அவர்களை ஊக்குவிக்கும் விதமாக மாதந்தோறும் தற்போது அவர்கள் பெற்று வரும் ஊதியத்தோடு மாதந்தோறும் ரூ1,200/ ஊக்கத்தொகையாக மூன்று மாதத்திற்கு மண்டல அளவிலேயே மண்டல அலுவலர் மூலம் சம்பந்தப்பட்ட பணியாளரின் வங்கி கணக்கில் வழங்க அனுமதியும்,

3. மேற்கண்ட பணிக்கென தேவைப்படும் தொகை ரூ. 83,73,600/- (ரூபாய் எண்பத்தி மூன்று லட்சத்து எழுபத்தி மூன்றாயிரத்து அறுநூறு மட்டும்) மேற்கொள்ள நிர்வாக அனுமதிக்கும்,

4. இதற்கான செலவினம் மாநகராட்சி நிதியில் மண்டல அளவில் கொசு ஒழிப்பு பணியாளர்களுக்கு ஊதியம் வழங்கும் கணக்கு மற்றும் பிரிவு குறியீட்டிலேயே மேற்கொள்ள அனுமதியும்,

மேற்கண்ட *1* முதல் *4* வரை உள்ள இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 12.03.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

********

**பொ.து.ந.க.எண்.இ9/ 15537/ 2020**

**தீர்மானஎண்.396/2021** **நாள்:24-03-2021**

**பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - மண்டலம்-12 - திரு.டி.முத்துராமன் தூய்மைப்பணியாளர், பணி எண்.833883, கோட்டம்-163, பகுதி-36 மற்றும் திருமதி.பி.சுசீலா சாலைப்பணியாளர், பணி எண்.855343, கோட்டம்-164, பகுதி-36 ஆகிய இரு பணியாளர்களும் பதவி மற்றும் துறை மாற்றம் வேண்டி மனு - தனியர்களை பதவி மற்றும் துறை மாற்றம் செய்வதற்கு அனுமதி.**

திரு.டி.முத்துராமன், தூய்மைப்பணியாளர், கோட்டம்-173, பகுதி-36, மண்டலம்-12 அவர்கள் கடந்த 1997 முதல் தூய்மைப்பணியாளராக பணிபுரிந்து வருகின்றேன் எனவும், கடந்த 8 ஆண்டுகாலமாக, தான் மாற்றுப்பணியாக சாலைப்ணியாளராக திறம்பட பணியாற்றி வருகின்றேன். தற்போது, கோட்டம்-164 பகுதி-36, மண்டலம்-12ல் சாலைப்பணியாளராக பணிபுரியும் திருமதி.சுசீலா என்பவர் சாலைப்பணியாளர் பணியிலிருந்து தூய்மைப்பணியாளர் பணிக்கு பதவி மாற்றம் செய்யுமாறு கோரியுள்ளதால், தன்னை தூய்மைப்பணியாளர் பணியிலிருந்து, சாலைப்பணியாளராக பணி மாற்றம் செய்து தருமாறு கேட்டுக்கொண்டு, பணியிட மாற்றம் செய்வதன் மூலம் தனது பணியினை சிறப்பாக நல்ல முறையில் மேற்கொள்வேன் என தெரிவித்து, சிறப்பு அதிகாரி/மன்றம் அவர்களுக்கு 03.08.2020 நாளிட்ட மனு அளித்துள்ளார்.

திருமதி.பி.சுசீலா, என்பவர் கோட்டம்-164, பகுதி-36,மண்டலம்-12ல் சாலைப்பணியாளராக பணியாற்றி வருவதால், தனது குடும்ப சூழ்நிலை காரணமாக தன்னை சாலைப்பணியாளர் பதவியிலிருந்து தூய்மைப்பணியாளர் பதவிக்கு மாற்றம் செய்யுமாறும், அவ்வாறு பணியிட மாற்றம் செய்வதன் மூலம் தனது பணியினை சிறப்பாக நல்ல முறையில் செய்வேன் என தெரிவித்து, சிறப்பு அதிகாரி/மன்றம் அவர்களுக்கு 03.08.2020 நாளிட்ட மனு அளித்துள்ளார்.

தனியர்களின் கோரிக்கை மனுக்களின் மீது நடவடிக்கை மேற்கொள்ள, தனியர்கள் பதவி மற்றும் துறை மாற்றம் செய்ய சம்பளம் பட்டுவாடா செய்யும் அதிகாரிகளான உதவி செயற்பொறியாளர்கள் பகுதி-36, 37 மற்றும் துப்புரவு மேற்பார்வையாளர் பகுதி-36 ஆகிய 3 அதிகாரிகளும், தனியர்களை பதவி மற்றும் துறை மாற்றம் செய்வதற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு:-

1) உதவி செயற்பொறியாளர் மற்றும் துப்புரவு மேற்பார்வையாளர்/பகுதி-36, மண்டலம்-12 அவர்களின் 05.10.2020 நாளிட்ட சான்றின்படி, பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் -12 பகுதி- 36 கோட்டம் -163ல் பணிபுரியும் திரு.டி.முத்துராமன், தூய்மைப்பணியாளர் (ஆலந்தூர் நகராட்சி) அவர்கள் சென்னை மாநகராட்சியில் இணைக்கப்பட்டதிலிருந்து மாற்று பணி அடிப்படையில் உதவி பொறியாளர் அவர்கள் மேற்பார்வையில் சாலை பணிகளை கடந்த 9 ஆண்டுகளாக ஒதுக்கப்பட்ட பணிக்கு எவ்வித குந்தகமும் இல்லாமல், பொறுப்புடனும் உயர் அதிகாரிகள் கூறும் பணியை தனிகவனம் செலுத்தி, உடனுக்குடன் சிறப்பாக செய்து வருகிறார். தனியரை தூய்மைப்பணியிலிருந்து, சாலைப் பணிக்கு மாற்றம் செய்வதற்கு தகுதியானவர் ஆவார் எனவும், அதன்படி தனியரை சாலைப்பணிக்கு மாற்றுவதற்கு ஆட்சேபணை ஏதும் இல்லை என தெரிவித்து, தனியரை தூய்மைப்பணியிலிருந்து, சாலைப்பணிக்கு மாற்றம் செய்வதற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

2) உதவி செயற்பொறியாளர்/பகுதி-37, மண்டலம்-12 அவர்களின் 08.10.2020 நாளிட்ட சான்றின்படி, பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் -12 பகுதி -37, கோட்டம் -164ல் பணிபுரியும் திருமதி.பி.சுசீலா, சாலைப்பணியாளர் அவர்கள் கோட்டம் -164ல் உதவி பொறியாளர் அவர்களின் மேற்பார்வையில் சாலைப்பணிகளை கடந்த 24.09.2014 முதல் பணியில் சேர்ந்து ஒதுக்கப்பட்ட பணிக்கு எவ்வித குந்தகமும் இல்லாமல் பொறுப்புடனும், உயர் அதிகாரிகள் கூறும் பணியை உரிய கவனம் செலுத்தி உடனுக்குடன் செய்து வருகிறார். தனியர் தினமும் 2 பேருந்து வழிதடத்தில் வருவதற்கு சிரமமாக இருக்கின்ற காரணத்தால், சாலைப்பணியிலிருந்து தூய்மைப்பணிக்கு மாற்றம் செய்யக் கோரியதன் காரணமாக, தனியரது போக்குவரத்து சூழ்நிலையை கருத்தில் கொண்டு தனியரை சாலைப்பணியிலிருந்து தூய்மைப்பணிக்கு மாற்றுவதற்கு ஆட்சேபணை ஏதும் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கண்காணிப்பு பொறியாளர்(பே.சா.து) அவர்களின் 19.10.2020 நாளிட்ட கடிதத்தில், திருமதி.பி.சுசீலா மண்டலம்-12 சாலைப்பணியாளரை, தூய்மைப்பணியாளராக பதவி மாற்றம் செய்வதற்கு பொதுத்துறை மூலமாக பதவி மாற்றம் செய்து கொள்ள ஆட்சேபணை ஏதும்

இல்லை எனவும், மண்டலம் -12ல் சாலைப்பணியாளர்களுக்கு ஒதுக்கப்பட்ட மொத்த பணியிடம் 96 எனவும், தற்போது பணிபுரிபவர்களின் எண்ணிக்கை 69 என தெரிவித்தும் காலிப்பணியிடம் 27 என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கண்காணிப்பு பொறியாளர்(தி.க.மே) அவர்களின் 23.10.2020 நாளிட்ட கடிதத்தில், மண்டலம் -12ல் பணிபுரியும் திரு.டி.முத்துராமன் தூய்மைபணியாளரை, சாலைப் பணியாளராக பதவி மாற்றம் செய்வதற்கு பொதுத்துறை மூலமாக பதவி மாற்றம் செய்து கொள்ள ஆட்சேபணை ஏதும் இல்லை என சான்றளிக்கப்பட்டுள்ளது.

திரு.டி.முத்துராமன், தூய்மைப்பணியாளர் என்பவரின் பணிப்பதிவேட்டின்படி, அரசாணை எண்.101 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.30.04.1997 ன்படி ஆலந்தூர் நகராட்சியில் தொகுப்பூதியத்தில் தூய்மைப்பணியாளராக 01.12.1997-ல் பணியமர்த்தப்பட்டு, நகர மன்ற தீர்மான எண்.357 நாள்.30.11.2000 மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை -5 அவர்களின் செயல்முறை உத்தரவு நாள்.21.12.2000, ந.க.எண்.86215/2000/கே3 ன்படி, பணியாளர் பணியில் சேர்ந்த 3 ஆண்டுகள் முடித்துள்ள காரணத்தால் ஏற்றமுறை ஊதியத்தில் 14.06.2001 அன்று பணிநியமனம் செய்யப்பட்ட தனியருக்கு அப்பதவியில் 14.06.2001 முதல் பணிவரன்முறை மற்றும் 15.06.2002 முதல் தகுதிகாண் பருவம் முடித்தவராக ஆணை வழங்கப்பட்டுள்ளது. தனியரின் பிறந்த தேதி.15.03.1969 என்பதால் வயது முதிர்வு ஓய்வு பெறும் நாள்.31.03.2029 ஆகும்.

திருமதி.பி.சுசீலா சாலைப்பணியாளர் என்பவரின் பணிப்பதிவேட்டின்படி, கருணை அடிப்படையில் பணி வழங்கும் திட்டத்தின் கீழ் 24.09.2014 அன்று மண்டலம்-12ல் பணிநியமனம் செய்யப்பட்டு அப்பதவியில் 24.09.2014 முதல் பணிவரன்முறை மற்றும் 24.09.2015 முதல் தகுதிகாண்பருவம் முடித்தவராக ஆணை வழங்கப்பட்டுள்ளது. தனியரின் பிறந்த தேதி.01.07.1978 என்பதால் வயது முதிர்வு ஓய்வு பெறும் நாள்.30.06.2038 ஆகும்.

மண்டல அலுவலர், மண்டலம்-12 அவர்களின் 02.11.2020 நாளிட்ட குறிப்பில் திரு.டி.முத்துராமன், தூய்மைப்பணியாளர் மண்டலம் -12 பகுதி-36 கோட்டம்-163 அவர்கள் தூய்மைப்பணியிலிருந்து, சாலைப்பணியாளராக பதவி மாற்றம் செய்யவும் (மற்றும்) திருமதி.பி.சுசீலா, மண்டலம்-12, பகுதி-37, கோட்டம்-164 அவர்களை சாலைப்பணியிலிருந்து, தூய்மைப்பணியாளராக பதவி மாற்றம் செய்யலாம் எனவும், இரு பணியாளரின் மீது ஒழுங்கு நடவடிக்கை ஏதும் நிலுவையில் இல்லை எனவும், பணியாளர் பதவி மற்றும் துறை மாற்றம் செய்வதற்கும் அவரவர் பணியினை திறம்பட செய்வதற்கு தகுதியானவர்கள் என உதவி செயற்பொறியாளர்கள், பகுதி-36, 37 மற்றும் துப்புரவு மேற்பார்வையாளர் பகுதி-36 ஆகியோரின் விரிவான அறிக்கை பெறப்பட்டுள்ளது. சம்மந்தப்பட்ட துறைகளிலிருந்து தனியர்களை பதவி மற்றும் துறை மாற்றம் செய்யலாம் என பரிந்துரைக்கப்பட்டு, ஆட்சேபணையின்மை பெறப்பட்டுள்ளது.

வட்டார துணை ஆணையர் (தெற்கு) அவர்களின் 12.11.2020 நாளிட்ட குறிப்பின்படி திரு.டி.முத்துராமன், தூய்மைபணியாளர், பணி எண்.833883, மண்டலம் -12, பகுதி -36, கோட்டம்-163 அவர்களை, சாலைப்பணியாளர் பதவியிலும் (மற்றும்) திருமதி.பி.சுசீலா, சாலைப்பணியாளர் பணி எண்.855343, மண்டலம் -12, பகுதி-37, கோட்டம்-164 அவர்களை தூய்மை பணியாளர் பதவியிலும், பதவி மற்றும் துறை மாற்றம் செய்வதற்கு, சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 18.03.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"தனியர்களை பதவி மற்றும் துறை மாற்றம் செய்வதற்கு, சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

************

**சுது.நகஎண். சி6/ 1970/ 2021**

**தீர்மானஎண்.397/2021** **நாள்:24-03-2021**

**பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுசுகாதாரத்துறை - 1 முதல் 15 மண்டலங்களில் 140 நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையங்கள் செயல்பட்டு வருவது நோவல் கொரோனா நோய் தடுப்பு பணி - பேரிடர் பணிகள் மேற்கொள்ள அவசர அவசியம் கருதி நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையத்தின் பணி நேரத்தினை காலை 8.00 முதல் மாலை 5.00 மணி வரை நீட்டிப்பு செய்ய அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, நோவல் கொரோனா வைரஸ் காய்ச்சல் (COVID - 19 ) பரவாமல் தடுக்க பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது.

கொரோனா நோய் தடுப்பிற்கென மத்திய மாநில அரசுகளின் வழிகாட்டுதல்களின்படி, மருத்துவர்கள். மருத்துவ சார் பணியாளர்கள் மற்றும் பொதுமக்களுக்கு கோவிட்-19 தடுப்பூசி போடப்பட்டு வருகின்றது.

கோவிட் தடுப்பூசியானது நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையங்களில் காலை 8.00 மணி முதல் 3.00 மணி வரையிலும், நகர்ப்புற சமுதாய நல மையங்களில் காலை 8.00 மணி முதல் மாலை 5.00 வரையிலும், தண்டையார்பேட்டை தொற்றுநோய் மருத்துவமனையில் காலை 9.00 மணி முதல் 5.00 மணி வரையிலும் போடப்பட்டு வருகின்றது.

தற்போது சில மாநிலங்களில் கோவிட் தொற்று நோய் மீண்டும் அதிகரிக்க தொடங்கியுள்ளது. இதனை தடுக்க மாநகராட்சி பல்வேறு தடுப்பு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் 1 முதல் 15 மண்டலகளில் 140 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்த சுகாதார நிலையங்களின் பணி நேரமானது காலை 8.00 முதல் 3.00 மணி வரை ஆகும்.

ஆணையர் அவர்களின் 08.03.2021 அன்று நடைபெற்ற கலந்தாய்வு கூட்டத்தில் கோவிட் நோயினை தடுக்கவும், பொதுமக்களுக்கு கோவிட்-19 தடுப்பூசி தடையின்றி போடவும், பெருநகர சென்னை மாநகராட்சியில் செயல்பட்டு வரும் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களின் பணி நேரத்தினை காலை 8.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை (உணவு இடைவேளை மதியம் 1.00 முதல் 2.00 வரை) மாற்றி அமைக்க தீர்மானிக்கப்பட்டது. இதனால் பொதுமக்களுக்கு அதிக அளவில் மருத்துவ சேவைகள் கிடைக்கவும், கோவிட் தடுப்பூசி பணிகளை திறம்பட மேற்கொள்ளவும் இயலும்.

எனவே, பெருநகர சென்னை மாநகராட்சி, கோவிட் 19 நோயினை கட்டுப்படுத்தவும், மற்றும் கோவிட் தடுப்பூசி பணியினை துரிதப்படுத்தவும், பொதுசுகாதாரத்துறையில் செயல்பட்டு வரும் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களின் பணி நேரத்தினை காலை 8.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை (உணவு இடைவேளை மதியம் 1.00 முதல் 2.00 வரை) மாற்றி அமைக்க சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 11.03.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையங்களின் பணி நேரத்தை மாற்றி அமைக்க, சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

**********

**இ.பொ.து.தெ.செ.வா.ப.ந.க.எண். S1 / 028/ 2021**

**தீர்மானஎண்.398/2021** **நாள்:24-03-2021**

**பெருநகர சென்னை மாநகராட்சி - இயந்திரப்பொறியியல் துறை - தென்சென்னை வாகன பணிமனை - மண்டலம்- 11, 12, 13, 14, 15 மற்றும் பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்திற்கு ஏப்ரல் 2021 முதல் டிசம்பர் 2021 வரை - டீசல் கொள்முதல் செய்வதற்கு - பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் நிறுவனத்திடமிருந்து விலைப்புள்ளி பெறப்பட்டது - டீசல் கொள்முதல் செய்ய அனுமதி.**

சென்னை மாநகராட்சி, மன்றத் தீர்மானம் எண். 180/78 நாள் 28.02.78 ன் படி சென்னை மாநகராட்சி உபயோகத்திற்கு தேவைப்படும் டீசல், இதர எரி பொருட்கள் ஒப்பம் கோருவதிலிருந்து விலக்கு அளித்து இந்திய அரசு நிறுவனமான இந்தியன் ஆயில் நிறுவனத்திடமிருந்து 1978-79 ஆம் ஆண்டிலிருந்து விலைப்புள்ளி பெற்று கொள்முதல் செய்ய அனுமதி பெறப்பட்டுள்ளது. தென்சென்னை மற்றும் வடசென்னையில் உள்ள மண்டல வாகன இயக்கூர்தி நிலையம் (1 முதல் 10 வரை) அமைக்கப்பட்ட பின்னர் இந்திய அரசு நிறுவனங்களான இந்துஸ்தான் பெட்ரோலியம், பாரத் பெட்ரோலியம் மற்றும் இந்திய ஆயில் நிறுவனங்களால் டீசல் சேமிப்பு அறைகள் மண்டல வாகன நிலையங்களில் நிறுவப்பட்டன.

அரசு ஆணையினை அமுல்படுத்தி, மன்றத்தீர்மானம் எண். 486/01 நாள் 20.09.2001ல் அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் ஆணையரின் ஆணை பெற்று டீசல், பெட்ரோல் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.

தென்சென்னையில் உள்ள மண்டலம்-11, 12, 13, 14, 15 வாகனங்கள் மற்றும் பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தில் இயங்கும் பெருநகர சென்னை மாநகராட்சி வாகனங்களுக்கும் மற்றும் RDC தெற்கு அலுவலக வாகனங்களுக்கும் 5 மாதத்திற்கு நவம்பர் 2020 முதல் மார்ச் 2021 வரை 690 KL கொள்முதல் செய்ய சிறப்பு அதிகாரி, மன்ற தீர்மான எண். 812/2020 நாள் 21.10.2020 பெறப்பட்டு, பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் நிறுவனம் மூலம் கொள்முதல் செய்யப்பட்டு, மண்டலம்-13 மற்றும் மண்டலம்-15 லாரி நிலையத்தில் இயங்கும் எரிபொருள் கிடங்கில் நிரப்பபட்டு வழங்கப்பட்டது.

தென்சென்னை மற்றும் மண்டல வாகன நிலையங்களால், அசோக்லேலேண்ட், சுவராஜ் மஸ்தா, டாடா, எய்ச்சர், டிராக்டர், சிறிய வகை முன்பளு தூக்கிகள், முன்பளு தூக்கிகள், மின்துறை வாகனங்கள், பொக்லைன்கள், புல்டோசர்கள், போன்ற வாகனங்கள் துப்புரவு பணி தனியார் மயம் ஆக்கப்பட்ட பின்னரும் 94 எண்ணிக்கைக்கு மேல் கட்டிட கழிவுகள் அகற்றவும் மற்றும் இதர பணிகளுக்காகவும் பராமரிக்கப்பட்டு வருகின்றன. மேலும், நலத்துறை மலேரியா பிரிவு கொசு ஒழிப்பு பணிக்காக வேன்பாக் போன்ற வாகனங்களுக்கு தேவையான அளவு டீசல் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், மின்வெட்டின் காரணமாக மண்டலங்களில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சி மருத்துவமனைகள் மற்றும் மண்டல அலுவலகங்களில் இயங்கும் ஜெனரேட்டர் ஆகியவற்றிற்கும் எரிபொருள் வழங்கப்பட்டு வருகிறது. மழைக்காலங்களில் தண்ணீர் இறைப்பதற்காக ராட்சத மோட்டார்களுக்கும் டீசல் வழங்கப்படுகிறது.

தற்போது ஏப்ரல் 2021 முதல் டிசம்பர் 2021 வரை மண்டலம்-11, 12, 13 , 14, 15 வாகனங்கள் மற்றும் பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தில் இயங்கும் பெருநகர சென்னை மாநகராட்சி வாகனங்களுக்கும் தேவையான டீசல் எரிபொருளின் பட்டியல் கீழ்கண்டவாறு:-

| மண்டலம் | கடந்த ஜனவரி 2021 ல் பயன்படுத்தப்பட்ட டீசல் ஒரு நாளுக்கு (சராசரியாக) (A) | ஒரு மாதத்திற்கு (சராசரியாக) (B=Ax31 நாட்கள்) | 9 மாதத்திற்கு (சராசரியாக) (C=Bx9 மாதம்) | சேமிப்பு தொட்டி அமைந்துள்ள இடம் |
|---|---|---|---|---|
| 11 | 475 Ltrs | 15 KL | 135 KL | மண்டலம்-13 லாரி நிலையம் |
| 12 | 567 Ltrs | 18 KL | 162 KL | |
| 13 | 1099 Ltrs | 34 KL | 306 KL | |
| PDG& RDC | 555 Ltrs | 17 KL | 153 KL | |
| 14 | 640 Ltrs | 20 KL | 180 KL | |
| 15 | 561 Lts | 17 KL | 153 KL | |
| TOTAL | 3897 Ltrs | 121 KL | 1089 KL | |

**இ.பொ.து.தெ.செ.வா.ப.ந.க.எண். S1 / 028/ 2021**

பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தேவையான டீசல் எரிபொருள், சேமிப்பு தொட்டி நிறுவிய இந்திய அரசு நிறுவனமான பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் நிறுவனங்களிடமிருந்து மட்டுமே கொள்முதல் செய்யப்படுவதால் டீசல் எரிபொருட்களின் விலை விகிதத்தை தெரிவிக்குமாறு பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் நிறுவனத்தை கடிதத்தின்வாயிலாக கேட்டுக் கொள்ளப்பட்டது. இந்நிறுவனத்தால் அளித்த விலைப்புள்ளி கீழே தொகுத்து சமர்ப்பிக்கப்படுகிறது.

| நிறுவனம் | பொருள் விவரம் | 1 KL க்கான தொகை ரூபாய் | 9 மாதத்திற்கு தேவையான மொத்த கிலோ லிட்டர் |
|---|---|---|---|
| பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் நிறுவனம் விற்பனை அனைத்து வரிகள் உட்பட | டீசல் | ரூ- 86,144.92 (02.03.2021) | **1089** KL |
| மொத்தம் | | 1089 x 86,144.92 = **9,38,11,818/-** | |

மேற்கண்ட விலைப்புள்ளி, எரிபொருட்களை பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-13 லாரி நிலையத்தில் இயங்கும் எரிபொருள் கிடங்கிற்கு பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் நிறுவனம் வாகனங்கள் மூலமாக கொண்டு வந்து இறக்கி கொடுப்பதற்கு உட்பட்டதாகும். மேலும், இந்த விலைப்புள்ளி மத்திய அரசு அறிவிக்கும் விலை உயர்வுக்கு உட்பட்டது என்று தெரிவித்துள்ளார்கள். மத்திய அரசு அவ்வவ்போது நிர்ணயிக்கும் விலைப்புள்ளிகளின் படி மேற்கூறிய பொருட்களை கொடுத்து வருவதால் இந்த விலைப்புள்ளி ஏற்றுக் கொள்ளலாம். பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் இந்திய அரசு நிறுவனம், ஆதலால் இவை பிணை வைப்புத் தொகை மற்றும் காப்பீட்டுத் தொகை செலுத்துவதிலிருந்தும், உடன்படிக்கை செய்து கொள்வதிலிருந்தும் விலக்கு அளிக்கலாம்.

இச்செலவினம் ஏப்ரல் 2021 முதல் டிசம்பர் 2021 ஆம் நிதி ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் இயந்திர பொறியியல் துறை, தென்சென்னை வாகன பணிமனை பிரிவு எண். 40-41-10 கணக்கு தலைப்பு 230-20-03-06 எரிபொருள் உபயோகம் என்ற தலைப்பின் கீழ் செலவு செய்யப்படும்.

எனவே, மண்டலம்-13 லாரி நிலையத்தில் இயங்கும் பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் நிறுவனம் மூலம் அங்கீகரிக்கப்பட்ட எரிபொருள் கிடங்கு மூலம் தேவையான எரி பொருட்கள் மேற்கண்ட மத்திய அரசு நிறுவனத்திடமிருந்து அவர்கள் அளித்த விலைப்புள்ளியின் படி அல்லது வாங்கும் காலத்தில் அப்போதைய சந்தை விலைக்கு வாங்குவதற்காக உத்தேசிக்கப்பட்டுள்ளது.

எனவே ஏப்ரல் 2021 முதல் டிசம்பர் 2021 டீசல் கொள்முதல் செய்திட,

| | |
|---|---|
| 1. | மண்டலம்-11, 12, 13, 14, 15 வாகனங்கள் மற்றும் பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தில் இயங்கும் வாகனங்களுக்கும், தெற்கு வட்டார ஆய்வு வாகனங்களுக்கும், நலத்துறை மலேரியா பிரிவு கொசு ஒழிப்பு பணிக்காக வேன்பாக் போன்ற வாகனங்களுக்கும், பெருநகர சென்னை மாநகராட்சி மருத்துவமனைகள் மற்றும் மண்டல அலுவலகங்களில் இயங்கும் ஜெனரேட்டர் ஆகியவற்றிற்கும் தேவையான அளவு டீசல் வழங்கப்பட்டு வருகிறது. எனவே ஏப்ரல் 2021 முதல் டிசம்பர் 2021 வரை தேவையான **1089 கிலோ லிட்டர்** டீசல் திருவாளர்கள் பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் நிறுவனம் அவர்களால் அமைக்கப்பட்ட சேமிப்பு தொட்டிகளில் அவர்கள் வாகனங்கள் மூலமாக, எரிபொருள் சேமிப்பு கிடங்கிற்கு டீசல் நிரப்புவதற்கு சுமார் **ரூ.9,38,11,818/-**அளவில் அல்லது வாங்கும் காலத்தில் அப்போதைய சந்தை விலைக்கே **ஏப்ரல் 2021 முதல் டிசம்பர் 2021** வரை வாங்கவும் |
| 2. | இதற்கான செலவினத்தை 2021-22 நிதி ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் இயந்திர பொறியியல் துறை, தென்சென்னை வாகன பணிமனை பிரிவு எண். **40-41-10** கணக்குத் தலைப்பு **230-20-03-06** எரிபொருள் உபயோகம் என்ற தலைப்பின் கீழ் செலவு செய்யவும், |

| | |
|---|---|
| 3. | பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் இந்திய அரசு நிறுவனம் என்பதால் அவர்களுக்கு பிணை வைப்பு தொகை கட்டுவதிலிருந்தும், பாதுகாப்பு தொகை செலுத்துவதிலிருந்தும் மற்றும் உடன்படிக்கை செய்து கொள்வதிலிருந்தும் விலக்கு அளிக்கவும், |
| 4. | இந்திய அரசு நிறுவனம் கோரிய படி தேவையான முன்பணத்தை அவ்வவ்போது **RTGS** மூலமாக அளிக்கவும் |
| 5. | சிறப்பு அதிகாரி (மாமன்றம்) அவர்களின் நிர்வாக அனுமதி **ரூ.9,38,11,818/-** க்கு ஆணை பெற்று, தேவையின் போது மேற்பார்வை பொறியாளர் (இயந்திரம்) அவர்களின் ஆணை மூலமாக முன்பணமாக செலுத்தி டீசல் கொள்முதல் செய்யவும், |
| 6. | அரசு நிரந்தர ஆணை வெளியிட்டு ஒவ்வொரு ஆண்டும் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தேவையான டீசல் இனி பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையரே கொள்முதல் செய்து கொள்ள அரசு அனுமதி அளித்துள்ளதால் அரசின் பின்னேற்பு இன்றி கொள்முதல் செய்யவும், |

மேற்கண்ட 1 முதல் 6 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 22.03.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“டீசல் கொள்முதல் செய்ய, 1 முதல் 6 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.**

********

**பொ.து.ந.க.எண்.ஈ2/ 9211/ 2021**

**தீர்மானஎண்.399/2021** **நாள்:24-03-2021**

**பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - சுகாதாரத் துறை - மண்டலம்- 5 - டாக்டர். P. விஜயஸ்ரீ, மருத்துவ அலுவலர் (சித்தா) அவர்கள் 31.03.2010 அன்று தகுதிகாண் முடித்தவராக அறிவிப்பதற்கு அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, சுகாதாரத் துறை, மண்டலம் - 5ன் கீழ் இயங்கும் இராயபுரம் (சித்தா) நகர ஆரம்ப சுகாதார நிலையத்தில் மருத்துவ அலுவலராக பணிபுரியும் டாக்டர். P. விஜயஸ்ரீ அவர்கள் தனது உடல்நிலை சரியில்லாத காரணமாக தனக்கு தன் விருப்ப ஓய்வு கோரி 28.12.2020 அன்று சிறப்பு அதிகாரி (மன்றம்) அவர்களுக்கு மனு அளித்துள்ளார்.

டாக்டர். P. விஜயஸ்ரீ, மருத்துவ அலுவலர் (சித்தா), இராயபுரம் (சித்தா) நகர ஆரம்ப சுகாதார நிலையம், மண்டலம் – 5 அவர்களுக்கு பணியில் சேர்ந்த நாள் முதல் இதுநாள் வரை தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவிக்கப்படவில்லை. தனியர் செயல் அலுவலர் தேர்வினை ஆகஸ்டு 2019 அன்று தான் முடித்துள்ளார். (TNPSC Bulletin 2581, Result date on 16th Aug' 2019) தனியரின் கோரிக்கையான தன்விருப்ப ஓய்வில் செல்வதற்கு இன்னும் 6 நாட்களே உள்ள நிலையில், தனியர் தகுதிகாண் பருவம் முடித்தவராக கீழ்கணடவாறு அறிவிக்கப்பட வேண்டும்.

| தனியர் பணியில் சேர்ந்த நாள் | தகுதிகாண் பருவம் நிறைவடைந்தவராக அறிவிக்கப்பட வேண்டிய நாள். |
|---|---|
| 31.03.2008 | 31.03.2010 |

ஆகவே, டாக்டர். P. விஜயஸ்ரீ, மருத்துவ அலுவலர் (சித்தா), இராயபுரம் (சித்தா) நகர ஆரம்ப சுகாதார நிலையம், மண்டலம் – 5 அவர்கள் 31.03.2010 அன்று தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவிக்க சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 23.03.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவிக்க சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

************

**பொ.து.ந.க.எண்.ஈ2/ 9211/ 2021**

**தீர்மான எண்.400/2021** **நாள்:24-03-2021**

**பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - சுகாதாரத் துறை - மண்டலம்- 5 - டாக்டர். P. விஜயஸ்ரீ, மருத்துவ அலுவலர் (சித்தா) அவர்கள் 27.03.2021 அன்று பிற்பகல் முதல் தன் விருப்ப ஓய்வில் செல்ல அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, சுகாதாரத் துறை, மண்டலம் - 5ன் கீழ் இயங்கும் இராயபுரம் (சித்தா) நகர ஆரம்ப சுகாதார நிலையத்தில் மருத்துவ அலுவலராக பணிபுரியும் டாக்டர். P. விஜயஸ்ரீ அவர்கள் தனது உடல்நிலை சரியில்லாத காரணமாக தனக்கு தன் விருப்ப ஓய்வு கோரி 28.12.2020 அன்று சிறப்பு அதிகாரி (மன்றம்) அவர்களுக்கு மனு அளித்துள்ளார்.

அரசாணை எண்.350, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, நாள்.07.10.1991ன்படி, அரசு ஊழியர் தன் விருப்ப ஓய்வில் செல்ல 50 வயது பூர்த்தி அடைந்து அல்லது 20 வருட கால பணியினை முடித்து இருக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

டாக்டர். P. விஜயஸ்ரீ, மருத்துவ அலுவலர் (சித்தா) அவர்கள் 31.03.2008 அன்று பிற்பகல் சென்னை மாநகராட்சியில் மருத்துவ அலுவலராக பணியில் சேர்ந்துள்ளார். தனியருக்கு மருத்துவ அலுவலர் பதவியில் 31.03.2008 பிற்பகல் முதல் பணிவரன்முறைபடுத்தப்பட்டுள்ளது. தனியரது தாய்மொழி தமிழ் ஆகும். தனியர் பணிபுரிந்த துறையின் விவரங்கள் பின்வருமாறு:

| வ. எண். | பதவி | பணிபுரிந்த துறை | பணியாற்றிய காலம் |
|---|---|---|---|
| 1. | மருத்துவ அலுவலர் (சித்தா) | பழைய மண்டலம்-2, புதிய மண்டலம்-5 | 31.03.2008 முதல் இந்நாள் வரை |

விழிப்பு அலுலவர் பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களின் 05.02.2021 நாளிட்ட கடிதத்தில், தனியர் மீது இன்றைய தேதியில் பெருநகர சென்னை மாநகராட்சி விழிப்புக்குழுமத்தில் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இயக்குநர், விழிப்பு மற்றும் ஊழல் தடுப்பு இயக்ககம் அவர்களின் 09.02.2021 நாளிட்ட கடிதத்தின்படி, தனியர் மீது விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சி, கூட்டுறவு அலுவலக சங்கத்தின் 16.02.2021 நாளிட்ட கடிதத்தில், தனியர் உறுப்பினராக இல்லை என்று சான்று அளிக்கப்பட்டுள்ளது.

நிதி ஆலோசகர், நிதிக் குழுமம் 02.03.2021 நாளிட்ட கடிதத்தில், தனியர் மருத்துவ அலுவலராக மண்டலங்களில் பணிபுரிந்த காலங்களில் 2008 – 2009 முதல் 2018 – 2019 ஆம் ஆண்டு வரை தணிக்கை அறிக்கை குறித்த பத்திகள், இவ்வலுவலகத்தில் உள்ள உள்ளாட்சி நிதித் தணிக்கை அறிக்கையின்படி, நிலுவை ஏதுமில்லை எனவும், 2019 – 2020 மற்றும் 2020 – 2021 ஆம் ஆண்டுகளுக்கான தணிக்கை அறிக்கை வெளியிடப்பட்ட பின்னர், தணிக்கைத் தடை பத்திகள் பணியாளரை சார்ந்தது என்பது பின்னர் தெரியவரும் பட்சத்தில் அவர் மீது பொறுப்பு நிர்ணயிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனியர் தன் விருப்ப ஓய்வுக்கு விண்ணப்பித்த நாளன்று 50 வயதினை பூர்த்தி செய்துள்ளார். அன்னாரின் மொத்த பணிக்காலம் 12 ஆண்டுகள் 06 மாதங்கள் 29 நாட்கள் ஆகும். தனியரின் பிறந்த நாள் - 20.05.1970. அரசு பணிவிதிகளின்படி தனியர் வயது முதிர்வில் ஓய்வு பெறும் தகுதியான நாள் 31.05.2030. தனியர் தன் விருப்ப ஓய்விற்கு 90 நாட்கள் முன்னறிவிப்புடன் 28.12.2020 நாளிட்ட கடிதம் சிறப்பு அதிகாரி (மன்றம்) அவர்களுக்கு அளித்துள்ளதால், தனியரை 27.03.2021 அன்று பிற்பகல் பணியிலிருந்து விடுவிக்க சிறப்பு அதிகாரி (மன்றம்) அவர்களின் அனுமதி பெற வேண்டும்.

**பொ.து.ந.க.எண்.ஈ2/ 9211/ 2021**

ஆகவே டாக்டர். *P.* விஜயஸ்ரீ, மருத்துவ அலுவலர் *(*சித்தா*)*, இராயபுரம் *(*சித்தா*)* நகர ஆரம்ப சுகாதார நிலையம், மண்டலம் – *5* அவர்கள் தன் விருப்ப ஓய்வில் செல்ல *28.12.2020* அன்று சிறப்பு அதிகாரி *(*மன்றம்*)* அவர்களிடம் விண்ணப்பித்துள்ளபடி, தனியர் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை, நிதி இழப்பீடு, தணிக்கை தடை மற்றும் நீண்ட கால முன்பணம் சரிசெய்யப்படாமல் நிலுவையில் இருப்பது பின்னர் தெரியவரின் அதனை தனியருக்கு சேர வேண்டிய தொகையிலிருந்து பிடித்தம் செய்யலாம் என்ற நிபந்தனைக்குட்பட்டும், மேலும் *2019-2020* மற்றும் *2020-2021* ஆம் ஆண்டுகளுக்கான தணிக்கை அறிக்கைகள் வெளியிட்ட பின்னர், தணிக்கைத் தடைப் பத்திகள் ஏதேனும் பணியாளரை சார்ந்தது என்பது பின்னர் தெரியவரும் பட்சத்தில், தனியர் மீது பொறுப்பு நிர்ணயிக்கப்பட்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டும், தனியரை *27.03.2021* அன்று பிற்பகல் முதல் தன் விருப்ப ஓய்வில் செல்ல சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 23.03.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"தன் விருப்ப ஓய்வில் செல்ல, சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

************

**பொ.து.ந.க.எண்.ஈ2/ 7596/ 2021**

**தீர்மானஎண்.401/2021** **நாள்:24-03-2021**

**பணியமைப்பு -பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - சுகாதாரத் துறை - மண்டலம்- 6 - டாக்டர்.வ. ரேணுகா, மருத்துவ அலுவலர், அவர்கள் 27.03.2021 அன்று பிற்பகல் முதல் தன் விருப்ப ஓய்வில் செல்ல அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, சுகாதாரத் துறை, மண்டலம் - 6ன் கீழ் இயங்கும் திரு.வி.க. நகர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் மருத்துவ அலுவலராக பணிபுரியும் டாக்டர். வ.ரேணுகா அவர்கள் தனது குடும்ப சூழ்நிலை காரணமாக தனக்கு தன் விருப்ப ஓய்வு கோரி 28.12.2020 அன்று சிறப்பு அதிகாரி (மன்றம்) அவர்களுக்கு மனு அளித்துள்ளார்.

அரசாணை எண்.350, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, நாள்.07.10.1991ன்படி, அரசு ஊழியர் தன் விருப்ப ஓய்வில் செல்ல 50 வயது பூர்த்தி அடைந்து அல்லது 20 வருட கால பணியினை முடித்து இருக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

டாக்டர். வ. ரேணுகா, மருத்துவ அலுவலர் அவர்கள் 11.12.1997 அன்று பிற்பகல் சென்னை மாநகராட்சியில் மருத்துவ அலுவலராக பணியில் சேர்ந்துள்ளார். தனியருக்கு மருத்துவ அலுவலர் பதவியில் 11.12.1997 பிற்பகல் முதல் பணிவரன்முறைபடுத்தியும், 11.12.1999 முதல் தகுதிகாண்பருவம் பூர்த்தி செய்தவராக அறிவிக்கப்பட்டுள்ளது. தனியரது தாய்மொழி தமிழ் ஆகும். தனியர் பணிபுரிந்த துறையின் விவரங்கள் பின்வருமாறு:

| வ. எண். | பதவி | பணிபுரிந்த துறை | பணியாற்றிய காலம் |
|---|---|---|---|
| 1. | மருத்துவ அலுவலர் | பழைய மண்டலம்-4, புதிய மண்டலம்-6 | 11.12.1997 முதல் இந்நாள் வரை |

பெருநகர சென்னை மாநகராட்சி, கூட்டுறவு அலுவலக சங்கத்தின் 29.01.2021 நாளிட்ட கடிதத்தில், தனியர் உறுப்பினராக இல்லை என்று சான்று அளிக்கப்பட்டுள்ளது.

உதவி கணக்கு அலுவலர், பகுதி கணக்கு குழுமம் அவர்களின் 01.02.2021 நாளிட்ட கடிதத்தின் வாயிலாக தனியர் பெயரில் எந்த ஒரு முன்பணத்தொகை மற்றும் பல்வகை செலவீனத் தொகையினை தற்போது பகுதி கணக்கு குழுமம், மண்டலம் – 6 கிடைக்க பெற்ற ஆவணங்களின்படி வழங்கப்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

விழிப்பு அலுலவர், பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களின் 05.02.2021 நாளிட்ட கடிதத்தில், தனியர் மீது இன்றைய தேதியில் பெருநகர சென்னை மாநகராட்சி விழிப்புக்குழுமத்தில் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இயக்குநர், விழிப்பு மற்றும் ஊழல் தடுப்பு இயக்ககம் அவர்களின் 09.02.2021 நாளிட்ட கடிதத்தின்படி, தனியர் மீது விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மண்டல அலுவலர், மண்டலம் - 6, தணிக்கைத் துறை அவர்களின் 02.03.2021 நாளிட்ட கடிதத்தில், தனியர் பழைய மண்டலம் – 4, புதிய மண்டலம் – 6ல் 11.12.1997 முதல் இந்நாள் வரை மருத்துவ அலுவலராக பணிபுரிந்துள்ளார் எனவும், தனியர் பணிபுரிந்த காலங்களில் உள்ள தணிக்கை புத்தங்களை ஆய்வு செய்த போது தனியரின் மீது எவ்வித தணிக்கை தடை பத்திகளும், நிலுவையில் இல்லை என தெரிவித்து கொண்டு தணிக்கையில் 'தடையின்மை சான்று' வழங்கப்படுகிறது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**பொ.சு.ந.க.எண்.ஈ2/ 7596/ 2021**

நிதி ஆலோசகர் அவர்களின் 19.03.2021 நாளிட்ட கடிதத்தில், தனியர் மருத்துவ அலுவலராக மண்டலங்களில் பணிபுரிந்த காலங்களில் 1997 – 1998 முதல் 2018 – 2019 ஆம் ஆண்டு வரை தணிக்கை அறிக்கை குறித்த பத்திகள், இவ்வலுவலகத்தில் உள்ள உள்ளாட்சி நிதித் தணிக்கை அறிக்கையின்படி, நிலுவை ஏதுமில்லை எனவும், 2019 – 2020 மற்றும் 2020 – 2021 ஆம் ஆண்டுகளுக்கான தணிக்கை அறிக்கை இதுநாள் வரை வெளியிடப்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனியர் தன் விருப்ப ஓய்வுக்கு விண்ணப்பித்த நாளன்று 50 வயதினை பூர்த்தி செய்துள்ளார். அன்னாரின் மொத்த பணிக்காலம் 23 ஆண்டுகள் 03 மாதங்கள் 17 நாட்கள் ஆகும். தனியரின் பிறந்த நாள் - 31.05.1970. அரசு பணிவிதிகளின்படி தனியர் வயது முதிர்வில் ஓய்வு பெறும் தகுதியான நாள் 31.05.2028. தனியர் தன் விருப்ப ஓய்விற்கு 90 நாட்கள் முன்னறிவிப்புடன் 28.12.2020 நாளிட்ட கடிதம் சிறப்பு அதிகாரி (மன்றம்) அவர்களுக்கு அளித்துள்ளதால், தனியரை 27.03.2021 அன்று பிற்பகல் பணியிலிருந்து விடுவிக்க சிறப்பு அதிகாரி (மன்றம்) அவர்களின் அனுமதி பெற வேண்டும்.

ஆகவே, டாக்டர். வ.ரேணுகா, மருத்துவ அலுவலர், திரு.வி.க.நகர் நகர ஆரம்ப சுகாதார நிலையம், மண்டலம் – 6 அவர்கள் தன் விருப்ப ஓய்வில் செல்ல 28.12.2020 அன்று சிறப்பு அதிகாரி (மன்றம்) அவர்களிடம் விண்ணப்பித்துள்ளபடி, தனியர் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை, நிதி இழப்பீடு, தணிக்கை தடை மற்றும் நீண்ட கால முன்பணம் சரிசெய்யப்படாமல் நிலுவையில் இருப்பது பின்னர் தெரியவரின் அதனை தனியருக்கு சேர வேண்டிய தொகையிலிருந்து பிடித்தம் செய்யலாம் என்ற நிபந்தனைக்குட்பட்டும், மேலும் 2019-2020 மற்றும் 2020-2021 ஆம் ஆண்டுகளுக்கான தணிக்கை அறிக்கைகள் வெளியிட்ட பின்னர், தணிக்கைத் தடைப் பத்திகள் ஏதேனும் பணியாளரை சார்ந்தது என்பது பின்னர் தெரியவரும் பட்சத்தில், தனியர் மீது பொறுப்பு நிர்ணயிக்கப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டும், தனியரை 27.03.2021 அன்று பிற்பகல் முதல் தன் விருப்ப ஓய்வில் செல்ல, சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 23.03.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“தன் விருப்ப ஓய்வில் செல்ல, சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.**

********

ம.அ7ந.க.எண்.எஸ்3/ 281 /2021

தீர்மானஎண்.402/2021 நாள்:29-03-2021

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-7, அம்பத்தூர், பகுதி–18 விரிவாக்கப்பட்ட பகுதிகளில் தேசிய நகர் புறவாழ்வாதார இயக்கத்தின் (NULM) கீழ் பணியமர்த்தப்பட்ட துப்புரவு பணியாளர்களின் பணிக்காலம் 31..03.2021 உடன் முடிவடைவது - அதே 413 எண்ணிக்கை கொண்ட துப்புரவு பணியாளர்களை வைத்து 01.04..2021 முதல் 15.05..2021 வரை பணியினை மேற்கொள்வதற்கு ஆகும் தோராய செலவினம் ரூ.72,66,735/- க்கு அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம் -7, அம்பத்தூர் , பகுதி – 18, வார்டு – 79 முதல் வார்டு 83 வரை உள்ள 5 வார்டுகளில் மொத்த பரப்பளவு 16.08 சதுர கி.மீ உள்ளடங்கிய பகுதியாகும். இந்த பகுதியில் 14 எண்ணிக்கையிலான பேருந்து சாலைகளும் மற்றும் 1638 எண்ணிக்கையில் உட்புற சாலைகளும் பெருநகர சென்னை மாநகராட்சியால் பராமரிக்கப்பட்டு துப்புரவு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இம்மண்டலத்தின் மக்கள் தொகை 2015 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின் படி 1,,56,255 இருப்பினும், நகரமயமாக்குதலின் முக்கிய பகுதியாக இம்மண்டலம் விளங்குவதால் நாளுக்கு நாள் இம்மண்டலத்தில் மக்கட்தொகை பன்மடங்கு உயர்ந்து வருகிறது.

மண்டலம்-7 அம்பத்தூர் பகுதிகளில் தோராயமாக 335 மெட்ரிக் டன் குப்பைகள் வார்டு-79 முதல் 93 வரையுள்ள 15 வார்டுகளில் தினந்தோறும் துப்புரவு பணியாளர்கள் மூலம் குப்பைகள் சேகரிக்கப்படுகிறது. இப்பணிகளை திறம்பட செய்ய போதிய நிரந்தர துப்புரவு தொழிலாளர்கள் இல்லாத காரணத்தினால் தினக்கூலி அடிப்படையில் தற்காலிக தொழிலாளர்களை நியமித்து அனைத்து வார்டுகளிலும் துப்புரவு பணிகளை மேற்கொள்ள அவசியமாகிறது.

எனவே, தற்போது பகுதி – 18ல் (வார்டு – 79 முதல் 83 – வரை) தற்போது நிரந்தர பணியாளர்கள் இல்லாத காரணத்தாலும், வாகனங்களின் எண்ணிக்கை போதுமானதாக இல்லாத காரணத்தாலும் இன்றைய நிலைகளுக்கு ஏற்ப துப்புரவு பணிகளை திறம்பட மேற்கொள்ள கீழ்க்கண்ட விவரங்களின் அடிப்படையில் பணியாளர்களை நியமித்து பணிகள் மேற்கொள்ளப்படுகிறது.

மேலும், பெருநகர சென்னை மாநகராட்சி திடக்கழிவு மேலாண்மைத்துறை மூலம் நியமிக்கப்பட்ட Chennai Enviro Solution Private Limited அவர்களுக்கு ஒப்பம் கோரப்பட்டு பணி ஆணை வழங்கப்பட்டு உள்ளது. ஆனால் தற்பொழுது 2021-ம் ஆண்டின் தமிழ்நாடு சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு உடனடியாக பணியமர்த்த இயலாத காரணத்தால், கீழ்கண்ட NULM பணியாளர்களை 45 நாட்களுக்கு பணியமர்த்திட ஆணை வேண்டப்படுகிறது.

பகுதி **- 18** ல் **NULM** திட்டத்தின் கீழ் பணிபுரியும் பணியாளர்களின் எண்ணிக்கை-413.

மேலும், இப்பகுதி வளர்ந்து வரும் பகுதி மற்றும் மக்கட் தொகை அதிகரித்துள்ளதாலும் அனைத்து தெருக்களிலும் துப்புரவு பணிகளை மேற்கொள்ள அவசியமுள்ளதால் அதற்கேற்ப தற்காலிக பணியாளர்கள் நியமிக்கப்பட வேண்டியுள்ளது.

சிறப்பு அதிகாரி, மன்ற தீர்மான எண்.697 /2020, நாள். 26.09.2020 ன்படி தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் மூலம் (NULM) 413 பணியாளர்களை பணியமர்த்தி துப்புரவு பணிகளை மேற்கொள்ள 01.10.2020 முதல் 31.03.2021 வரை ஆறு மாத காலத்திற்கு மாமன்றம் அனுமதி வழங்கப்பட்டு தற்போது துப்புரவு பணி நடைப்பெற்று வருகிறது. இத்திட்டப் பணியானது 31.03.2021ல் நிறைவடைய உள்ளதால் மண்டலம்-7, பகுதி – 18 ல் NULM திட்டத்தின் மூலம் தொடர்ந்து 45 நாட்களுக்கு செயல் படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இக்கருத்துக்களின் அடிப்படையில் 413 துப்புரவு பணியாளர்கள் துப்புரவு பணியினை மேற்கொள்ள மண்டலம்-7, பகுதி-18 க்கு தேவை என கணக்கிட்டு 01.04.2021 முதல் 15.05.2021 வரையில் ஆகும் தோராய செலவினம் கீழ்க்காணும் வகையில் கணக்கிடப்பட்டுள்ளது.

| வ. எண் | பகுதி எண் | துப்புரவு பணியாளர்களின் எண்ணிக்கை | தோராய செலவினம் |
|---|---|---|---|
| 1 | 18 | 413 | ரூ.391x413x45 (நாட்கள்) = ரூ.72,66,735/- |
| | | மொத்தம் | ரூ.72,66,735/- |

இதனை தொடர்ந்து எதிர்வரும் காலங்களில் பொது சுகாதாரம் சீர்கெடாத வகையில் தற்காலிக துப்புரவு பணியாளர்களை கொண்டு பணிகளை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டியுள்ளதாலும் ஏற்கனவே நடைமுறையில் உள்ள வழி காட்டுதல்களின் அடிப்படையில் மண்டலம் 7ல் மேற்படி பணியினை திறம்பட செயல்படுத்த ஆணையர் அவர்களின் திடக்கழிவு மேலாண்மை துறை சம்மந்தமான 09.09.2020 நாளிட்ட சுற்றறிக்கையின்படி அங்கீகரிக்கப்பட்ட விலைப்படி நாள் ஒன்றுக்கு ரூ.391/- வீதம் 413 பணியாளர்களுக்கு 45 நாட்களுக்கு ஆகும் செலவு ரூ.72,66,735/-(ரூபாய் எழுபத்தியிரண்டு இலட்சத்து அறுபத்தி ஆறாயிரத்து எழுநூற்றி முப்பதைந்து மட்டும்) என ஒன்றறை மாத காலத்திற்கு கணக்கிடப்பட்டுள்ளது.

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் **-7**, பகுதி - **18** ல் 01.04.2021 முதல் 15.05.2021 வரை அல்லது திடக்கழிவு மேலாண்மை துறை மூலம் மண்டலம் – 7ல் குப்பைகளை அகற்ற தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் 2021 நடத்தை விதிகள் முடியும் வரை துப்புரவு பணிகளை தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் (NULM) கீழ் பணியை தொடர்வதற்கு அதே 413 எண்ணிக்கையிலான பணியாளர்களை கொண்டு துப்புரவு பணியை மேற்கொள்ளவும்,
2. மேற்கண்ட 413 தொழிலாளர்களுக்கான குறைந்தபட்ச அடிப்படை ஊதியமாக நாள் ஒன்றுக்கு ரூ.391/- வீதம், 45 நாட்களுக்கு ஆகும் செலவு. ரூ.72,66,735/- (ரூபாய் எழுபத்தியிரண்டு இலட்சத்து அறுபத்தி ஆறாயிரத்து எழுநூற்றி முப்பதைந்து மட்டும்) நிர்வாக அனுமதி வேண்டியும்,
3. இப்பணியை கணக்கு குறியீட்டு எண் 40 - 41 - 03 கணக்கு தலைப்பு எண் 230 – 15 – 01 – 00 கீழ் மேற்கொள்ளவும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 25.03.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.**

********

**ம.அ7நக.எண்.எஸ்2/00173/2021**

**தீர்மானஎண்.403/2021** **நாள்:29-03-2021**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-7, அம்பத்தூர், பகுதி– 19 - விரிவாக்கப்பட்ட பகுதிகளில் தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கத்தின் (NULM) கீழ் பணியமர்த்தப்பட்ட துப்புரவு பணியாளர்களின் பணிக்காலம் 31.03.2021 உடன் முடிவடைவது - அதே 475 எண்ணிக்கை கொண்ட துப்புரவு பணியாளர்களை வைத்து 01.04.2021 முதல் 15.05.2021 வரை பணியினை மேற்கொள்வதற்கு ஆகும் தோராய செலவினம் ரூ.83,57,625/- க்கு அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம் -7, அம்பத்தூர் , பகுதி – 19, வார்டு – 84 முதல் வார்டு – 88 வரை உள்ள 5 வார்டுகளில் மொத்த பரப்பளவு 13.79 சதுர கி.மீ உள்ளடங்கிய பகுதியாகும். இந்த பகுதியில் 5 எண்ணிக்கையிலான பேருந்து சாலைகளும் மற்றும் 917 எண்ணிக்கையில் உட்புற சாலைகளும் பெருநகர சென்னை மாநகராட்சியால் பராமரிக்கப்பட்டு துப்புரவு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இம்மண்டலத்தில் பகுதி – 19ன்கீழ் உள்ள 84 முதல் 88 வரையிலான வார்டுகளில் மக்கள் தொகை 2018 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின் படி 1,90,760 இருப்பினும், நகரமயமாக்குதலின் முக்கிய பகுதியாக இம்மண்டலம் விளங்குவதால் நாளுக்கு நாள் இம்மண்டலத்தில் மக்கட்தொகை பன்மடங்கு உயர்ந்து வருகிறது.

மண்டலம் -7. அம்பத்தூர், பகுதி – 19ல் 84 முதல் 88 வரையிலான 5 வார்டுகளில் தோராயமாக 94.190 மெ.டன் குப்பைகள் தினந்தோறும் துப்புரவு பணியாளர்கள் மூலம் சேகரிக்கப்படுகிறது. இப்பணிகளை திறம்பட செய்ய போதிய நிரந்தர துப்புரவு தொழிலாளர்கள் இல்லாத காரணத்தினால் தினக்கூலி அடிப்படையில் தற்காலிக தொழிலாளர்களை நியமித்து அனைத்து வார்டுகளிலும் துப்புரவு பணிகளை மேற்கொள்ள அவசியமாகிறது.

எனவே, தற்போது பகுதி – 19ல் (வார்டு – 84 முதல் 88 – வரை) தற்போது உள்ள நிரந்தர பணியாளர்களின் எண்ணிக்கை, வாகனங்களின் எண்ணிக்கை போதுமானதாக இல்லாத காரணத்தால் இன்றைய நிலைகளுக்கு ஏற்ப துப்புரவு பணிகளை திறம்பட மேற்கொள்ள கீழ்க்கண்ட விவரங்களின் அடிப்படையில் பணியாளர்களை நியமித்து பணிகள் மேற்கொள்ளப்படுகிறது, மேலும், பெருநகர சென்னை மாநகராட்சி திடக்கழிவு மேலாண்மைதுறை மூலம் நியமிக்கப்பட்ட Chennai Enviro Solution Private Limited அவர்களுக்கு ஒப்பம் கோரப்பட்டு பணிஆணை வழுங்கப்பட்டுள்ளது. ஆனால் தற்பொழுது 2021 – ஆம் ஆண்டின் தமிழ்நாடு சட்ட மன்ற தேர்தலை முன்னிட்டு உடனடியாக பணியமர்த்த இயலாத காரணத்தால் கீழ்கண்ட பணியாளர்களை 45 நாட்களுக்கு பணியமர்த்திட ஆணை வேண்டப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1) | பகுதி – 19, ல் உள்ள நிரந்தர பணியாளர்களின் எண்ணிக்கை | 96 |
| 2) | பகுதி – 19ல் NULM திட்டத்தின் கீழ் பணிபுரியும் பணியாளர்களின் எண்ணிக்கை | 475 |
| | மொத்தம் | 571 |

வார்டு – 85, 86 – ல், நிரந்தர துப்புரவு பணியாளர்கள் கடந்த நிதியாண்டில் 25 நபர்கள் வயது முதிர்வு காரணமாக ஓய்வு பெற்றும், 2 நபர் காலஞ்சென்றும் மற்றும் 5 நபர்கள் பதவி உயர்வில் சென்ற நிலையிலும் NULM பணியாளர்கள் கொண்டு துப்புரவு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும், இப்பகுதி வளர்ந்து வரும் பகுதி மற்றும் மக்கள் தொகை அதிகரித்துள்ளதாலும் அனைத்து தெருக்களிலும் துப்புரவு பணிகளை மேற்கொள்ள அவசியமுள்ளதால் அதற்கேற்ப தற்காலிக பணியாளர்கள் நியமிக்கப்பட வேண்டியுள்ளது.

சிறப்பு அதிகாரி, மன்ற தீர்மான எண்.695/2020, நாள். 26.09.2020ன்படி தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் (NULM) கீழ் 475 பணியாளர்களை பணியமர்த்தி துப்புரவு பணிகளை மேற்கொள்ள 01.10.2020 முதல் 31.03.2021 வரை ஆறு மாத காலத்திற்கு அனுமதி வழங்கப்பட்டு தற்போது துப்புரவு பணி நடைப்பெற்று வருகிறது. இத்திட்டப் பணியானது 31.03.2021ல் நிறைவடைய உள்ளதால் மண்டலம்-7, பகுதி – 19ல் NULM திட்டத்தின் மூலம் தொடர்ந்து 45 நாட்களுக்கு செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**ம.அ7நக.எண்.எஸ்2/00173/2021**

இக்கருத்துக்களின் அடிப்படையில் 571 துப்புரவு பணியாளர்கள் தேவை என்றாலும், தற்பொழுதுள்ள 96 நிரந்தர துப்புரவு பணியாளர்களை தவிர்த்து மீதமுள்ள 475 எண்ணிக்கை கொண்ட தற்காலிக துப்புரவு பணியாளர்கள் மண்டலம் -7 பகுதி -19க்கு தேவை என கணக்கிட்டு 01.04.2021 முதல் 15.05.2021 வரையில் 45 நாட்களுக்கு ஆகும் தோராய செலவினம் கீழ்க்காணும் வகையில் கணக்கிடப்பட்டுள்ளது.

| வ.எண் | பகுதி எண் | NULM துப்புரவு பணியாளர்களின் எண்ணிக்கை | தோராய செலவினம் |
|---|---|---|---|
| 1 | 19 | 475 | ரூ.391x475x 45 (நாட்கள்) = ரூ.83,57,625/- |
| | | மொத்தம் | ரூ.83,57,625/- |

இதனை தொடர்ந்து எதிர்வரும் காலங்களில் பொது சுகாதாரம் சீர் கெடாத வகையில் தற்காலிக துப்புரவு பணியாளர்களை கொண்டு பணிகளை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டியுள்ளதாலும், ஏற்கனவே நடைமுறையில் உள்ள வழி காட்டுதல்களின் அடிப்படையில் மண்டலம்-7ல் மேற்படி பணியினை திறம்பட செயல்படுத்த ஆணையர் அவர்களின் திடக்கழிவு மேலாண்மை துறை சம்மந்தமான 08.09.2020 நாளிட்ட சுற்றறிக்கையின் படி அங்கீகரிக்கப்பட்ட விலைப்படி நாள் ஒன்றுக்கு ரூ.391/- வீதம் 475 பணியாளர்களுக்கு 45 நாட்களுக்கு ஆகும் தோராய செலவு ரூ.83,57,625/- (ரூபாய் எண்பத்து மூன்று இலட்சத்து ஐம்பத்து ஏழாயிரத்து அறுநூற்று இருபத்தைந்து மட்டும்) என கணக்கிடப்பட்டுள்ளது.

எனவே,

1) பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் - 7 அம்பத்தூர், பகுதி -19ல் 01.04.2021 முதல் 15.05.2021 வரை குப்பைகளை அகற்ற தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் 2021 நடத்தை விதிகள் முடியும் வரை துப்புரவு பணிகளை தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் (NULM) கீழ் பணியை தொடர்வதற்கு அதே 475 எண்ணிக்கையிலான பணியாளர்களை கொண்டு துப்புரவு பணியை மேற்கொள்ளவும்,
2) மேற்கண்ட 475 தொழிலாளர்களுக்கான குறைந்த பட்ச அடிப்படை ஊதியமாக நாள் ஒன்றுக்கு ரூ.391/- வீதம், 45 நாட்களுக்கு ஆகும்தோராய செலவு ரூ. 83,57,625/- (ரூபாய் எண்பத்து மூன்று இலட்சத்து ஐம்பத்து ஏழாயிரத்து அறுநூற்று இருபத்தைந்து மட்டும்) நிர்வாக அனுமதி வேண்டியும்,
3) இப்பணியை கணக்கு குறியீட்டு எண் 40 - 41 - 03 கணக்கு தலைப்பு எண் 230 – 15 – 01 – 00 கீழ் மேற்கொள்ளவும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 25.03.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.**

********

**ம.அ.7ந.க.எண்.எஸ்1/ 1472/2021**

**தீர்மானஎண்.404/2021** **நாள்:29-03-2021**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-7, அம்பத்தூர், பகுதி–20 விரிவாக்கப்பட்ட பகுதிகளில் தேசிய நகர் புறவாழ்வாதார இயக்கத்தின் (NULM) கீழ் பணியமர்த்தப்பட்ட துப்புரவு பணியாளர்களின் பணிக்காலம் 31..03.2021 உடன் முடிவடைவது - அதே 569 எண்ணிக்கை கொண்ட துப்புரவு பணியாளர்களை வைத்து 01.04..2021 முதல் 15.05..2021 வரை பணியினை மேற்கொள்வதற்கு ஆகும் தோராய செலவினம் ரூ.1,00,11,555/- க்கு அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம் -7, அம்பத்தூர் , பகுதி – 20, வார்டு – 89 முதல் வார்டு 93 வரை உள்ள 5 வார்டுகளில் மொத்த பரப்பளவு 16.03 சதுர கி.மீ உள்ளடங்கிய பகுதியாகும். இந்த பகுதியில் 26 எண்ணிக்கையிலான பேருந்து சாலைகளும் மற்றும் 260 எண்ணிக்கையில் உட்புற சாலைகளும் பெருநகர சென்னை மாநகராட்சியால் பராமரிக்கப்பட்டு துப்புரவு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இம்மண்டலத்தின் மக்கள் தொகை 2015 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின் படி 1,,59,4,38 இருப்பினும், நகரமயமாக்குதலின் முக்கிய பகுதியாக இம்மண்டலம் விளங்குவதால் நாளுக்கு நாள் இம்மண்டலத்தில் மக்கட்தொகை பன்மடங்கு உயர்ந்து வருகிறது.

மண்டலம்-7 அம்பத்தூர் பகுதிகளில் தோராயமாக 335 மெட்ரிக் டன் குப்பைகள் வார்டு-79 முதல் 93 வரையுள்ள 15 வார்டுகளில் தினந்தோறும் துப்புரவு பணியாளர்கள் மூலம் குப்பைகள் சேகரிக்கப்படுகிறது. இப்பணிகளை திறம்பட செய்ய போதிய நிரந்தர துப்புரவு தொழிலாளர்கள் இல்லாத காரணத்தினால் தினக்கூலி அடிப்படையில் தற்காலிக தொழிலாளர்களை நியமித்து அனைத்து வார்டுகளிலும் துப்புரவு பணிகளை மேற்கொள்ள அவசியமாகிறது.

எனவே, தற்போது பகுதி – 20ல் (வார்டு – 89 முதல் 93 – வரை) தற்போது நிரந்தர பணியாளர்கள் இல்லாத காரணத்தாலும், வாகனங்களின் எண்ணிக்கை போதுமானதாக இல்லாத காரணத்தாலும் இன்றைய நிலைகளுக்கு ஏற்ப துப்புரவு பணிகளை திறம்பட மேற்கொள்ள கீழ்க்கண்ட விவரங்களின் அடிப்படையில் பணியாளர்களை நியமித்து பணிகள் மேற்கொள்ளப்படுகிறது.

மேலும், பெருநகர சென்னை மாநகராட்சி திடக்கழிவு மேலாண்மைத்துறை மூலம் நியமிக்கப்பட்ட Chennai Enviro Solution Private Limited அவர்களுக்கு ஒப்பம் கோரப்பட்டு பணி ஆணை வழங்கப்பட்டு உள்ளது, ஆனால் தற்பொழுது 2021-ம் ஆண்டின் தமிழ்நாடு சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு உடனடியாக பணியமர்த்த இயலாத காரணத்தால், கீழ்கண்ட NULM பணியாளர்களை 45 நாட்களுக்கு பணியமர்த்திட ஆணை வேண்டப்படுகிறது.

பகுதி – 20 ல் NULM திட்டத்தின் கீழ் பணிபுரியும் பணியாளர்களின் எண்ணிக்கை-569.

மேலும், இப்பகுதி வளர்ந்து வரும் பகுதி மற்றும் மக்கட்தொகை அதிகரித்துள்ளதாலும் அனைத்து தெருக்களிலும் துப்புரவு பணிகளை மேற்கொள்ள அவசியமுள்ளதால் அதற்கேற்ப தற்காலிக பணியாளர்கள் நியமிக்கப்பட வேண்டியுள்ளது.

சிறப்பு அதிகாரி, மன்ற தீர்மான எண்.696/2020, நாள். 26.09.2020 ன்படி தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் (NULM) 569 பணியாளர்களை பணியமர்த்தி துப்புரவு பணிகளை மேற்கொள்ள 01.10.2020 முதல் 31.03.2021 வரை ஆறு மாத காலத்திற்கு அனுமதி வழங்கப்பட்டு தற்போது துப்புரவு பணி நடைப்பெற்று வருகிறது. இத்திட்டப் பணியானது 31.03.2021ல் நிறைவடைய உள்ளதால், மண்டலம்-7, பகுதி- 20ல் NULM திட்டத்தின் மூலம் தொடர்ந்து 45 நாட்களுக்கு செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இக்கருத்துக்களின் அடிப்படையில் 569 துப்புரவு பணியாளர்கள் துப்புரவு பணியினை மேற்கொள்ள மண்டலம்-7, பகுதி-20க்கு தேவை என கணக்கிட்டு 01.04.2021 முதல் 15.05.2021 வரையில் ஆகும் தோராய செலவினம் கீழ்க்காணும் வகையில் கணக்கிடப்பட்டுள்ளது.

| வ.எண் | பகுதி எண் | துப்புரவு பணியாளர்களின் எண்ணிக்கை | தோராய செலவினம் |
|---|---|---|---|
| 1 | 20 | 569 | ரூ.391 x 569 x 45 (நாட்கள்) = ரூ.1,00,11,555/- |
| | | மொத்தம் | ரூ.1,00,11,555/- |

**ம.அ.7ந.க.எண்.எஸ்1/ 1472 / 2021**

இதனை தொடர்ந்து எதிர்வரும் காலங்களில் பொது சுகாதாரம் சீர் கெடாத வகையில் தற்காலிக துப்புரவு பணியாளர்களை கொண்டு பணிகளை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டியுள்ளதாலும், ஏற்கனவே நடைமுறையில் உள்ள வழி காட்டுதல்களின் அடிப்படையில் மண்டலம் 7ல் மேற்படி பணியினை திறம்பட செயல்படுத்த ஆணையர் அவர்களின் திடக்கழிவு மேலாண்மை துறை சம்மந்தமான 09.09.2020 நாளிட்ட சுற்றறிக்கையின்படி அங்கீகரிக்கப்பட்ட விலைப்படி நாள் ஒன்றுக்கு ரூ.391/- வீதம் 569 பணியாளர்களுக்கு 45 நாட்களுக்கு ஆகும் செலவு ரூ.1,00,11,555/- (ரூபாய் ஒரு கோடியே பதினொரு ஆயிரத்து ஐநூற்று ஐம்பத்து ஐந்து மட்டும்) என 1.5 மாத காலத்திற்கு கணக்கிடப்பட்டுள்ளது.

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் **-7**, பகுதி **-20**ல் 01.04.2021 முதல் 15.05.2021 வரை அல்லது திடக்கழிவு மேலாண்மை துறை மூலம் மண்டலம் – 7ல் குப்பைகளை அகற்ற தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் 2021, நடத்தை விதிக்கள் முடியும் வரை துப்புரவு பணிகளை தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் (NULM) கீழ் பணியை தொடர்வதற்கு அதே 569 எண்ணிக்கையிலான பணியாளர்களை கொண்டு துப்புரவு பணியை மேற்கொள்ளவும்,
2. மேற்கண்ட 569 தொழிலாளர்களுக்கான குறைந்தபட்ச அடிப்படை ஊதியமாக நாள் ஒன்றுக்கு ரூ.391/- வீதம், 45 நாட்களுக்கு ஆகும் செலவு. ரூ.1,00,11,555/- (ரூபாய் ஒரு கோடியே பதினொரு ஆயிரத்து ஐநூற்று ஐம்பத்து ஐந்து மட்டும்) நிர்வாக அனுமதி வேண்டியும்,
3. இப்பணியை கணக்கு குறியீட்டு எண் 40 - 41 - 03 கணக்கு தலைப்பு எண் 230 – 15 – 01 – 00 கீழ் மேற்கொள்ளவும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 25.03.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

********

**ம.அ3.ந.க.எண்.அ4/ 964 /2021**

**தீர்மானஎண்.405 / 2021** **நாள்:29-03-2021**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-3 மாதவரம் - பகுதி - 6 , 7 மற்றும் - 8 - விரிவாக்கப்பட்ட பகுதியில் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட சாலை பணியாளர்கள், பூங்கா பணியாளர்கள், மழைநீர் வடிகால்வாய் தூர்வாரும் பணியாளர்களின் (NULM) பணிக்காலம் 28.02.2021 உடன் முடிவடைவது - 01.03.2021 முதல் 31.05.2021 வரை தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் (NULM) கீழ் பணியாளர்களை பணியமர்த்தஅனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மாதவரம் மண்டலம்-3ல் பகுதி-6,7, மற்றும் 8 வார்டு-22 முதல் 33 வரை 40.55 சதுர கி.மீ. பரப்பளவுள்ள 12 வார்டுகளை உள்ளடக்கிய பகுதியாகும் . இந்த மண்டலத்தில் 13 எண்ணிக்கையிலான பேருந்து சாலைகளும் மற்றும் 2549 எண்ணிக்கையில் உட்புற சாலைகளும் சென்னை மாநகராட்சியால் பராமரிக்கப்பட்டு அனைத்து பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நகரமயமாக்குதலுக்கு பின்னர் நாளுக்கு நாள் இம்மண்டலத்தில் மக்கள் தொகை வளர்ச்சி அடைந்து வருகிறது.

மேலும் இப்பகுதி வளர்ந்து வரும் பகுதி என்பதால் முக்கியமான தெருக்களை தவிர அனைத்து தெருக்களிலும் மேற்கண்ட பணிகளை மேற்கொள்ள அவசரம் கருதி மன்றத்தீர்மான எண். 422/2016, நாள்,30.07.2016ன் படி, தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் (NULM) அடிப்படையில் தற்காலிக பணியாளர்களை நியமித்து பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மண்டலம்-3 , வார்டு 22 முதல் 33 வரை 12 வார்டுகளில் அனைத்து களப்பணிகளையும் திறம்பட மேற்கொள்ள ஏற்கனவே பணி புரிந்து வரும் நிரந்தர பணியாளர்கள் மற்றும் தொகுப்பூதிய துப்புரவு பணியாளர்களை தவிர்த்து துப்புரவு பணிக்கு 521 பணியாளர்கள், சாலை பணிக்கு 94 பணியாளர்கள், மழைநீர் வடிகால்வாய் தூர்வாரும் பணிக்கு 44 பணியாளர்கள் மற்றும் பூங்கா பணிகள் மேற்கொள்ள 12 பணியாளர்கள் என கூடுதலாக 671 தற்காலிக (NULM) பணியாளர்களை பணி அமர்த்தி அனைத்து பணிகளையும் திறம்பட மேற்கொள்ளப்பட்டு வந்தது. 27-02-2021 முதல் துப்புரவு பணிகள் தனியார் வசம் ஒப்பந்த அடிப்படையில் ஒப்படைக்கப்பட்டுள்ளதால் மேற்கண்ட மன்றத்தீர்மானத்தின்படி 521 தற்காலிக NULM துப்புரவு பணியாளர்களின் பணிக்காலம் 28-02-2021 உடன் நிறைவடைகிறது.

மேலும், மண்டலம்-3ல் வார்டு – 22 முதல் 33 வரை உள்ள பகுதிகளில் ஒப்ப பணிகளுக்கு மதிப்பீடு தயார் செய்யும் பணிகளில், உதவி / இளநிலை பொறியாளர்களுக்கு உதவியாக பணியாற்றிடவும், கணினியில் பதிவேற்றம் செய்தல், நகரமைப்பு பிரிவில் கட்டிட அனுமதி தொடர்பான பதிவுகள் ( Building Plan Permission ) மழை மற்றும் புயல் போன்ற பேரிடர் காலங்களில் தினசரி அறிக்கைகள் அனுப்புதல், ஆய்வுக் கூட்டங்களுக்கு அறிக்கை தயாரித்தல் போன்ற பணிகள், தற்காலிக (NULM ) துப்புரவு பணியாளர்களில் கல்வியறிவு பெற்றவர்களைக் கொண்டு மேற்கொள்ளப்பட்டு வந்தது. தற்போது துப்புரவு பணிகள் தனியார் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ள நிலையில் தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் பணியாற்றி வந்த 521 தற்காலிக NULM துப்புரவு பணியாளர்களும் நிறுத்தம் செய்யப்பட்டதால் 01.03.2021 முதல் மேற்கண்ட பணிகளுக்காகவும், பகுதி அலுவலகம் 6,7, 8 மற்றும் மண்டல அலுவலகத்தில் பணிபுரியவும், கம்பியில்லா தந்தி பிரிவில் தகவல் சேகரிக்கும் (Wireless Operator) பணிகளுக்காகவும், கணினி இயக்குபவர் (Computer Operator) மற்றும் புள்ளிவிவர குறிப்பாளர்கள் (Data Entry Operator ) இப்பணிகளுக்கென 18 பணியாளர்களை பணியமர்த்துவது அவசியமாகிறது.

செயற்பொறியாளர்கள், உதவி செயற்பொறியாளர்கள், உதவி வருவாய் அலுவலர், மண்டல நல அலுவலர் , கணக்கு அலுவலர் மற்றும் நிர்வாக அலுவலர் ஆகியோரின் 02.03.2021 மற்றும் 04.03.2021 நாளிட்ட குறிப்புகளின்படி, மேற்கண்ட பணிக்களுக்காக போதிய கல்வியறிவு பெற்றுள்ள கணினி இயக்குபவர் (Computer Operator) மற்றும் புள்ளிவிவர குறிப்பாளர்கள் ( Data Entry Operator ) 18 தற்காலிக பணியாளர்களை பணியமர்த்திடுமாறு கோரியுள்ளனர்.

சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணை ROC.C2/7393/2018 நாள் 07-07-2020ல் வரிசை எண்.64ன் படி, துப்புரவு மற்றும் சுகாதார பணியாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.391/- எனவும், வரிசை எண் 85ன் படி கணினி இயக்குபவர் மற்றும் புள்ளிவிவர குறிப்பாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ. 448/- எனவும் ஊதியம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

**ம.அ3.ந.க.எண்.அ4/ 964 /2021**

சிறப்பு அதிகாரி, மன்றத்தீர்மான எண்.133/2021 நாள். 08-02-2021ன்படி 01-01-2021 முதல் 28-02-2021 வரை தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் (NULM) மூலம் 521 துப்புரவு பணியாளர்கள், 94 சாலை பணியாளர்கள், 44 மழை நீர் வடிகால்வாய் பணியாளர்கள் மற்றும் 12 பூங்கா பணியாளர்கள் என 672 தற்காலிக பணியாளர்களை மண்டலம்-3 (மாதவரம்) பகுதி 6, 7 மற்றும் 8க்கு உட்பட்ட பகுதிகளில் துப்புரவு பணி, சாலை பராமரிப்பு பணி, மழை நீர் வடிகால் வாய் பணி, பூங்கா பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள 2 மாத காலத்திற்கு 01-01-2021 முதல் 28-02-2021 வரை (59 நாட்களுக்கு) பணியமர்த்தவும், எதிர்வரும் காலத்தில் மண்டலம்-3ல் துப்புரவு பணியானது தனியார் வசம் ஒப்படைக்கப்பட்டு அவர்கள் இப்பணியினை மேற்கொள்ளும் பட்சத்தில் தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் (NULM) மூலம் மேற்கொள்ளப்படும் 521 தற்காலிக துப்புரவு பணியாளர்களின் பணியினை ரத்து செய்யவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட மன்றத்தீர்மானத்தின் படி பணியாளர்களை பணியமர்த்தவும் ஊதியம் வழங்கவும் வழங்கப்பட்ட உத்தரவு 28-02-2021 உடன் முடிவடைவதால் 01-03-2021 முதல் 31-05-2021 வரை 92 நாட்களுக்கு கீழ்கண்ட அட்டவணையில் கண்டுள்ளவாறு தற்காலிக பணியாளர்களை பணியமர்த்துவது அவசியமாகும்.

அதன் விவரம் பின்வருமாறு :

| | பணியாளர் விவரம் | தற்போது பணி புரிந்து வரும் பணியாளர்கள் | | | மொத்த NULM பணியாளர்கள் | தொகை |
|---|---|---|---|---|---|---|
| | | நிரந்தர பணியாளர்கள் | NULM | மொத்தம் | | |
| 1 | சாலை பணியாளர் | 41 | 94 | 135 | 94 | (94x391x92) Rs.33,81,368/- |
| 2 | மழைநீர் கால்வாய் பணியாளர் | 0 | 44 | 44 | 44 | (44x391x92) Rs.15,82,768/- |
| 3 | பூங்கா பணியாளர் | 0 | 12 | 12 | 12 | (12x391x92) Rs.4,31,664/- |
| **மொத்தம்** | | | **150** | **191** | **150** | Rs.53,95,800/- |

மேற்கண்ட அட்டவனையின்படியும் சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணையின்படியும், சாலை பணிகள் மேற்கொள்ள 94 பணியாளர்களுக்கு ரூ. 33,81,368/-, மழைநீர் வடிகால்வாய் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள 44 பணியாளர்களுக்கு பணிகளுக்கு ரூ.15,82,768, 12 பூங்கா பணியாளர்களுக்கு ரூ. 4,31,664/- ஆக மொத்தம் 92 நாட்களுக்கு 53,95,800 தோராய செலவு என்று கணக்கிடப்பட்டுள்ளது.

இப்பணிக்காக கணக்கு தலைப்பு எண். 40-41-03 கணக்கு குறியிட்டு எண் 230-150-100ன் கீழ் 2020–21 ஆம் நிதியாண்டிற்கு ரூ.9,96,38,000/- நிதி ஒதுக்கப்பட்டு தற்போது ரூ.1,59,29,972/- இருப்பில் உள்ளது. இத்தொகை மேற்கண்ட மன்றத்தீர்மானத்தின்படி பணிபுரிந்துவரும் பணியாளர்களுக்கு 28-02-2021 ஊதியம் வழங்க போதுமானது ஆகும்.

எனவே,

1. மேற்கண்ட நிகழ்வுகளை கருத்தில் கொண்டு தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் (NULM) மூலம் 94 சாலை பணியாளர்கள், 44 மழைநீர் வடிகால்வாய் பணியாளர்கள் மற்றும் 12 பூங்கா பணியாளர்கள் ஆக மொத்தம் 150 பணியாளர்களை மண்டலம்-3(மாதவரம்) , பகுதி 6,7 மற்றும் 8க்கு உட்பட்ட பகுதிகளில் தூய்மை பணி, சாலை பராமரிப்பு பணி, மழைநீர் கால்வாய் பணி மற்றும் பூங்கா பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள 3 மாத காலத்திற்கு 01.03.2021 முதல் 31.05.2021 வரை 92 நாட்களுக்கு பணியமர்த்தவும், 01.03.2021 அன்று முதல் இப்பணிக்கு அனுமதி வேண்டியும்,

**ம.அ3.ந.க.எண்.அ4/ 964 /2021**

2. மேற்கண்ட தொழிலாளர்களுக்கான குறைந்தப்பட்ச அடிப்படை ஊதியமாக 94 சாலை பணியாளர்கள், 44 மழைநீர் வடிகால்வாய் பணியாளர்கள், 12 பூங்கா பணியாளர்கள் என 150 தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதியமான ரூ. 391/- வீதம் 150 பணியாளர்களுக்கு மூன்று மாத காலத்திற்கு ( 92 நாட்கள் ) ஆகும் செலவுத் தொகை 391 X 150X 92 நாட்கள் = ரூ.53,95,800/- (ரூபாய் ஐம்பத்து மூன்று இலட்சத்து தொண்ணூற்று ஐந்தாயிரத்து எண்ணூறு மட்டும்) ஆகும். இதற்கு சிறப்பு அதிகாரி மன்றம் அவர்களின் அனுமதி பெறவும், எதிர்வரும் காலங்களில் தினக்கூலி பணியாளர்களின் ஊதியம் தமிழக அரசால் உயர்த்தி நிர்ணயிக்கப்படின் நிர்ணயிக்கப்பட்ட ஊதியத்தை வழங்க நிர்வாக அனுமதி வேண்டியும்,
3. இப்பணிக்கான செலவினங்களை கீழ்கண்ட கணக்கு தலைப்பில் மேற்கொள்ளவும்

| வ.எண் | பணி விவரம் | கணக்கு குறியீட்டு எண் | கணக்கு தலைப்பு எண் |
|---|---|---|---|
| 1 | சாலை பணி, மழைநீர் வடிகால் மற்றும் பூங்கா பணி | 40-41-03 | 230-15-01-00 |

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 25.03.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

********

ப.து.ந.க.எண்.PPA/WDCN05/ 0017/2021

தீர்மான எண். 406/2021 நாள்:29-03-2021

## தானப்பத்திரம்

மண்டலம்-05, கோட்டம்-49ல் திரு. S.V. Balasubramani & திருமதி. B. Amutha அவர்கள் புதிய கதவு எண்.126, 122, 122/F1, 122/F2, 122/S1, 122/S2 பழைய கதவு எண். 143/GF-1, 143/GF-2, 143/FF-1, 143/FF-2, 143/SF, 143/SF-2, Gollavar Agharam Road, P.A.N. ராஜரத்தினம் சாலை, பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை-600021 R.S.No.3713/67, பிளாக் எண்.55, தண்டையார்பேட்டை கிராமத்தில் அமைந்துள்ள இடத்திற்கு திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வேண்டி பெருநகர சென்னை மாநகராட்சி, தலைமையகத்தில் PPA/WDCN05/00017/2021நாள்.03.01.2021ன்படி விண்ணப்பித்துள்ளார்கள். அவர்கள் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வேண்டி விண்ணப்பித்த இடத்திற்கு அணுகு சாலையாக P.A.N. ராஜரத்தினம் சாலை அமைய பெற்றுள்ளது. இரண்டாம் முழுமைத் திட்டத்தின்படி P.A.N. ராஜரத்தினம் சாலை 18.00மீ அகல சாலையாக விரிவாக்கம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் விதிகளின்படி, சாலை விரிவாக்கத்திற்கான நிலத்தினை தானப்பத்திரம் மூலம் உள்ளாட்சி அமைப்புகளிடம் மனை உரிமையாளர் ஒப்படைத்த பிறகு தான் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வழங்க இயலும். ஆகவே மனுதாரர் தங்களுக்கு சொந்தமான நிலத்திலிருந்து சாலை விரிவாக்கம் செய்ய 18.50 ச.மீ பரப்பளவில் 1/3 பிரிக்கப்படாத நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தானப்பத்திரம் மூலம் வழங்க ஒப்புதல் அளித்துள்ளார். மீதமுள்ள 1/3 பிரிக்கப்படாத நிலத்தினை, மற்ற உரிமையாளர்கள் மேம்படுத்தும் பொழுது அவர்களிடமிருந்து சாலை விரிவாக்கத்திற்கான நிலம் தானப்பத்திரத்தின் மூலம் பெற்ற பின்னர் இந்த நிலத்தினை சாலையாக மேம்படுத்தலாம்.

பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்கபடவுள்ள நிலத்தை தானமாக பெற்றுக் கொள்ளலாம் என கருதப்படுகிறது.

எனவே,

(1) திரு. S.V. Balasubramani & திருமதி. B. Amutha அவர்களின் புதிய கதவு எண்.126, 122, 122/F1, 122/F2, 122/S1, 122/S2 பழைய கதவு எண். 143/GF-1, 143/GF-2, 143/FF-1, 143/FF-2, 143/SF, 143/SF-2, Gollavar Agharam Road, P.A.N. ராஜரத்தினம் சாலை, பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை-600021 R.S.No.3713/67, பிளாக் எண்.55, தண்டையார்பேட்டை கிராமத்தில் அமைய பெற்றுள்ள மனையில் சாலை விரிவாக்கம் செய்ய 18.00 ச.மீ பரப்பளவில் 1/3 பிரிக்கப்படாத நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தானமாக பெற்றுக் கொள்ளவும்,

(2) தானமாக வழங்கப்பட்ட பகுதியில் சாலை விரிவாக்கப் பணிகளை மேற்கொள்ள செலவாகும் தொகை ரூ.10,000/- (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) விண்ணப்பதாரரிடமிருந்து ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி என்கின்ற பெயரில் வரைவு காசோலையாக பெறவும்,

மேற்கண்ட *1* மற்றும் *2* ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(நகரமைப்பு) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 25.03.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"தானப்பத்திரம் *1* மற்றும் *2* ஆகிய இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(நகரமைப்பு) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

********

**ம.அ.4.ந.க.எண்.சி2 / 0117/ 2020**

**தீர்மானஎண்.407 / 2021** **நாள்:31-03-2021**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-4, கோட்டம்-34 முதல் 48 வரை துப்புரவு பணி - நிரந்தர பணியாளர்கள் பற்றாக்குறை - தேசிய நகர்புற வாழ்வாதார அண்டை வீட்டு குழு (NULM) திட்டத்தின் கீழ் 981 தற்காலிக தினக்கூலி பணியாளர்களை 01.04.2021 முதல் 31.03.2022 வரையிலான ஓராண்டிற்கு ஒப்பந்த அடிப்படையில் தற்காலிகமாக பணியமர்த்த அனுமதி.**

மண்டலம்-4, கோட்டம்-34 முதல் 48 வரை உள்ள வார்டுகளில் துப்புரவு பணியினை மேற்கொள்வதற்கு தெருக்களில் சுத்தம் செய்வதும், குப்பைகளை அகற்றுவது மற்றும் இதர பணிகளுக்காக 2011-ஆம் ஆண்டு இவ்வார்டுகளில் உள்ள பொது மக்கள் தொகையினை கணக்கிட்டு மற்றும் இதர முக்கியமான அலுவலகங்களை கணக்கில் கொண்டு தினந்தோறும் உற்பத்தியாகும் குப்பைகளை அகற்றுவதற்கு மொத்தம் 1714 பணியாளர்கள் என்று திடக்கழிவு மேலாண்மை துறையின் மூலம் வரையறுக்கப்பட்டது.

மண்டலம்-4ற்கு கூடுதலாக தேவைப்பட்ட 820 தற்காலிக துப்புரவு பணியாளர்களை மாமன்ற அனுமதி பெற்று 01.04.2020 அன்று முதல் ஒரு வருட காலத்திற்கு 31.03.2021 வரை பணி செய்ய பணியமர்த்தப்பட்டார்கள். இந்த ஆணை 31.03.2021 அன்று காலாவதியாகிறது. மண்டலம்-4ல் துப்புரவு பணி மேற்கொள்ள 828 நிரந்தர பணியாளர்கள் பணியாற்றி வந்தனர் மற்றும் 820 தற்காலிக பணியாளர்கள் மன்ற தீர்மான எண்.457/2016, நாள்.22.08.2016ன்படி பணியாற்றி வருகின்றனர்.

இந்நிலையில் தற்போது 48 நிரந்தர பணியாளர்கள் 31.12.2020 வரையிலான நாட்களில் பணி ஒய்வு பெற்றுள்ளனர் மற்றும் 19 பணியாளர்கள் இறந்து விட்டனர். மேலும் பணியிடமாற்றம் மற்றும் பதவி உயர்வின் மூலம் இதர பணியியாளர்களின் பணியிடங்களும் ஆக மொத்தம் 67 பணியிடங்கள் காலியாக உள்ளது.

மேலும், திடக்கழிவு மேலாண்மை துறை அவர்கள் மண்டலம் – 4, வார்டு- 34 முதல் 48 வரையுள்ள பகுதிகளில் உள்ள பொதுக்கழிப்பிடங்கள் பராமரிப்பு பணிக்காக 38 சுலாப் பணியாளர்களை NULM திட்டத்தின் கீழ் துப்புரவு பணியில் சேர்த்துகொள்ள ஆணையர் மற்றும் சிறப்பு அதிகாரி அவர்கள் 13.06.2020 அன்று ஒப்புதல் வழங்கியுள்ளார்.

மண்டலம்-4ஐ சார்ந்த பகுதிகள் சென்னையின் பழமை வாய்ந்த பெரம்பூர், ஆர்.கே.நகர், வியாசர்பாடி மற்றும் இராயபுரம் போன்ற முக்கிய பகுதிகளை உள்ளடக்கியது ஆகும். மேலும், திருவொற்றியூர் நெடுஞ்சாலை, தண்டையார்பேட்டை நெடுஞ்சாலை ஆகிய நெடுஞ்சாலைகளை உள்ளடக்கிய 35.5கி.மீ நீளமுள்ள 49 பேருந்து சாலைகள் மற்றும் 393.65கி.மீ நீளமுள்ள 2,846 உட்புறச் சாலைகளை பெருநகர சென்னை மாநகராட்சியின் பணியாளர்களைக் கொண்டு தனியாக தினமும் துப்புரவு பணிகளை மேற்கொள்ள வேண்டும். இது தவிர பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-4க்குட்பட்ட பகுதிகளில் அரசு சின்ன ஸ்டான்லி மருத்துவமனை, தண்டையார்பேட்டை ரயில் நிலையம், முல்லைநகர் பேருந்து நிலையம், காசிமேடு சுடுகாடு, முல்லை நகர் சுடுகாடு, சீதாராம் நகர் சுடுகாடு, பூங்காக்கள், விளையாட்டு திடல், ஓட்டல்கள், குடிசை மாற்று வாரிய குடியிருப்புகள் மேலும் பெருநகர சென்னை மாநகராட்சியில் இலவச பொதுக் கழிப்பிடங்கள் (சுலாப்) மற்றும் மக்கும் குப்பை, மக்காகத குப்பைகளை சேகரித்து தரம் பிரிக்கும் பணி ஆகியவற்றை சீரிய முறையில் சுத்தமாக பராமரித்திட வேண்டும். மேற்கண்ட பகுதிகளில் பொது மக்கள் அதிகமாக வசிப்பதாலும் வந்து செல்வதாலும் குப்பைகள் அதிக அளவில் அகற்ற வேண்டி உள்ளது. இந்நிலையில் தற்போதுள்ள 767 நிரந்தர பணியாளர்கள் மற்றும் 777 NULM பணியாளர்களை மட்டுமே கொண்டு துப்புரவு பணிய செவ்வனே செய்ய இயலாத நிலை இருப்பதால் ஒப்பளிக்கப்பட்ட துப்புரவு பணியாளர்கள் எண்ணிக்கை மட்டும் எட்டும் வகையில் 947 தற்காலிக துப்புரவு பணியாளர்களை தேசிய நகர்ப்புற வாழ்வாதார அண்டை வீட்டு குழுக்களின் (NULM) மூலம் பணியமர்த்திக் கொள்ளலாம் என கருதப்படுகிறது.

இப்பணியின் அவசரம் மற்றும் அவசியம் கருதி இப்பணி தொய்வில்லாமல் நடைபெற வேண்டி உள்ளதால் (01.04.2021 முதல் 31.03.2022 வரை) ஒரு ஆண்டு காலத்திற்கு 947 தற்காலிக துப்புரவு பணியாளர்கள் தேசிய நகர்புற வாழ்வாதார அண்டை வீட்டுக் குழுக்களின் (NULM) மூலம் பணியமர்த்த சிறப்பு அதிகாரி அவர்களின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

**ம.அ.4.ந.க.எண்.சி2 / 0117/ 2020**

**துப்புரவு பணியாளர் தேவைப்பட்டியல் கணக்கீடு :-**

ஆணையர் மற்றும் துணை ஆணையர் அவர்களால் ஒப்பளிக்கப்பட்ட வார்டு வாரியான தூய்மை பணியாளர்கள் எண்ணிக்கை பட்டியல்

| Sl. No | Ward | Total Complement | Permanent Physical (A) | Nulm Employees (B) | Sulab (Pc) (C) | Total Complement - (A) , (B) , (C) = Vacant | Total Requirement |
|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
| 1 | 34 | 165 | 36 | 93 | - | 36 | 129 |
| 2 | 35 | 175 | 65 | 81 | - | 29 | 110 |
| 3 | 36 | 150 | 38 | 94 | - | 18 | 112 |
| 4 | 37 | 158 | 33 | 108 | - | 17 | 125 |
| 5 | 38 | 111 | 53 | 49 | 2 | 7 | 58 |
| 6 | 39 | 87 | 45 | 33 | 1 | 8 | 42 |
| 7 | 40 | 93 | 56 | 28 | 2 | 7 | 37 |
| 8 | 41 | 103 | 85 | 13 | 5 | - | 18 |
| 9 | 42 | 68 | 59 | 7 | 2 | - | 9 |
| 10 | 43 | 103 | 41 | 48 | 10 | 4 | 62 |
| 11 | 44 | 86 | 31 | 55 | - | - | 55 |
| 12 | 45 | 105 | 39 | 61 | 5 | - | 66 |
| 13 | 46 | 74 | 24 | 49 | - | 1 | 50 |
| 14 | 47 | 88 | 52 | 27 | 9 | - | 36 |
| 15 | 48 | 84 | 80 | 2 | 2 | - | 4 |
| 16 | KDG | 64 | 30 | 29 | - | 5 | 34 |
| TOTAL | | 1714 | 767 | 777 | 38 | 132 | 947 |

1. அனுமதிக்கப்பட்ட மொத்த துப்புரவு பணியாளர்கள் = 1714
2. தற்போதுள்ள நிரந்தர துப்புரவு பணியாளர்கள் = 767
3. தேவைப்படும் தற்காலிக துப்புரவு பணியாளர்கள் (1714-767) = 947

**ஆக மொத்தம் = 947**

தற்காலிக பணியாளர்களுக்கு சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்கள் சி2/7393/2019, நாள்:- 07.07.2020 அன்று வெளியிடப்பட்ட தற்காலிக பணியாளர்களுக்கு ஊதிய பட்டியலில் துப்பரவு பணி மேற்கொள்ளும் பணியாளர்களுக்கு ரூ.391/- என நாள் ஒன்றிற்கு குறைந்த பட்ச ஊதியமாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இதையேற்று 947 பணியாளர்களுக்கு நாள் ஒன்றிற்கு 391/- வீதம் 365 நாட்களுக்கு ரூ. 13,51,51,105/- தேவைப்படுகிறது.

மேலும், மண்டலம்-4ல் பணிபுரியும் தற்காலிக துப்புரவு பணியாளர்களுக்கு (NULM) நலப்பொருட்கள் வாங்கி வழங்குவதற்கு மன்றத்தீர்மானம் எண்.304/2020 பெறப்பட்ட பின்னர் ஒப்பந்தம் மூலம் பெறுவதற்கு வட்டார துணை ஆணையர் (வடக்கு) அவர்களின் ஆணை பெற்று பின்னர் நலப்பொருட்கள் பெறப்பட்டுள்ளது. அவ்வாறு பெறப்பட்டுள்ள நலப்பொருட்களை வார்டு வரியாக வழங்கப்பட்டு பணியாளர்களுக்கு வழங்கப்படுகிறது. தற்பொழுது ஒரு மாதத்திற்கு தேவையான நலப்பொருட்கள் கையிருப்பாக உள்ளது.

1. ஒளிரும் ஆடை - 6 எண்ணிக்கை (60 நாட்களுக்கு ஒன்று) = 947× 6 × 150 = ரூ. 8,52,300/-
2. கையுறை - 36 எண்ணிக்கை (10 நாட்களுக்கு ஒன்று) = 947 ×36× 20 =ரூ.6,81,840/-
3. முக கவசம் (One time use) - 365 எண்ணிக்கை (ஒரு நாளைக்கு ஒன்று) = 947 ×365× 6 = ரூ. 20,73,930/-

**மொத்தத் தொகை ரூ. 36,08,070/-**

**ம.அ.4.ந.க.எண்.சி2 / 0117/ 2020**

எனவே,

1) மண்டலம்-4, கோட்டம்-34 முதல் 48 வரை மேற்கண்ட கணக்கின்படி ஊதியத் தொகை ரூ.13,51,51,105/- மற்றும் இப்பணியாளருக்கு ஒரு ஆண்டிற்கு நலப்பொருட்கள் பெறுவதற்கு ரூ.36,08,070/- மொத்தம் தொகை ரூ.13,87,59,175/- 2021-22 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீடான தலைப்பு எண்.40-41-03 Payment to Casual Staff Conservancy Works கணக்கு குறியீடு210-100-601 என்ற தலைப்பில் பட்டியை தீர்வு செய்வதற்கும்,
2) மேற்கண்ட 947 தற்காலிக பணியாளர்களை தேசிய நகர்புற வாழ்வாதார அண்டை வீட்டு குழுக்கள் (NULM) மூலம் பணியமர்த்திக்கொள்ளவும்,
3) தேவைப்படும் பணியாளர்களை தேசிய நகர்புற வாழ்வாதார அண்டை வீட்டு குழு (NULM) மூலம் மண்டல அலுவலர்-4 அவர்கள் மூலமாக பணியாமர்த்திக்கொள்ளவும்,
4) நிதி ஆலோசகர் மூலமாக ரூ.13,87,59,175/- நிதி ஒதுக்கீடு செய்ய அனுமதி வேண்டியும்,

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 29.03.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.**

********

ம.அ.1நக.எண்பி1/0540/2021

**தீர்மானஎண்.408/2021** **நாள்:31-03-2021**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-1 வார்டு 1 முதல் 14 வரை உள்ள கோட்டங்கள் மற்றும் மண்டல அலுவலகத்தில் பணிபுரிய தொழில்நுட்ப உதவியாளர்கள் - தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கத்தின் (NULM) கீழ் 01.03.2021 முதல் 31.05.2021 வரை மூன்று மாத காலத்திற்கு 18 தற்காலிக பணியாளர்களை பணி அமர்த்தி பணிகளை மேற்கொள்ள அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-1, பகுதி-1,2 (ம) 3 ,வார்டு 1 முதல் 14 வரை உள்ளடங்கிய கோட்டங்களாகும். இப்பகுதிகள் 26.69 ச.கி.மீ பரப்பளவு உள்ளடங்கியது ஆகும். வார்டு 1 முதல் 14 வரை உள்ள பகுதிகள் மொத்த சாலைகள் 1498 இதில் குடியிருப்பு வீடுகளின் எண்ணிக்கை 74,684 ஆகும். சென்னை பெருநகர வளர்ச்சி திட்டத்தின் கீழ் 25.10.2011ல் திருவொற்றியூர் மற்றும் கத்திவாக்கம் நகராட்சிகள் பெருநகர சென்னை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டது.

மண்டலம்-1ல் 215.94 கி.மீ .நீளமுள்ள 1498 உட்புறச்சாலைகள், 6 பேருந்து சாலைகள், மேலும் 4 தேசிய நெடுஞ்சாலைகளை கொண்ட 12 இளநிலை / உதவி பொறியாளர்களால் பராமரிக்கப்பட்டு வருகிறது. இதை தவிர பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-1 வார்டு பொறியாளர்கள், 77 அங்கன்வாடிகள், 25 அம்மா உணவங்கள், 60 பொது கழிப்பிடங்கள், 23 சென்னை பள்ளிகள், 7 மருத்துவமனைகள், 6 மயானபூமி, 59 கி.மீ.கொண்ட மழைநீர் வடிகால்வாயும், 54 கி.மீ. உட்புறப்பக்க கால்வாயும், 3 மேம்பாலங்கள் பராமரித்து வருகின்றனர். இதை தவிர பெருநகர சென்னை மாநகராட்சி விதி மீறி கட்டப்பட்டுவரும் கட்டிடங்களுக்கு உரிய தாக்கீது வழங்கியும், பெருநகர சென்னை மாநகராட்சி இடத்தில் ஆக்கிரமிப்புகளை அகற்றியும், ஆக்கிரமிப்பு ஏற்படாத வண்ணம் பாதுகாத்து வருகின்றனர். சாலையில் விதிமீறி கொட்டிய கட்டிட கழிவுகளுக்கு தண்டக்கட்டணம் வசூலிக்கப்பட்டும் வருகிறது.

மண்டலம்-1 கோட்டம் 1 முதல் 14 வரை உள்ள பகுதிகளில் ஒப்ப பணிகளுக்கு மதிப்பீடு தயார் செய்தல், கணினியில் பதிவேற்றம் செய்தல், நகரமைப்பு பிரிவில் கட்டிடம் தொடர்பான பதிவுகள் ((Building plan permission) மழை மற்றும் புயல் போன்ற பேரிடர் காலங்களில் தினசரி அறிக்கைகள் அனுப்புதல், ஆய்வு கூட்டங்களுக்கு அறிக்கை தயாரித்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு தொய்வு இல்லாமல் பணிகள் நடைபெறவும் போதிய பணியாளர்கள் இல்லாமல் உள்ளது.

அதன்பொருட்டு வார்டு எண் 1 முதல் 14 வரை உள்ள கோட்டங்களுக்கு இளநிலை / உதவிபொறியாளர்களுக்கு உதவிட தொழில்நுட்ப உதவியாளர்கள் பகுதி அலுவலகங்கள் 1,2 (ம) 3க்கு மற்றும் மண்டல அலுவலகத்தில் பணிபுரிய அவசியம் தேவைப்படுகிறது.

மண்டலம் 1ல் வார்டு எண் 1 முதல் 14 வரையிலான கோட்டங்கள், பகுதி அலுவலகங்கள் 1,2,3 மற்றும் மண்டல அலுவலகத்தில் போதிய அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் பணியமர்த்தப்படாததால் தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் (NULM) கீழ் தற்காலிக பணியாளர்கள் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில் தற்போது ENVRO Solution தனியார் வசம் துப்புரவு பணி ஒப்படைக்கப்பட்டுள்ளது. தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் (NULM) கீழ் பணிபுரிந்து வந்த அனைத்து பணியாளர்களும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதால் மீண்டும் இப்பணியாளர்களை பணியமர்த்தி அலுவலக பணிகள் தடையின்றி நடைபெற வேண்டியது அவசியமாகிறது.

உதவி செயற்பொறியாளர்கள் 25.01.2021, 27.01.2021 மற்றும் 09.02.2021 நாளிட்ட குறிப்பில் கோட்டம் 1 முதல் 14 வரையிலான பகுதிகளில் அனைத்து விதமான பணிகள் தொய்வு இல்லாமல் நடைபெற தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கத்தின் (NULM) கீழ் BE Civil & Diploma Civil முடித்தவர்கள் பகுதி 1,2 (ம) 3க்கு மற்றும் மண்டல அலுவலகத்தில் தற்காலிக பணியாளர்களாக பணியமர்த்திட ஆவண செய்யுமாறு கடிதம் அளித்துள்ளார்கள்.

சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களின் 07.07.2020 நாளிட்ட செயல்முறை ஆணையில் தொழில் நுட்ப உதவியாளர்கள் (BE Civil & Diploma Civil முடித்தவர்கள்) தர ஊதியம் பற்றிய விவரங்கள் குறிப்பிடப்படாமல் உள்ளது.

தமிழ்நாடு அரசு பொதுப்பணித்துறை தலைமை பொறியாளர் அவர்களின் 20.04.2020 நாளிட்ட செயல்முறை ஆணையில் வெளியிடப்பட்டுள்ள தரப்பட்டியல் விவரங்களின் அடிப்படையில் கீழ்வருமாறு

ம.அ.1.ந.க.எண்பி1/ 0540/ 2021

| S.No | Sch.Item No | Discription of Labour | Unit/ per day | No of Labours | Basic Rate Opproved for the Year 2020-21 (w.e.f. 20.04.2020) | Total Amt Rs |
|---|---|---|---|---|---|---|
| 1 | 76A | Tech. Asst (Grade-1) (B.E Passed) | Day | 9 | 937.00 (937X9x90=758970) | 758970.00 |
| 2 | 76B | Technical Asst. Grade-II (Diploma inEngg.Passed / B.E Failed/ Degree in Geology for Ground Water Works) | Day | 9 | 844.00 (844x9x90=683640) | 683640.00 |
| | Total | | | | | 1442610.00 |

மேலே பட்டியலில் குறிப்பிட்டுள்ளவாறு தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் (NULM) கீழ் தற்காலிக தொழில்நுட்ப பணியாளர்கள் மூலம் பணிகள் மேற்கொள்ள அவசியம் தேவைப்படுகிறது.

எனவே,

1) மண்டலம்-1 பகுதி-1,2 (ம) 3 - வார்டு 1 முதல் 14 வரை உள்ள கோட்டங்கள் மற்றும் மண்டல அலுவலகத்தில் பணிபுரிய தொழில்நுட்ப உதவியாளர்கள் தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கத்தின் (NULM) கீழ் 01.03.2021 முதல் 31.05.2021 வரை மூன்று மாத காலத்திற்கு 18 தற்காலிக தொழில்நுட்ப உதவியாளர்கள் பணி அமர்த்தி பணிகளை மேற்கொள்ள நிர்வாக அனுமதியும் மற்றும் இப்பணிக்கு தேவைப்படும் நிதி ரூ 14.50 இலட்சத்திற்கு ஆணை வேண்டியும்,

| | | |
|---|---|---|
| 1. | Tech. Asst (Grade-1) (B.E Passed) நாள் ஒன்றுக்கு ரூ.937 வீதம் 9 நபர்களுக்கு (937X9x90=758970.00) | = 758970.00 |
| 2. | Technical Asst. Grade-II (Diploma inEngg.Passed / B.E Failed/ Degree in Geology for Ground Water Works) 9 நபர்களுக்கு (844x9x90=683640.00) | = 683640.00 |
| | மொத்தம் | = 1442610.00 |

2) இப்பணிக்கு பிரிவு எண் 40-41-03, கணக்கு குறியீட்டு எண் 230-150-100 ரூ.14.50 இலட்சத்திற்கு பட்டி தீர்வு செய்திட ஆணை வேண்டியும்,

3) இப்பணியினை தொடர்ந்து மேற்கொண்டு வருவதால் 01.03.2021 முதல் பின்னேற்பு ஆணை வேண்டியும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 29.03.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.**

********

**சு.து.ந.க.எண். பி2/ 2431/ 2021**

**தீர்மானஎண்.409/2021** **நாள்:31-03-2021**

**பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுசுகாதாரத்துறை - நோவல் கொரோனா நோய் தடுப்பு பணி - பேரிடர் பணிகள் மேற்கொள்ளவும் - அவசர அவசியம் கருதி 1 முதல் 15 வரையிலான மண்டலங்களில் 6,002 கொரோனா தடுப்பு களபணியாளர்களை மூன்று மாத காலத்திற்கு மண்டல அலுவலர் மூலம் அந்தந்த மண்டலத்திலேயே ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தியமைக்கு பின்னேற்பு அனுமதி**

நோவல் கொரோனா வைரஸ் காய்ச்சல் (COVID-19) உலகமெங்கும் 200 க்கும் மேற்பட்ட நாடுகளில் பரவியுள்ள நிலையில் உலக சுகாதார நிறுவனம் (WHO) உலகமெங்கும் அவசர நிலையினை (Public Health Emergency of International Concern (PHEIC)) பிரகடனப்படுத்தியுள்ளது. மேலும் கட்டுப்படுத்தக்கூடிய தொற்று நோயாகவும் (Controllable Pandemic) அறிவித்துள்ளது. நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை (H2) துறையின் அரசாணை (Ms) எண்.161, நாள்.27.03.2020ல் நோவல் கொரோனா வைரஸ் காய்ச்சல் (COVID-19) அறிவிக்கப்பட்ட நோயாக (Notified disease) அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழக அரசின் உத்திரவின்படி பெருநகர சென்னை மாநகராட்சி, பொது சுகாதாரத்துறை சார்பில் நோவல் கொரோனா வைரஸ் காய்ச்சல் (COVID - 19) பரவாமல் தடுக்க பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. படிப்படியாக குறைந்து வந்த இந்த நோயின் தாக்கம் தற்போது அதிகரிக்க தொடங்கியுள்ளது. இதன் காரணமாக பல்வேறு தடுப்பு நடவடிக்கைகள் பெருநகர சென்னை மாநகராட்சியால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கோவிட் நோய் தடுப்பு பணிகளுக்கென 100-150 வீடுகளுக்கு 1 பணியாளர் வீதம் நியமிக்கப்பட்டு அங்குள்ளவர்களின் உடல்நலம் தினசரி கண்காணிக்கப்பட்டது. இதற்கென 12,000 பணியாளர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். இவர்களை 750 மேற்பார்வையாளர்கள் மற்றும் பல்வேறு நிலை மாநகராட்சி அலுவலர்களும் மேற்பார்வை செய்து வந்தனர். இதன் மூலம் 10.00 இலட்சம் வீடுகள் தினசரி கண்காணிக்கப்பட்டு வந்தன. இந்த பணியாளர்களின் பணிக்காலமானது ஜனவரி 2021ல் முடிவடைந்து விட்டது.

சிறப்பு அதிகாரி/மன்ற தீர்மான எண்.395/2021, நாள்.16.03.2021ன்படி மேற்கண்ட கொசு ஒழிப்பு பணியாளர்களை கொண்டு கொசு ஒழிப்பு பணிகளுடன் கூடுதலாக கோவிட் நோய் தடுப்பு பணிகளையும் மேற்கொள்ள ஆணை பெறப்பட்டுள்ளது.

தற்போது கோவிட் தொற்று நோயின் தாக்கம் அதிகரித்து வரும் நிலையில், கோவிட் நோய் தடுப்பு பணிகளுக்கென 100-150 வீடுகளுக்கு ஒரு கொரோனா தடுப்பு கள பணியாளர் வீதம் பணியமர்த்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்கென கீழ்க்கண்ட அளவில் பணியாளர்கள் 1 முதல் 15 மண்டலங்களில் முதற்கட்டமாக பணியமர்த்த மண்டல நல அலுவலர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை எண்.1**

| S. No. | Zone | Number of FSW required |
|---|---|---|
| 1 | 1 | 186 |
| 2 | 2 | 129 |
| 3 | 3 | 315 |
| 4 | 4 | 590 |
| 5 | 5 | 641 |
| 6 | 6 | 501 |
| 7 | 7 | 368 |
| 8 | 8 | 500 |
| 9 | 9 | 480 |
| 10 | 10 | 476 |
| 11 | 11 | 249 |
| 12 | 12 | 333 |
| 13 | 13 | 600 |
| 14 | 14 | 325 |
| 15 | 15 | 309 |
| **TOTAL** | | **6,002** |

**சு.து.ந.க.எண். பி2/ 2431/ 2021**

மேற்கண்ட அட்டவணையில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு கொரோனா நோய் தடுப்பு நடவடிக்கைக்காக மேற்கண்ட பணியாளர்களை மாதம் ரூ.15,000/- சம்பளத்தில் ஒப்பந்த அடிப்படையில் 3 மாத காலத்திற்கு பணியமர்த்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இப்பணிக்கென கீழ்க்கண்ட அளவில் செலவினம் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

**அட்டவணை எண்.2**

| S. | Zone | Number of | Salary per | Salary for 3 |
|---|---|---|---|---|
| 1 | 1 | 186 | 15000 | 83,70,000 |
| 2 | 2 | 129 | 15000 | 58,05,000 |
| 3 | 3 | 315 | 15000 | 1,41,75,000 |
| 4 | 4 | 590 | 15000 | 2,65,50,000 |
| 5 | 5 | 641 | 15000 | 2,88,45,000 |
| 6 | 6 | 501 | 15000 | 2,25,45,000 |
| 7 | 7 | 368 | 15000 | 1,65,60,000 |
| 8 | 8 | 500 | 15000 | 2,25,00,000 |
| 9 | 9 | 480 | 15000 | 2,16,00,000 |
| 10 | 10 | 476 | 15000 | 2,14,20,000 |
| 11 | 11 | 249 | 15000 | 1,12,05,000 |
| 12 | 12 | 333 | 15000 | 1,49,85,000 |
| 13 | 13 | 600 | 15000 | 2,70,00,000 |
| 14 | 14 | 325 | 15000 | 1,46,25,000 |
| 15 | 15 | 309 | 15000 | 1,39,05,000 |
| **TOTAL** | | **6,002** | | **27,00,90,000** |

நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை (H2) துறையின் அரசாணை (Ms) எண்.161, நாள்.27.03.2020 மற்றும் நிதித்துறை கடிதம் எண்.74/JS(MA)/Finance(Salaries)/2020, நாள்.01.04.2020ன்படியும், கொரோனா நோய் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தங்கள் சட்டம் 1998 பிரிவு 16-a ல் அவசர காலங்களில் செயல்பட ஒப்பம் கோரும் அலுவலருக்கு ஒப்ப விதிகளில் தளர்வு செய்து ஒப்பம் கோருவதில் இருந்து விலக்களித்து நேரடியாக கொள்முதல் செய்ய அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

Tamil Nadu Transparency in Tenders Act, 1998 Sec:16 :"Provision of Act not to apply in certain cases: The provisions of section 9 and 10 shall not apply to procurement."

(a) During natural calamities and emergencies declared by the Government;

எனவே, மேற்கண்ட சட்ட விதிகளின்படி, அவசர அவசியம் கருதியும், பொதுமக்களின் நலன் கருதியும், கோவிட் தொற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் கொரோனா தடுப்பு கள பணியாளர்களை மூன்று மாத காலத்திற்கு பணியமர்த்தலாம்.

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சி, பொது சுகாதாரத்துறையில் நோவல் கொரோனா நோய் தடுப்பு பணி பணிகளை தீவிரப்படுத்தவும், அவசர அவசியம் அட்டவணை-1ல் தெரிவிக்கப்பட்டவாறு 1 முதல் 15 மண்டலங்களில் முதற்கட்டமாக 6,002 கொரோனா தடுப்பு கள பணியாளர்களை 25.03.2021 முதல் 24.06.2021 வரையில் 3 மாத காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் சிறப்பு அதிகாரி/ மன்றத்தின் பின்னேற்பு அனுமதியினை எதிர்நோக்கி பணியமர்த்த அனுமதியும்,
2. நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை (H2) துறையின் அரசாணை (Ms) எண்.161, நாள்.27.03.2020ல் நோவல் கொரோனா வைரஸ் காய்ச்சல் (COVID-19) அறிவிக்கப்பட்ட நோயாக (Notified disease) அறிவிக்கப்பட்டுள்ள

**சு.து.ந.க.எண். பி2/ 2431/ 2021**

நிலையில் தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தங்கள் சட்டம் 1998 பிரிவு 16-aல் அவசர காலங்களில் செயல்பட ஒப்பம் கோரும் அலுவலருக்கு ஒப்ப விதிகளில் தளர்வு செய்து கொள்முதல் செய்ய அதிகாரம் அளிக்கப்பட்டதின் அடிப்படையில் ஒப்பம் கோருவதில் இருந்து விலக்களித்து நேரடியாக 6,002 கொரோனா தடுப்பு கள பணியாளர்களை 25.03.2021 முதல் 24.06.2021 வரையில் 3 மாத காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்த அனுமதிக்கும்,

3. ஏற்கெனவே இப்பணியில் ஈடுபட்டிருந்த பணியாளர்களையே முன்னுரிமை அடிப்படையில் பணியமர்த்த அனுமதிக்கும்,
4. இப்பணிக்கான 1 முதல் 15 மண்டலங்களுக்கும் தனித்தனியே, இதற்கு மொத்த நிர்வாக செலவினம் ரூ.27,00,90,000/- (ரூபாய் இருபத்தேழு கோடியே தொண்ணூறாயிரம் மட்டும்) மேற்கொள்ள அனுமதிக்கும்,
5. மாதந்தோறும் சம்பந்தப்பட்ட மண்டல நல அலுவலர்களிடம் இருந்து சான்று பெற்று மண்டல அளவில் பட்டி தீர்வு செய்ய அனுமதிக்கும்,
6. இதற்கான செலவினம் கோவிட்-19-க்கென ஒதுக்கப்பட்ட நிதியில் மண்டல அளவில் மேற்கொள்ள அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீடு செய்ய அனுமதிக்கும்,

மேற்கண்ட *1* முதல் *6* வரை உள்ள இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் பின்னேற்பு அனுமதி கோரிய ஆணையரது 26.03.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“*1* முதல் *6* வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் பின்னேற்பு அனுமதி அளிக்கப்பட்டது”.**

********